விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆவணி 13 வியாழக்கிழமை (29.08.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 253

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்தைப் பயன்படுத்துங்கள்; உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்.

# அச்சுறுத்தல் தொடர்ந்தால் தேர்தலில் இருந்து விலகுவோம்

## ஆளும் கட்சி வேட்பாளர்கள் திடீர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஆளும் கட்சி வேட்பாளர்களுக்கே துப்பாக்கி முனையில் அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது. இந்த நிலை தொடர்ந்தால் தேர்தலில் இருந்து விலகப் போவதாக ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நான்கு வேட்பாளர்கள் அறிவித்துள்ளனர். (19ஆம் பக்கம் பார்க்க)

## இராமநாதன் கைதானார்!

(யாழ்ப்பாணம்)

ஆளும் கட்சி வேட்பாளரான அங்கஜனின் தந்தையான இராமநாதனை யாழ்ப்பாணம் பொலிஸார் நேற்று மாலை கைது செய்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களான சர்வானந்தன் மற்றும் அங்கஜனுக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டை அடுத்து சாவகச்சேரி பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் இராமநாதனை பொலிஸார் கைது செய்துள்ளனர். (செ-6)

## நாடு திரும்பினார் ஜனாதிபதி

(கொழும்பு)

கிழக்கு ஐரோப்பிய நாடான பெலாரஸ்'க்கு 3 நாள் உத்தியோக பூரவ விஜயத்தை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுஅதிகாலை 5.30 மணிக்கு நாடுதிரும் (20ஆம் பக்கம் பார்க்க)

## நவிபிள்ளையை முடிக்கத் தயார்

### - மேர்வின் சில்வா

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள நவநீதம்பிள்ளைக்கு நாட்டை சுற்றிக்காட்டுவதற்கு தான் தயாரென்றும் இலங்கையின் வரலாற்றை கற்பித்துக்கொடுத்து அவரை திருமணம் (19ஆம் பக்கம் பார்க்க)

## என்ர பிள்ளையும் இப்ப எலும்புக்கூடா மாறியிருப்பானோ!

### வயோதிபத் தாய் கதறல்

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டியில் மனித எலும்புக் கூடுகள் எல்லாம் வருதாமே பத்திரிகையில் போட்டிருக்கிறாங்கள் ஐயோ! யார் பெற்ற பிள்ளைகளோ தெரியல்ல, எங்களுடைய பிள்ளைகளும் இப்படி எங்கு கிடக்கின்றதுகளோ தெரியல எனக் கூறியவாறு கண்ணீர் விட்டுக் கதறி அழுதார் வயோதிபத் தாயொருவர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் வருகையை முன்னிட்டு யாழ்.பொது நூலகத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற காணாமல் போனவர்களின் உறவினர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த வயோதிபத் தாயொருவரே இவ்வாறு கதறியழுதார்.

யாழ்.அல்லைப்பிட்டி பகுதியில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் மனித எலும்புக் கூடுகள் வெளிப்பட்டிருந்தது தொடர்பாக பத்திரிகைகளில் செய்திகள் வெளியாயிருந்தன.

இந்நிலையில் அங்கு வெளிப்படும் மனித எலும்புக் கூடுகள் யாருடையது என்பது கண்டறிப்படாது உள்ளமை சர்ச்சையை, ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 2006-ம் ஆண்டு காலப் பகுதியில் குறித்த பகுதியில் பாரிய யுத்தம் (19ஆம் பக்கம் பார்க்க)

## இ.போ.ச. பேருந்துடன் மோ.சைக்கிள் விபத்து

(யாழ்ப்பாணம்)

பேருந்தும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் தந்தையும் மகனும் உயிரிழந்த பரிதாப சம்பவம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

யாழ்.வல்வெட்டித்துறை உடுப்பிட்டி பகுதியில் நேற்றுமுன்தினம் முற்பகல் இடம்பெற்ற மேற்படி விபத்தில் தந்தை உயிரிழந்த நிலையில், மகன் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந் நிலையில் நேற்றையதினம அதிகாலை மகனும் உயிர் இழந்துள்ளார்.

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தும் மோட்டார் சைக்கிளும் மோதிக் கொண்டதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த (19ஆம் பக்கம் பார்க்க)

## வேட்பாளர் மீது தாக்குதல்!

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா மக்கள் கட்சியின் வேட்பாளர் மீது இனந்தெரியாத நபர்கள் வாகனத்தால் மோதி தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் சிறிலங்கா மக்கள் கட்சி சார்பில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும் விக்னராஜா விஜயராஜ் என்ற வேட்பாளர் மீதே இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த 25ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இரவு 10 மணியளவில் யாழ்ப்பாணம் புங்கன்குளம் சந்திப்பகுதியில் வைத்து இவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

ஐக்கிய தேசியக் கட்சி



தியாகராஜா துவாரகேஸ்வரன்
வடமாகாண சபை
முதலமைச்சர் வேட்பாளரும்
முதன்மை வேட்பாளரும்



X 5

## பகிரங்க விவாதத்திற்கு வாருங்கள் விக்னேஸ்வரனுக்கு தவராசா அழைப்பு

(யாழ்ப்பாணம்)

நமது பாதை நாளைய தலைமுறைக்கு சரியான திசையைக் காட்ட வேண்டும். யார் வெற்றி பெற்றாலும் அதன் பலாபலன்களை அனுபவிப்பவர்கள் நமது மக்களாகவே இருக்க வேண்டும்.

அடுத்தவரை இழிவுபடுத்துவதும் அவர்கள் மீது சேறுபூசுவதும் அவதூறு சுமத்துவதும் அரசியலின் வெவ்வேறு எவருக்கும் இலகுவாக செய்து விட முடிகின்றது. இந்த நாகரிகமற்ற போக்கை நாம் மாற்றிமைக்க முடியும். இவ்வாறு ஐ.ம.சு. முன்னணியின் முதன்மை வேட்பாளர் எஸ்.தவராசா, கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் சி.வி விக்னேஸ்வரனுக்கு பகிரங்க அழைப்பொன்றை விடுத்துள்ளார். அவ்வழைப்பில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

சக வேட்பாளர் என்பதற்கு அப்பால நீதிபதி என்ற மரியாதைக்குரியவராக நீங்கள் இருந்திருக்கின்றீர்கள. அந்த மரியாதை காரணமாகவும் உங்கள் மீதுள்ள நம்பிக்கை காரணமாகவும் ஓர் அழைப்பை விடுகின்றேன். (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீக சக்தியை பயன்படுத்தி நவநீதம்பிள்ளையை தடுப்போம்

## தேசப்பற்றுள்ள பிக்குகள் முன்னணி பேச்சு

(கொழும்பு)

இலங்கையில் போர் நடைபெற்ற காலத்தில் ஆன்மீக சக்தியை பயன்படுத்தி படையினருக்கு ஆசீர்வாதம் வழங்கியதாகவும் ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் நோக்கம் நிறைவேறுவதை தடுக்க இந்த சக்தியை பயன்படுத்த போவதாகவும் தேசப்பற்றுள்ள பிக்குகள் முன்னணியின் செயலாளர் பெங்க முவே நாலக தேரர் தெரிவித்தார்.

நவநீதம்பிள்ளை மேற்குலக நாடுகளின் நிகழ்ச்சிநிரல்களுக்கு அமைய செயற்படுவதோடு புலம்பெயர் தமிழர்களின் நோக்கத்தை நிறைவேற்றும் பெண்மணி என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனை குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நவநீதம்பிள்ளை என்பவர் இலங்கைக்கு எதிராக செயற்படுபவர். இதனை இலங்கை மக்கள் அறிந்திருக்க வேண்டியது முக்கியமானது.

மனித உரிமைகள் தொடர்பில் அமெரிக்க போன்ற நாடுகளுக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுப்பதில்லை என நவநீதப்பிள்ளையிடம் கேள்வி எழுப்புகிறோம். இலங்கையில் போர் நடைபெறவில்லை. பயங்கரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை மட்டுமே எடுக்கப்பட்டது.

நாட்டுக்கு எதிரானவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி விட்டுச் செல்லவே நவநீதம்பிள்ளை இலங்கை வந்துள்ளார் என்றார். (செ-11)

# தேர்தல் வன்முறை - 239

(கொழும்பு)

எதிர்வரும் செப்ரம்பர் மாதம் இடம்பெறவுள்ள மூன்று மாகாணசபை தேர்தல் தொடர்பில் இதுவரை 239 வன்முறைச்சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

இவ் அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இது தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய மாகாணத்தில் அதிகப்படியாக 114 முறைப்பாடுகளும் வடமேல் மாகாணத்தில் 85 முறைப்பாடுகளும் வட மாகாணத்தில் 58 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. (செ-11)

# ஐ.நா. ஆணையாளரிடம் மறைப்பதற்கு ஒன்றுமில்லை

## இலங்கைப் பயணம் திருப்தி அளிக்கும் - அரசு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் மறைப்பதற்கு எதுவுமில்லை எனவும் அவரது இலங்கை விஜயத்தில் முழுமையான வெளிப்படைதன்மையுடன் செயற்படுவதாகவும் இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மனித உரிமை ஆணையாளர், இலங்கை வருகையின் போது கோரிய அனைத்தும் அவருக்கு கொடுக்கப்பட்டுள்ளது எனவும் அவரின் இலங்கைக்கான பயணம், அவரது கண்ணை திறக்கும் என அரசாங்கம் நம்புவதாகவும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றும் போது அவர் இதனை கூறினார்.

அரசாங்கத்தின் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. ஆனால் அரசாங்கம் கதிகலங்கவில்லை.

நாட்டின் நிலைமைகளை நேரில் பார்த்து அறிந்து கொண்டு அதனடிப்படையில் ஒரு முடிவுக்கு வரும் சந்தர்ப்பம் நவநீதம்பிள்ளைக்கு கிடைத்துள்ளது.

இலங்கை விஜயத்தின் பின்னர் நியாயமான நடுநிலையான அறிக்கையை அவர் ஜெனிவா மனித உரிமை பேரவையில் தாக்கல் செய்வார் என்று அரசாங்கம் நம்பிக்கை கொண்டுள்ளது என அமைச்சர் நிமால் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் இங்கு வந்துள்ள நவநீதம் பிள்ளை, நேற்றுமுன்தினம் வட பகுதிக்கும நேற்று கிழக்கு பகுதிக்கும் பயணம் மேற்கொண்டார்.

இன்றைய தினமும், நாளையும் அவர் கொழும்பில் சந்திப்புகளில் கலந்து கொள்ள உள்ளார். (செ-11)


தற்போது யாழ் நகரில்...



கட்டிட நிர்மாணத் துறையில் மாத வருமானம் ரூபா 150,000/= இனை உறுதி செய்யும் 18 மாத பாட நெறி

BTEC HND in
- Quantity Surveying
- Civil Engineering

Leading to BSc (Hons) From UK

September Intake Now on

**Why** Choose **BCAS for QS & Civil Engineering ?**

- நவீன கற்கை வசதிகளுடன் கூடிய பிரத்தயேக QS, Civil Engineering கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாடநெறி
- பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க QS, Civil Engineering நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்
- முன்னணி நிறுவனங்களினூடாக வழங்கப்படும் நடைமுறைப்பயிற்சிகள்
- RICS, CIOB, IQSL போன்றவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்
- £4500 வரை பிரித்தானிய Top-Up கற்கைநெறிகளிற்கான புலமைப்பரிசில்
- தற்போது இலங்கையிலேயே பட்டப் படிப்பை (Top-Up) பூர்த்தி செய்யும் அரிய வாய்ப்பினை BCAS Campus உங்களுக்கு வழங்குகின்றது
- கட்டாரில் தொழில் புரிந்துகொண்டே BCAS Qatar Centre இல் Top-Up கற்கைநெறியை பூர்த்தி செய்யும் வாய்ப்பு
- 14 வருட நம்பகமும் சிறப்பும் மிக்க உயர் 'கல்விச்சேவை

Macro Ads

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
www.bcas.lk

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131

Colombo : 077 482 9765
Kandy : 081 222 4737
Batticaloa : 077 766 6432
Kurunegala : 077 387 4747



**CAMBRIDGE ENGLISH**



UNIVERSITY OF CAMBRIDGE

After A/L

**August** மாதத்தில் A/L பரீட்சைக்குத் தோற்றி மருத்துவ பொறியியல், விவசாய, விஞ்ஞான முகாமைத்துவம் போன்ற பாட நெறிகளை பல்கலைக்கழகங்களில் ஆங்கில மொழி மூலம் கற்க இருக்கும் மாணவர்கள் தங்கள் ஆங்கில அறிவைக் கூட்டிக் கொள்ளவும், பல்கலைக்கழகங்களில் எந்தவித சிரமுமின்றி விரிவுரைகளைக் கேட்கவும், ஒப்படைகளை எழுதவும் தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ள அரிய சந்தர்ப்பம்.

உடனடியாக BRITISH Council இன் ஆதரவுடன் 02.09.2013 இல் ஆரம்பிக்கவிருக்கும் Cambridge - Preliminary Engligh Test (PET) வகுப்பில் சேருங்கள்.

- இது ஓர் Intermediale B, level பரீட்சையாகும். U.Kஇல் பல கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் இதனை ஏற்றுக்கொள்கின்றன.
- நீங்கள் UK இல் திருமணம் செய்வீர்களானால் UK Border Agency அங்கீகரிக்கும் A1 பரீட்சைக்குப் பதிலாக PET Certificate இனை நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் ஒப்படைக்கமுடியும்.
- நீங்கள் IELTS பரீட்சை எடுப்பதற்கு விரும்புவீர்களானால், போதிய ஆங்கில அறிவு உங்களிடம் இல்லையேல் முதலில் PET பாடநெறியைப் பின்பற்றிய பின் IELTS வகுப்பில் சேர்ந்தால் கற்க இலகுவாக இருக்கும்

Subjects : Reading, Writing, Listening, Speaking
Exam Fee : Rs.6900/=
Exam Date : 16.11.2013 - Colombo

Cambridge First Certificate in English

*FCE is an upper intermediate level exam. It tests the ability to deal confidently with a range of written and spoken communication. FCE is the most widely taken of the general English exams, with over 250,000 candidates every year. This exam is at CEFR Level CI.*

UK யில் பெரும்பாலான பல்கலைக்கழகங்கள் IELTS இற்குப் பதிலாக FCE யினை ஏற்றுக்கொள்கின்றனர். இப்பொழுது இந்தப் பரீட்சையில் சித்தியடைந்து நீங்கள் விரும்பிய நேரத்தில் FCE Certificate ஐப் பயன்படுத்தலாம்.

Subjects : Reading; Writing ; Use of English; Listening Speaking

நீங்கள் ஆங்கிலத்தில் வாழ்நாள் முழுவதும் எழுத, வாசிக்க, பேச இந்த சர்வதேச தரம் வாய்ந்த பாடநெறி இதுவாகும்.

Course Schedule

| | | Mon,Tues,Wed,Thur | Saturday&Sunday |
|---|---|---|---|
| Duaration | : | 10 weeks | 10 weeks |
| Time | : | 8.30-10.30;10.30-12.30 | 2.00-5.00 |
| Exam fee | : | Rs.8300/= | |
| Exam Date | : | 07-12-2013 - Colombo | |

வகுப்புக்கள் 02.09.2013 இல் ஆரம்பமாகும்.

For Registration and Further details Contact

BRITISH COLLEGE OF ENGLISH
No. 192, Navalar Road, Jaffna.
(பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக)
Tel : 021 222 0384 - 077 880 3887

(சி-4417)



மனத் தளர்வா? தனிமையா?
**வாழ்க்கையில் வெறுப்பா?**
உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம். உடனே அழையுங்கள். இரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்.
(4483)
**கை கொடுக்கும் நண்பர்கள்**
**021 222 8117**



**பிள்ளையார் இன்**

சனி, ஞாயிறு தினங்களில் புஃவே (Buffet) முறையில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் வழங்கப்படும். 6 - 10 pm - 250/=

தினமும் **12 மணிமுதல் 3 மணிவரை** மிகச் சிறந்த சைவ, அசைவ உணவு வகைகள் வழங்கப்படுகின்றன.

**சைவ உணவு: 150/-** **அசைவ உணவு 180/-**

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

C-4481



**தொடர்ந்தும் மேலதிக சேவையில்...**

இலங்கையின் எப்பாகத்திற்கும் குறைந்த செலவில் உங்கள் அன்புக்குரியவர்களுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், உடுபுடைவைகள் மற்றும் எதுவித பார்சல் ஆயினும் மறுநாள் (24 மணித்தியாலயம்) உரிய முகவரிக்கு (Door to Door) ஒப்படைக்கப்படும்.

குறிப்பு: விசுவமடு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, மல்லாவி, துணுக்காய், பூநகரி ஆகிய வன்னி மாவட்டங்களுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

WESTERN UNION MONEY TRANSFER

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
(C-4480) T.P. No.:-021 222 5392


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி வழக்கு தொடர்பில் பிரதிவாதிகள் ஆட்சேபம் தெரிவிக்க காலக்கெடு

## கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டில் 2 ஆயிரத்து 184 காணி உரிமையாளர்களின் உடமையான 6 ஆயிரத்து 381 ஏக்கர் காணிகளை அரசாங்கம் பொறுப்பேற்கவுள்ளதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் தொடர்பாக ஆட்சேபம் தெரிவிக்க கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் பிரதிவாதிகளுக்கு அவகாசம் வழங்கியுள்ளது.

இதன்படி எதிர்வரும் நவம்பர் 7 ஆம் திகதி வியாழக்கிழமை வரை ஆட்சேபம் தெரிவிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் அவகாசம் வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் தமக்கு சொந்தமான காணிகளை இழந்துள்ளமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 2 ஆயிரத்து 184 ரிட் மனுக்கள் தொடர்பில் பிரதிவாதிகள் தரப்பின் ஆட்சேபனையை தெரிவிப்பதற்கு ஜூலை 10 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றம் திகதி குறித்திருந்தது.

பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை தெரிவிப்பதற்கு நீதிமன்றம் ஓகஸ்ட் மாதம் 27 ஆம் திகதியை அன்று தீர்மானித்திருந்தது. அதன்பிரகாரம் வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இம் மனுக்களில் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் மற்றும் இரண்டு அதிகாரிகளே பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இம் மனுக்கள் மீதான விசாரணையை மே மாதம் 30 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிமன்றம் மனுக்கள் மீதான விசாரணையை ஜூலை மாதம் 10 ஆம் திகதிக்கு ஒத்திவைத்ததுடன் பிரதிவாதிகளுக்கும் நோட்டீஸ் அனுப்புமாறும் அன்று உத்தரவிட்டிருந்தது.

காணிகளை இழந்தவர்களில் முதல் கட்டமாக ஆயிரத்து 474 ரிட் மனுக்களும் இரண்டாவது கட்டமாக 710 ரிட் மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன.

தமக்கு சொந்தமான 6 ஆயிரத்து 381 ஏக்கருக்கு கூடுதலான பாரம்பரிய தனியார் நிலங்களை சுவீகரிக்க அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளை எதிர்த்தே மே மாதம் 15 ஆம் திகதி புதன்கிழமை முதல் கட்டமாக ஆயிரத்து 474 ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

அந்த மனுக்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் நீதியரசர் கே.ஸ்ரீஸ்கந்தராஜா முன்னிலையில் கடந்த மே மாதம் 21 ஆம் திகதி ஆராயப்பட்டன.

ஆயிரத்து 474 ரிட் மனுக்களையும் ஏற்க வேண்டும் என்பதற்கான ஆதாரங்களை மே மாதம் 27 ஆம் திகதி திங்கட்கிழமை முன்வைக்குமாறு அன்று பணித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் அன்றைய தினத்திற்கே வழக்கையும் ஒத்திவைத்தது.

தங்களது சொந்த காணிகள் சட்ட விரோதமாக கைப்பற்றப்பட்டுள்ளதாக குறிப்பிட்டே இவர்கள் இந்த மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

அதற்கிடையில் இரண்டாம் கட்டமாக 710 ரிட் மனுக்களும் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. இந்நிலையில் காணி சுவீகரிப்பு விவகாரங்களுக்கு எதிராக 2 ஆயிரத்து 184 ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மனுக்களில் குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம் பிரச்சினைக்குரிய நிலங்கள் கிட்டத்தட்ட 25.8 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டன. இது கொழும்பு நகரின் நிலப்பகுதியின் பரப்பளவில் மூன்றிலிரண்டு பங்கிலும் கூடுதலானதாகும்.

சட்டப்படி உயர்பாதுகாப்பு வலயம் என ஒன்றும் இல்லை என்றும் மனுவில் குறிப்பிட்டப்படுள்ளது.

யுத்தம் முடிவடைந்து தாம் தமது காணிகளுக்கு சென்ற சமயம் இராணுவத்தினரால் தாம் தடுக்கப்பட்டு திருப்பியனுப்பப்பட்டதாகவும் மனுதாரர்கள் தங்களுடைய மனுக்களில் குறிப்பிட்டுள்ளனர்.

வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள காங்கேசன்துறை மேற்கு மற்றும் மத்தி, வீமன் காமம் தெற்கு, தையிட்டி தெற்கு, பலாலி தெற்கு, ஒட்டகப்புலம், வளலாய் ஆகிய கிராமங்களே சுவீகரிக்கப்பட்டுள்ளதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு படையின் தலைமையகத்தை அமைப்பதற்கு என 6 ஆயிரத்து 381 ஏக்கர் 38.97 பேர்சல் பரப்பளவுள்ள இடத்தை கைப்பற்றவுள்ளதாக காணி சுவீகரித்தல் சட்டத்தின் பிரிவு 2 கீழ் பிரகடனம் செய்யப்பட்டுள்ள அறிவிப்பு மற்றும் பலாலி மற்றும் காங்கேசன்துறை அதி உயர் பாதுகாப்பு வலயத்தை நிர்மாணிப்பதற்காக அப்பிரதேசத்தைக் கையளிப்பது பற்றிய அறிவித்தல் ஆகியவற்றிற்கு எதிராகவே இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இம் மனுக்களைத் தாக்கல் செய்துள்ள அனைவருக்கும் மேற்படி பிரதேசத்தில் குறிப்பிடும் அளவு பரப்பளவுள்ள காணிகள் இருக்கின்றன. இவர்கள் மோதல் சமயத்தில் இப்பகுதியை விட்டு வெளியேறி யுத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து தம்முடைய சொந்தக் காணிகளுக்கு வர முயற்சித்துள்ளனர்.

இதன்போது இராணுவம் இவர்களை தடுத்து விட்டது. தற்போது இராணுவம் நிலை கொண்டுள்ள இப்பாரிய பிரதேசத்தை சுற்றி கம்பி வேலி இடப்பட்டுள்ளதோடு இராணுவ வீரர்கள் இப்பிரதேசத்தைச் சுற்றி காவலிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் இப்பிரதேசத்தின் ஒரு அதி உயர் பாதுகாப்பு வலயம் என எப்போதும் பிரகடனம் செய்யப்படவில்லை என்பதோடு கடந்த 2011 ஆம் ஆண்டு அவசர கால சட்டம் நீக்கப்பட்ட நிலையில் தற்போது இப்பிரதேசத்தை அதி பாதுகாப்பு வலயம் என பிரகடனப்படுத்துவதற்கோ அல்லது ஏனைய பொது தேவைகளுக்காக இதை சுவீகரிப்பதற்கோ எந்த சட்ட அடிப்படையும் கிடையாது என்பதை மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் யாழ்ப்பாணத்தில் காணிகளை சுவீகரிக்கும் தகுதி வாய்ந்த அரச அதிகாரி மற்றும் அரச காணி அளவையியலாளர் ஆகியோரை இந்த மனுக்களில் பிரதிவாதிகளாக மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சட்டத்தரணி மோகன் பாலேந்திரனின் அறிவுறுத்தல்படி ஜனாதிபதி சட்டத்தரணி கே.கனகேஷ்வரன் மற்றும் சட்டத்தரணிகளான எம்.ஏ. சுமந்திரன், விரான் கொரேயா, லக்ஷ்மன் ஜெயக்குமார், பவானி பொன்சேகா மற்றும் நிரான் அன்கிடெல் ஆகியோர் இந்த மனுக்களை தாக்கல் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிலையிலேயே மனுக்கள் மீது பிரதிவாதிகள் ஆட்சேபங்களை தெரிவிப்பதற்காக மேன்முறையீட்டு நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியுள்ளது. (அ-2)

# அமெரிக்க தூதுவர் சோபிததேரரை சந்தித்தார்

அமெரிக்க தூதுவர் மிச்சல் ஜே சிசன், சமூக நீதிக்கான தேசிய அமைப்பின் அழைப்பாளர் மாதுலுவே சோபித தேரரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

கோட்டே நாக விஹாரைக்கு விஜயம் செய்த சிசன், சோபித தேரரை சந்தித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின் பாதக நிலைமைகளை சோபித தேரர் விளக்கியுள்ளார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையினால் மக்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் குறித்தும் தெளிவுபடுத்தியுள்ளார்.

17 ஆவது திருத்தச் சட்டத்தை மீள அமுல்படுத்துவதன் மூலம் நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த முடியும் என சோபித தேரர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# ஆழ்கடலில் மர்ம கொள்கலன்!

(கொழும்பு)

ஆழ்கடலில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டதாக கூறப்படும் மர்மமான மிகப் பெரிய கொள்கலனைக் கரைக்கு கொண்டு வரத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று இலங்கை கடற்படைப் பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

சிலாபம் கறுக்குபனை மீன்பிடி கிராமத்தில் இருந்து மேற்குத் திசையில் உள்ள ஆழ்கடல் பகுதியில் இந்த மர்மமான கொள்கலன் இருப்பதை மீனவர்கள் கண்டுள்ளனர்.

அது தொடர்பில் மீனவர்கள் உடனடியாக கடற்படையினருக்கு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து சிறிய டிங்கி படகு மூலம் அதனை கரைக்கு கொண்டு வர கடற்படையினர் முயற்சித்த போதும் அது கைக்கூடவில்லை.

இந்நிலையில் டோரா படகை பயன்படுத்தி கொள்கலனை ஆழ்கடலில் இருந்து கரைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் கருத்து வெளியிட்ட கடற்படைப் பேச்சாளர் கொள்கலனில் என்ன இருக்கின்றது என்பதை தற்போது கூற முடியாது எனவும் முதலில் அதனைக் கரைக்கு கொண்டு வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறினார். (அ-2)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## தற்பெருமை

மனிதனுக்கு உடம்பும் அறிவும் வலுவாக இருக்க வேண்டும். ஆனால் சில பேருக்கு உடம்பு பலமாக இருக்கும். சில பேருக்கு அறிவு பலமாக இருக்கும். அதேநேரம் அவர்களிடம் இன்னொரு பலவீனம் இருக்கும். அதாவது தற்பெருமை.

தான் பெரிய பலசாலி என்ற நினைப்பு அவர்களிடம் இருந்து கொண்டேயிருக்கும். பலம் இருந்தும் பல சந்தர்ப்பங்களில் அவர்களது தோல்விக்குக் காரணம் இந்த தற்பெருமைதான்! சீனாவில் ஒரு அறிஞர் இருந்தார். அவரின் பெயர் "எப்பெண்டி".

ஒருநாள் அவரைத் தேடி ஒருவன் வந்தான். அவன் பெரிய பலசாலி. அதாவது உடம்பால் பெரிய பலசாலி. அவன் இவரைப்பார்த்து "ஐயா... நான் ரொம்ப பலசாலி! நீங்களோ அறிவால் பலசாலி... நாம் இருவரும் சேர்ந்து நண்பர்களாக இருப்போம்" என்றான்.

அந்தப் பெரியவர் அவனைக் கொஞ்ச நேரம் உற்றுப்பார்த்தார். பின்னர் அவனிடம் "சரி, நீ எந்த வகையில் பலசாலி?" என்று கேட்டார். உடனே அவன் தன்னைப் பற்றி கூற ஆரம் பித்தான்.

"என்னால் ஒரு பெரிய பாறாங்கல்லையே அலாக்காகத் தூக்க முடியும். நம்முடைய ஊர் எல்லையில் நின்று கல்லைத் தூக்கி எறிந்தால் அது நகரத்தைத் தாண்டிப் போய் உள்ளே விழும் அளவுக்கு அவ்வளவு வேகமாக கல்லை வீச என்னால் முடியும்" என்றான்.

"சரி... வா சோதனை செய்து பார்ப்போம்" என்று கூறிய அந்தப் பெரியவர் அவனை அந்த நகரத்தின் மைதானப் பகுதிக்கு அழைத்துச் சென்றார். தன்னுடைய சட்டைப் பையில் இருந்து ஒரு சின்ன பட்டுக் கைக்குட்டையை எடுத்து அவனிடம் கொடுத்து "நீ பெரிய பலசாலி என்கிறாய் இதோ இந்தத் துணியை சுவருக்கு வெளியே போய் விழுமாறு உன்னால் எறிய முடியுமா?" என்றார்.

அதற்கு அவன், "ஒரு பெரிய பாறாங்கல்லையே தூக்கி எறிபவன் நான். இந்தச் சின்னத் துணியையா என்னால் தூக்கி எறிய முடியாது? தாருங்கள் அதை" என்று வேண்டி பலம் கொண்ட மட்டும் வேகமாக வீசி எறிந்தான்.

கனம் இல்லாத அந்தக் கைக்குட்டை சுவரைத்தாண்டிப் போகவில்லை. கொஞ்ச தூரம் மேலே போய் திரும்பவும் வந்து தரையிலேயே விழுந்தது. பெரியவர் சிரித்துக் கொண்டே என்ன நண்பா முடியவில்லையா? என்று கேட்டார். அவன் பேசாமல் நின்றான். "என்னால் முடியும்" என்றார் பெரியவர். அவன் ஆச்சரியத்துடன் அவரைப்பார்த்தான்.

பெரியவர் அந்தக் கைக்குட்டையை எடுத்தார். ஒரு சிறிய கல்லை அந்தத் துணிக்குள்ளே வைத்தார். கல் தெரியாத அளவுக்கு துணியால் மூடிச் சுருட்டிப்பிடித்து அந்தக் கல்லுடன் சேர்ந்து கைக்குட்டையை வேகமாக எறிந்தார்.

அந்தத் துணியும் கல்லுடன் சேர்ந்து சுவருக்கு வெளியில் போய் விழுந்தது. இப்பொழுதுதான் அவனுக்கு புரிந்தது. உடற்பலத்தை விட அறிவு பலம் தான் பெரிதென்பது. உடற்பலமும் அறிவு பலமும் சேர்ந்து இருந்தால் சில சமயங்களில் ஆபத்தும் ஏற்படலாம்.

உடல்பலம் பொருந்தியது சிங்கம். அதற்கு அறிவும் இருந்துவிட்டால் என்ன ஆகும் தெரியுமா? அதை விளக்க ஒரு கதை. ஒரு ஆசாமி காட்டு வழியால் போய்க் கொண்டிருந்தான். திடீரென ஒரு சிங்கம் எதிரில் வந்துவிட்டது. இந்த ஆளுக்கு ஒன்றுமே புரியவில்லை. உடனே அந்த இடத்தில் உட்கார்ந்து கடவுளை தியானிக்க ஆரம்பித்தான். இதைப் பார்த்ததும் சிங்கமும் அவனுக்கருகில் வந்து உட்கார்ந்து கண்ணை மூடிக்கொண்டது.

அந்த ஆளுக்கு இதைப் பார்த்ததும் மனதில் இலேசான சந்தோசம். அவன் சிங்கத்திடம் சொன்னான் "சகோதரனே உன்னைப் பார்த்ததும் உயிர்போய் விடுமோ என்று பயந்தேன். ஆனால் நீயும் என்னுடன் சேர்ந்து கடவுளை தியானிக்க ஆரம்பித்தாய். எவ்வளவு சந்தோசமாக இருக்கிறது தெரியுமா!" என்றான். உடனே அந்தச் சிங்கம் "பேசாமல் இரு... சத்தம் போடாதே... உன்னை எனக்கு இரையாகக் கொடுப்பதற்காக இறைவனுக்கு கண்ணை மூடி நன்றி சொல்லிக் கொண்டிருக்கிறேன்" என்றது.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# உள்நாட்டு பாலை பயன்படுத்துவதே பால்மா பிரச்சினைக்கு ஒரே தீர்வு

## சோபிததேரர் தெரிவிப்பு

பால் மா பொருட்கள் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைக்கு இலங்கை பாற் பண்ணையாளர்களை ஊக்குவித்து உள்நாட்டு பாலை பயன்படுத்தலே சிறந்த தீர்வு என ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

பால் மா பிரச்சினை குறித்து ஜாதிக ஹெல. உறுமயவின் தலைவர் நேற்றைய தினம் ஊடகங்களுக்கு அறிக்கை வெளியிட்டுள் ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

பொறுப்புக் கூறவேண்டியவர்களே பால்மா பொருட்களில் டிசிடி உண்டென்றும் பின்பு டிசிடி இல்லையெனவும் கூறுகின்றனர்.

கடந்த ஜூலை மாதம் முதலாம் திகதிக்கு பின்னர் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பால்மா பொருட்களிலேயே டிசிடி இரசாயன பொருள் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அவ்வாறாயின் அதற்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்டுள்ள பால் மா வகைகளில் இரசாயனம் கலந்துள்ளதாக ஓமல்பே சோபித தேரர் குறிப்பிட்டார்.

இந்நிலையில் பொன்டேரா நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். இது வரை காலமும் பால்மாவை பரிசோதனை செய்யாது விட்டமை ஏன்? எனவும் அரசாங்கத்திடம் கேட்க விரும்புவதாக கூறினார்.

பொன்டேரா நிறுவன பால்மாப் பொருட்களுக்கு அனுசரணை வழங்கிய சுகாதார அமைச்சின் உயரதிகாரிகள் யார்? என விசா ரணை செய்யவேண்டும்.

பால்மா குறித்த இந்தப் பிரச்சினையை இலங்கைக்கு சாதகமானதாக மாற்றவேண்டும்.

இலங்கையிலுள்ள பாற் பண்ணையாளர்களை ஊக்கு வித்து இலங்கை பாற் பொருட்களை பயன்படுத்தவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# வலிகாமம் கல்வி வலய அதிபர்களுக்கு கூட்டம்

க.பொ.த (சா/த) 2013 பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான "S" செயற்றிட்டத்தினை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 3 ஆம் திகதி முதல் பாடசாலைகளில் அமுலாக்கம் செய்வது தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யா/ இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு வலிகாம வலயத்தைச் சேர்ந்த க.பொ.த (சா/த) வகுப்புக்கள் உள்ளபாடசாலை அதிபர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராஜா அறிவித்துள்ளார். மேற்படி கூட்டத்தில் மாணவர்களுக்கு வழங்கப்படும் கற்றல் கையேடுகள் உள்ளடங்கிய பொதி கையளிக்கப்படவுள்ளமையால் அதனை எடுத்துச் செல்வதற்குரிய ஆயத்தத்துடன் வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். (அ-2)

# இளைஞர் பாராளுமன்றின் மூன்றாவது அமர்வு

இரண்டாவது இளைஞர் பாராளுமன்றத்தின் மூன்றாவது அமர்வுகள் இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் மஹரகம இளைஞர் பாராளுமன்ற வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் இளைஞர் விவகார திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டளஸ் அழகப் பெரும, ஐக்கிய, நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பி ள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ் அமர்வில் 13 ஆவது அரசியல் திருத்தச் சட்டம் இளைஞர்களின் எதிர்காலத்திற்கு ஆக்கபூர்வமளிக்கும் எனும் தலைப்பில் ஆளும் தரப்பினர் பிரேரணைகளை கொண்டு வரவுள்ளனர். அத்தோடு எதிர்க்கட்சியினர் 13 ஆவது அரசியல் திருத்தச் சட்டம் அவசியமற்றது என தமது கருத்துக்களை வைத்து வாதிடவுள்ளனர். யாழ்.மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலகங்களையும் சேர்ந்த இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களும் செனட் சபை உறுப்பினர்களும் இவ் அமர்வில் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9-23)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 60 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 90 | 100-140 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 80 | 100 |
| தக்காளி | 60 | 40 | 40 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 50 | 60 | 50 |
| கோவா | 60 | 70 | 80 | 80 |
| கரட் | 60 | 80 | 120 | 120 |
| பூசணி | 25 | 30 | 40 | 40 |
| புடோல் | 30 | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 40 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 175 | 120 | 140-160 | 200 |
| பெரிய வெங்காயம் | 130 | 130 | 140 | 140 |
| பாகற்காய் | 50 | 80 | 60 | 80 |
| வெண்டிக்காய் | 20 | 30 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | — | 80 |
| பயற்றங்காய் | 20 | 20 | 40 | 40 |
| லீக்ஸ் | 80 | 80 | 120 | 120 |
| பீற்றூட் | 20 | 15 | 40 | 40 |
| கறிமிளகாய் | 60 | 40 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 80 | 80 | 120 | 120 |
| போஞ்சி | — | 110 | 100 | 200 |
| கீரை - 1பிடி | 10 | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 320 | 240 | 250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40-50 | 40 | 35-40 |
| இராசவள்ளி | 80 | 70 | 120 | 120 |

# இராசி பலன்

29.08.2013
(ஆவணி 13, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
அட்டமி காலை 6.14 மணிவரை
ரோகினி மாலை 6.26 மணிவரை
இராகுகாலம் 1.35-3.05 மணிவரை
சுபநேரம் 7.05-9.35 மணிவரை

**மேடம்** துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், இனிமையான தகவல்கள் வந்து சேரும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**இடபம்** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், தொழில் நலன்கருதி பயணமொன்றை மேற்கொள்வீர்கள், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், பல நாட்களாக பார்க்காமல் இருந்த உறவினர் ஒருவரை சந்திக்கும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, கூடுதல் பொறுப்புக்களால் பம்பரமாக சுழன்று பணிபுரிய வேண்டி வரலாம், புதிய நட்பால் பொருள் விரயங்கள் ஏற்படலாம்.

**கடகம்** அதிர்ஷ்டகரமான நாள், விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், செய்தொழில் விருத்தியுண்டு, தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், கௌரவமான நாள்.

**சிங்கம்** வீட்டை அழகாக வைத்திருப்பதில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்லும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள்.

**கன்னி** நண்பர்களுக்குள் நிலவிய கசப்புணர்வு நீங்கும், புதிய திட்டங்கள் கைகூடும், தேவையற்ற அச்சங்கள் ஏற்படலாம், ஆன்றோர் சந்திப்பால் பரவசமடைவீர்கள், திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும்.

**துலாம்** விட்டுச் கொடுத்துச் செல்வதன் மூலம் அமைதி காண வேண்டிய நாள், குடும்பத்தில் கோபமாகப் பேசி விட்டு பின்னர் மனம் வருந்த நேரிடலாம், போசன சுகமுண்டு, சேமிப்புக்கள் கரையலாம்.

**விருச்சிகம்** யோகங்கள் வந்து சேர யோசித்து செயற்பட வேண்டிய நாள், சுப தகவல்கள் வந்து சேரலாம், களஸ்திர நன்மையுண்டு, சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**தனுசு** பழைய கடன் பிரச்சினையைத் தீர்க்க ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பீர்கள், உடல்நலம் சீராகும், வருங்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும், சுவாரஸ்யமான நாள்.

**மகரம்** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

**கும்பம்** செவிகுளிரும் செய்திகள் வந்து சேரலாம், தாய் வழி ஆதரவு பெருகும், மனதில் தோன்றுவதைச் செய்வீர்கள், தேவையற்ற பயம் உருவாகலாம், கல்வி முன்னேற்றமுண்டு.

**மீனம்** இழுபறியாக இருந்த பிரச்சினைகளில் முன்னேற்றம் ஏற்படும், முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், தன வரவில் முன்னேற்றமுண்டு, இனிய சம்பவங்கள் ஏற்படலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊடகவ ளங்கள் மற்றும் பயிற்சி மைய மாணவர்க ளால் வெளியிடப் படும் அறுவடை நூல் வெளியீட்டு நிகழ்வும் யாழ்ப்பாணக் கோட்டை-சமர்களின் தளம் ஆவணப்பட வெளியீட்டு நிகழ்வும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-5)

# இலங்கையில் சுதந்திரமான சூழல் சிறப்பாகவே காணப்படுகின்றது

## பிரதி அமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை வந்துள்ளமையை வரவேற்கின்றேன். இங்குள்ள உண்மை நிலவரத்தை அறிய இது அவருக்கு வாய்ப்பாக அமையும். இதேவேளை இலங்கையில் மனித உரிமையும் மக்களுக்கான சுதந்திரமான சூழலும் சிறப்பாகவே காணப்படுகின்றது என்று மீள் குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் ஒற்றுமை மிக்க சகோதரத்துவத்துடன் இணைந்த ஒரே இலங்கை தேசத்தை கட்டியெழுப்புவோம் எனும் தலைப்பில் நேற்று நடைபெற்ற பேரணி பொதுக் கூட்டத்தின் போது உரையாற்று கையிலேயே மீள்குடியேற்ற பிரதியமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தொடர்ந்துரையாற்றிய அவர், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தற்போது இலங்கை வந்துள்ளதை நாம் வரவேற்கின்றோம். அவரின் வருகையானது இங்குள்ள உண்மையான நிலவரத்தை அறிந்து கொள்ள வாய்ப்பாக அமையும். இலங்கையில் மனித உரிமையும் மக்களுக்கான சுதந்திரமான சூழலும் சிறப்பாக காணப்படுகின்றது.

வடமாகாண சபை தேர்தல் நடைபெறாது என்று சிலர் கூறினார்கள். ஆனால், வடமாகாண சபை தேர்தல் நடைபெறப் போகின்றது. சுதந்திரமாக அந்த தேர்தலை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இலங்கையில் தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கும் அரசியல்வாதியாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார உள்ளார். இவர் நாடாளுமன்றத்திலும் நாடாளுமன்றத்திற்கு வெளியேயும் குரல் கொடுத்து வருகின்றார்.

இவ்வாறான சிங்கள தலைவர்கள் தமிழ் மக்களுக்கு குரல் கொடுக்கும் சூழ்நிலை இங்கு ஏற்பட்டுள்ளது. மொழியை விருத்தி செய்வதற்கும் மொழிகளின் மூலம் சமூகங்களை இணைப்பதற்கும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார முயற்சித்து வருகின்றார்.

அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் ஐம்பது வருடகால அரசியல் வரலாற்றில் தொடர்ச்சியாக தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்து வரும் ஒரு அரசியல்வாதியாக காணப்படுகின்றார் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# பொன்ரேறா நிறுவனத்தின் பணிகள் மீண்டும் ஆரம்பம்

அங்கர் பால் மா உள்ளிட்ட பால்மா வகைகளை உற்பத்தி செய்யும் பொன்ரேறா நிறுவனத்தின் பியகம தொழிற்சாலையின் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பை கருத்தில் கொண்டு பியகம தொழிற்சாலையின் பணிகள் மறு அறிவித்தல் வரையும் இடை நிறுத்தப்பட்டதாக நிறுவனத்தின் அதிகாரிகள் கடந்த 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தெரிவித்திருந்தனர்.

இத் தொழிற்சாலையில் கடமையாற்றும் வெளிநாட்டு பணியாளர்கள் நால்வர் உட்பட 750 பேரின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டே இந்த முடிபு எட்டப்பட்டதாக நிறுவனம் அன்று அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

சவப்பெட்டியை எடுத்துவந்து தொழிற்சாலைக்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்துதல், விற்பனை முகவர்களை அச்சுறுத்தல் ஆகியவற்றை கவனத்தில் கொண்டு நியூசிலாந்து நிறுவனத்தின் தீர்மானத்திற்கு அமைவாகவே இந்த தொழிற்சாலை மறுஅறிவித்தல்வரையும் மூடப்பட்டதாக அந்த அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். (அ-7)





வட்டக்கச்சி - கிளிநொச்சி

ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவில்

## பிரமோற்சவம் - 2013

இன்று வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோயில் 10 ஆம் திருவிழாவாகிய தீர்த்தத்திருவிழா பஞ்சமூ ர்த்திகள் சித்தாமிர்த தீர்த்தத்தில் தீர்த்தமாடும் அற்புதக் காட்சி காலை 5 மணிக்கு ஆரம்பமாகி 12 மணிக்கு நிறைவுறும். மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி 10 மணிக்கு நிறைவுறும்.

(சி-4496) —பரிபாலன சபையினர்


# சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம் சிவதொண்டன்நிலையத்தினால் வெளியிடப்படும் இருமாத இதழான சிவதொண்டன் சஞ்சிகையின் ஆனி – ஆவணி மாதத்திற்கான இதழ் வெளிவந்துள்ளது.

தமிழ், ஆங்கில மொழிமூலங்களிலான ஆக்கங்களைத்தாங்கி வெளி வந்திருக்கும் இச்சஞ்சிகை சைவ ஆன்மீக தகவல்களுடன் வெளிவந்துள்ளது. (அ-5)


## Consulate General of india
Jaffna

Notice for Attorney's Services

सत्यमेव जयते

Consulate invites offers from Attorneys based in jaffna. specializing in property related matters for advising, drawal of sale & Purchase agreement to purchase land and all other issues in finalizing the sale agreement. The offer should give details of services that will be rendered, terms and conditions and legal fees payable for undertaking the above work and be sent in a sealed cover which should reach by September 1, 2013 super Scribing the envolope with offer for Legal Services at the following address:-

*Head of Chancery*
Consulate General of india
14, Maruthady Lane, Nallur, Jaffna

(C-4497)



## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1980 இந்து(குருகுலம்)
நட்சத்திரம்:புனர்பூசம் 3
கி.பா :02
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:MSc
பொறியியலாளர் சிங்கப்பூர்
தொ.இ:B756

பிறப்பு: 1987
இந்து(விஸ்வகுலம்)
நட்சத்திரம்:திருவாதிரை 2
கி.பா :26.75
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L
சுவிஸ் Not PR
தொ.இ:B758

பிறப்பு: 1971 இந்து(சைவ குருக்கள்) நட்சத்திரம்:பரணி 2
கி.பா :36.75
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:BA, MA
ஆசிரியர்
தொ.இ:B763

பிறப்பு: 1980 இந்து(V)
நட்சத்திரம்:அனுசம் 4
கி.பா :37.5 செவ் 2
உயரம்: 181 செ.மீ
தகைமை/தொழில்:BAநூலகர்
தொ.இ:B767

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1980 இந்து(V)
நட்சத்திரம்:மூலம் 3
கி.பா :23
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:A/L
தொ.இ:G1102

பிறப்பு: 1983 இந்து(விஸ்வகுலம்)
நட்சத்திரம்:பூரம் 1
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:BSc
Assistant Accountant
தொ.இ:G1103

பிறப்பு: 1978 இந்து(V)
நட்சத்திரம்: பூராடம் 4
கி.பா :63 செவ் 12
தகைமை/தொழில்: BSc IT
முகாமையாளர்
தொ.இ:G1105

பிறப்பு: 1978 இந்து(V)
நட்சத்திரம்: பூராடம் 2
கி.பா : 48 உயரம்: 5'4"
தகைமை/தொழில: BA
ஆசிரியை
தொ.இ:G1108

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி






புதிய சுவை! புதிய அனுபவம்! புதிய தொழில்நுட்பம்!

அதிநவீன Pasteurized And Homogenized முறைப்படி தயாரிக்கப்பட்ட 100% சுகாதாரமான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த ஐஸ்கிறீம் வகைகள் எமது அறிமுக விலையில் நல்லூர் விற்பனை நிலையத்தில் சுவைத்து மகிழலாம். பெறுமதி மிக்க பரிசில்கள் உங்களுக்காக காத்திருக்கின்றன.

ஷைலோ ஐஸ்கிறீம்

No.231, Temple Road, Nallur, Jaffna.
T.P. 021 4926003

(3587)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கத்துவ பணம் செலுத்தினால் தென்னங்கன்றுகள் இலவசம்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலகத்தின் தென்னை அபிவிருத்தி சபையில் அங்கத்துவமுள்ளவர்கள் 110 ரூபா அங்கத்துவப் பணம் செலுத்தி இருப்பின் அவர்களுக்கு 5 தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.


கரணவாய் ஜே/351 கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்டவர்களுக்கு கரவெட்டி பிரதேச செயலகத்தின் தென்னை அபிவிருத்தி சபையினரால் கூட்டம் நடத்தப்பட்டது. மேற்படி கூட்டத்தின் போதே இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதனடிப் படையில் தென்னை அபிவிருத்தி சபையில் 110 ரூபாவை அங்கத்துவப் பணமாக செலுத்தி அங்கத்தவராக பதிவு செய்தவர்களுக்கு 5 தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

அத்தோடு, கரவெட்டி பிரதேசத்தின் கிராமங்களில் உள்ள மக்களும் இலவசமாக தென்னங்கன்றுகளை பெற்றுக் கொள்ளும் வகையில் மேற்படி சபையின் அங்கத்தவர்கள் சென்று மக்களை வழிப்படுத்தவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இத் தென்னங்கன்றுகள் 3 வருடத்தில் காய்க்கும் தன்மை கொண்டவை என்பது சுட்டிக்காட்டத்தக்கது. (அ-9-60)



நன்றி: மிரர்

# நவிபிள்ளை பயணித்த வீதிகளில் தேர்தல் சின்னங்கள் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

**ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைகள் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளையின் வருகையினை அடுத்து காப்பெற் வீதிகளில் வர்ணம் தீட்டப் பட்டிருந்த தேர்தல் சின்னங்கள் அழிக்கப்பட்டுள்ளன.**

நவநீதம்பிள்ளை அம்மையார் யாழ்.மாவட்டத்தில் சென்ற இடங்கள் அனைத்திற்குமான வீதிகளிலேயே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பாக கச்சேரி வீதி,யாழ்.பொது நூலக வீதி, யூ.என்.எச்.சி.ஆர் அலுவலகம் அமைந்துள்ள வீதி என பல இடங்களில் ஆளுங்கட்சியினை சேர்ந்த வேட்பாளர்களின் தேர்தல் சின்னங்களும் மிகவும் பெரியளவில் அடிக்கடி வர்ணம் தீட்டப் பட்டிருந்தன.

எனினும் ஆணையாளரின் யாழ்.மாவட்ட விஜயத்தையடுத்து, அவர் சென்று வந்த வீதிகளில் வரையப்பட்டிருந்த தேர்தல் சின்னங்கள் அனைத்தும் நேற்றுமுன்தினம் இரவோடு இரவாக அழிக்கப்பட்டுள்ளன.

ஆணையாளர், வீதியில் வரையப்பட்டுள்ள தேர்தல் பிரசார சின்னங்களை பார்த்து விடக்கூடாது என்ற நோக்கில் மிகவும் நேர்த் தியான முறையில் கறுப்புநிற பூச்சினால் மறைக்கப் பட்டுள்ளதுடன் ஆணையாளரின் வருகைக்கு முன்னதாக வீதிகளில் தேர்தல் சின்னங்களை கண்டு கொள்ளாதவர்கள், ஆணையாளரின் வருகையின் போது இரவோடு இரவாக தேர்தல் சின்னங்களை அழித்துள்ளனர்.

இதனை விட வீதி மதில்களில் ஒட்டப்பட்டிருந்த தேர்தல் சுவரொட்டிகள், பனர்கள் அனைத்தும் இரவோடு இரவாக அகற்றப்பட்டிருந்தமையை காணமுடிந்தது.

கடந்த ஒரு வாரத்திற்கு முன்னதாக வீதிகளில் தேர்தல் சின்னத்தை வரைவது தேர்தல் வீதி மீறல் என தேர்தல் திணைக்களமும் அரச சொத்துக்களை தேர்தல் பிரசாரத்திற்காக பயன்படுத்த வேண்டாம் என யாழ். மாநகர சபையும் அறிவித்திருந்த போதிலும் அவ் அறிவித்தகளையும் கோரிக்கையையும் கண்டுகொள்ளாதவர்கள் தற்போது நவநீதம் பிள்ளை சென்று வந்த வீதியிலுள்ள தேர்தல் சின்னங்களினை மட்டும் அழித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-4)

# இரத்ததான முகாம்

(மானிப்பாய்)

யாழ்ப்பாணம் றோட்டறிக்கழகத்தினரால் இரத்த தான முகாம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவில் இடம்பெறவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையினை அடுத்தே இவ் இரத்ததான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்களை 0778923480 என்ற தொலைபேசி இலக்க மூடாக பெற்றுக் கொள்ளலாம். (அ-9-23)

# அயலவரின் நகைகளை வாங்கி அடகு வைத்தவர் தலைமறைவு

(கரணவாய்)


கரணவாய் கூளந்த வேலி பகுதியில் 9 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளை அயல் வீடுகளில் வாங்கி, அடகு வைத்த பெண், குழந்தைகளுடன் தலைமறைவாகியுள்ளார்.

இப் பிரதேசத்தைச் சேர்ந்த இப் பெண் அயல்வீடுகளில்நகைகளைப்பெற்றுஅடகுவைத்துள்ளார்.

இவ்வாறாக அடகு வைத்த பவுணின் பெறுமதி 9 இலட்சம் ரூபா என மதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் உரியவர்களிடம் நகைளை ஒப்படைக்காது இப் பெண் குழந்தைகளுடன் தலைமறைவாகியுள்ளார்.

இவர் அல்வாய் பகுதியில் தலைமறைவாக இருக்கலாமென சந்தேகிக்கப்படுவதனால் ஜே/350 கிராம சேவையாளரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் நெல்லியடி பொலிஸாரிடமும் முறையிடப்பட்டுள்ளது. (அ-9-60)







சின்மயானந்தம் நூல் வெளியீடும் கண்காட்சியும் நல்லூர் மகேஸ்வரன் மண்டபத்தில் அண்மையில் நடை பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும், நூல் வெளியீடு இடம் பெறுவதையும் கண்காட்சியினை விருந்தினர்கள் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்,
(படங்கள்:- உ.சாளீன்)

# கழிவகற்றல் நடவடிக்கை சீராக இடம்பெறவில்லை

(காரைநகர்)

யாழ்ப்பாணம் சிவகுருநாதர் வீதியில் வீட்டுக் கழிவுகளை முழுமையாக அகற்றும் பணி சீரான முறையில் இடம்பெறுவதில்லை என அப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் கடந்த மூன்று வாரங்களாக கழிவகற்றும் பணி சீராக நடைபெறவில்லை. இதனால் வீடுகளில் கழிவுகள் தேங்கி தொற்றுநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இப் பிரதேசத் தில் கழிவு அகற்றும் நடவடிக்கை யாழ். மாநகர சபையினரால் ஒவ்வொரு திங்கட்கிழமையும் நடைபெற்று வந்தது.

ஆயினும் தற்போது கழிவகற்றும் நடவடிக்கை சீரான முறையில் இடம்பெறுவதில்லை. இதனால் பொது மக்கள் பல அசௌகரிங்களை எதிர் நோக்கி வருவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

எனவே இதனை சீர் செய்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-246)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளுக்கு பேச்சுக் கல்வியை கற்பிப்பது நன்மை தருமா?


25
பேராசிரியர் மா.சின்னத்தம்பி

அறிமுகம்

'உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின்
வாக்கினிலே ஒளி உண்டாகும்'
-பாரதியார்

'இதயம் என்ன நினைக்கிறதோ அதை
உதடுகள் பேசுகின்றன'
-உரோமானிய பழமொழி

பேச்சு என்பது மனித வெளிப்பாடுகளில் முதன்மையானது. முன்னோடியானது; தொடர்பாடல்களில் மிகவும் அடிப்படையானது. இது மொழியுடனும் எண்ணங்களுடனும் தீர்மானங்களுடனும் தொடர்புடையதாக வளர்ந்துள்ளது.

மொழிகள் சார்ந்த ஆற்றல்களில் பேச்சாற்றல் தலையானது; வலுமிக்கது; கற்றல்- கற்பித்தலில் எழுதுதல், வாசித்தல், கேட்டல் என்பவற்றை முன்னிலைப்படுத்துவதை விடவும் பேசுதல் என்பதே சமூகமயப்படும் பேராற்றலை வளர்க்க உதவுவதாக நம்பப்படுகின்றது.

பேச்சுத்திறன் மொழி ஆசிரியர்களினால் அடிப்படையில் வளர்க்கப்படுகின்றது. மொழியைத் தமது கையாளாக பயன்படுத்தவல்லவர்களாகும் போது சமூகத்தில் தனித்தன்மையையும் புகழையும் அவர்கள் பெற்றுக்கொள்கிறார்கள். பேச்சு பெருந்தொகையான மக்களைக் கட்டிப்போடும் மாயவலை; அதை தீரத்துடனும் நயத்துடனும் கையாள்பவர்கள் ஒன்றில் தலைவர்கள் ஆகின்றனர்; அல்லது பேச்சு தொழிலாளர்களாக அல்லது பேச்சு தொழில் வான்மையினராக தொழில் உலகில் வளர்ந்து விடுகின்றனர். வேறு சிலர் வெகுசன நுகர்ச்சிக்கான மகிழ்ச்சிப் பண்டத்தை அள்ளி வழங்கிப் புகழ் பெறுகிறார் கள்.

இவ்வாறான பல்வகைமை கொண்ட பேச்சாற்றல், கல்வி, ஜனரஞ்சகம், தொழில் முறை, வருமானம், புகழ்,வன்திறன் வல்லாண்மை போன்றவற்றுடன் தொடர்பு கொண்டிருக்கும் பாங்கம் பற்றி இன்று கலந்துரையாடுவோம்.

**பேச்சு- ஒலி நயம் போர்த்திய கருத்துக்கள்**

மொழியும் ஒலியும் நோக்கமும் தேவையும் கவனமாக ஒன்றிணையும்போது நயக்கத்தக்க பேச்சு உருவாகி விடுகின்றது.

மனதில் பட்டதையெல்லாம் மூளையின் பரிசீலனை இல்லாமல் பேசி விடலாமா? எந்த இடத்தில் என்ன பேசவேண்டும்? யாரிடம் எப்படி, எதற்காகப் பேசவேண்டும்? என்பதில் தெளிவான தீர்மானங்கள் தேவையல்லவா?

மனதில் உருவாகும் கருத்துக்களை தேவையறிந்து, சூழலை மதிப்பிட்டு வெளியிடுவதே பயன்மிக்க பேச்சாகின்றது. உணர்வுகளுடன் கருத்து ஒன்றிணையும் போது பேச்சு கவர்ச்சி மிக்கதாகிறது. எண்ணங்கள் மற்றும் எதிர்பார்க்கைகள் வெற்றிபெற உணர்ச்சிமயமான பேச்சுக்கள் உதவுகின்றன. ஆனால் நிதானமும் எல்லையும் தேவை.

'மனதில் எண்ணுவதையெல்லாம் வார்த்தைகளாக கொட்டிவிடலாமா? சில வார்த்தைகள் வெல்லும்; சில வார்த்தைகள் கொல்லும்'

ஆன்றோர்கள் இவ்வாறு சொல்வதை பலமுறை நாம் கேட்டிருக்கிறோம். இது ஒரு முகாமைத்துவம் சார்ந்த ஆலோசனைக் கூற்று. விளங்கிக்கொண்டு பின்பற்றுவோர் வெற்றி பெறுகின்றனர்; புகழ் பெறுகின்றனர்.

❖ பேச்சு பலருக்கு நாகரிகமாகிறது

❖ பேச்சு சிலருக்கு உழைப்பாகின்றது

❖ பேச்சு வேறு சிலருக்கு வாழ்வியலாகி விடுகிறது.

மேடைப்பேச்சு என்பது கேட்பவர்களின் மனதை உழுதுவிடும் வலிமையான ஏர் ஆகலாம் அல்லது சமூகத்தை கூறுபோடும் வாளாகலாம். யார் அந்த வாளை எத்தேவைக்காக கையில் எடுக்கிறார்கள் என்பதைப் பொறுத்து சமூக விளைவுகள் பரவிப் பாய்கின்றன காட்டாறு போல.

பேசாப்பொருளை சிலர் பேசத் துணியும்போது தோன்றாத விளைவுகள் தோன்றி விடுகின்றன. உண்மைகளையும் சமூக நலன்களையும் உள்வாங்கி வெளிப்படும் பேச்சுக்கள்தான் நின்று நிலைக்கின்றன ; நீண்ட வரலாறு படைக்கின்றன்.

தேவைகருதியும் பொய்மை கலந்தும் வெளிவரும் பேச்சுக்கள் பல சமயங்களில் தம் இலக்கை அடைவதேயில்லை.

வார்த்தைகளில் உண்மை ; பேசும் உணர்வுகளில் உண்மை நிறைந்திருக்கும் போது கேட்பவரின் காதுகள் குளிர்கின்றன. உள்ளம் நிறைகின்றது. பேச்சு செறிவாக அமையும் போது பயன்மிகுதி கிடைக்கிறது. சொற்சோடைகள் நீண்ட புகழைத்தருவதில்லை.

**பேச்சு- கலையா, தொழிலா?**

'ஒரு மணித்தியாலம் பேசுவதற்கு ஐந்து நிமிடம் சிந்திக்கவேண்டும். ஆனால் ஐந்து நிமிடம் பேசுவதற்கு ஐந்து மணித்தியாலம் சிந்திக்க வேண்டும்'

தலைசிறந்த பேச்சாளர் ஒருவரின் கூற்று இது. ஆசிரியர்களுக்கும் மதத்தலைவர்களுக்கும் இது அதிகம் பொருந்தி விடுகின்றன.

'நல்லபேச்சு என்பது காதுகளை குளிரச் செய்து உள்ளங்களை நிறைத்து மூளையைக் கிள்ளி விடவேண்டும்'

அகிலத்தின் பகுத்தறிவுத் தந்தை சோக்கிரட்டீசும் ஜுலியட் சீசரின் நண்பன் மார்க் அன்ரனியும் இப் படித்தான் பேசி யிருக்க வேண் டும். தமிழகத்தில் ஈ.வெ.ரா பெரியாரும் அறிஞர் அண்ணாத்துரையும் இப்படித்தான் பேசியிருக்க வேண்டும்.


கல்வித் தரிசனம்

படிப்பறிவு குறைந்த பாமர மக்களுக்கு சிந்திக்க கற்றுக் கொடுத்தவர்களின் சமுதாயக் கல்வி ஆயுதம் இத்தகைய பேச்சாற் றல் தான்.

உள்ளத்தில் அவர்களிடம் உண்மையிருந்தது. சமுதாய நேயம் மனம் முழுக்க நிறைந்து கிடந்தது. சிந்தனையில் தெளிவிருந்தது. சொற்களில் கூர்மை யிருந்தது. மொழியில் சந்தமும் இனிமையும் கொட்டிக் கிடந்தன.

அவர்கள் இன்று இல்லை; ஆனால் சமூகமாகவும் சமூக சித்தாந்தமாகவும் அவர்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்த மாற்றமும் புகழும்பும் பேச்சாற்றலால் உருவானவை தான்.

பள்ளிப் பிள்ளைகளை நல்ல பேச்சாளர்களாகவும் வளர்க்கவேண்டும். அவர்களது மொழி, சிந்தனை, தன்னம்பிக்கை, தொடர்பாடல், சமூகப் புகழ் போன்ற எல்லாவற்றையும் பேச்சாற்றல் உருவாக்கி விடும்.

வங்காளதேசத்தில் பிறந்து கிழக்கு லண்டனில் வளர்ந்த இளம் மாணவர் லாபீர் உலகம் முழுதும் பறந்து பறந்து எழுநூறுக்கு மேற்பட்ட மேடைகளில் பேசித்திரிகிறார். அவ ரது ஆற்றல் உலகம் முழுவதும் பேசப்படு கிறதே.

பள்ளிப்பருவத்தில் கம்பனைப் பற்றிப் பேசத் தொடங்கிய மாணவர்கள்தான் இன்று கம்பவாரிதியாகவும் தமிழருவியாகவும் உலகம் சுற்றுகிறார்கள்.

கிருபானந்தவாரியார் தன் சமய ஞானத்தையும் இலக்கியப் புலமையையும் ஆற்றொழுக்கான சொல்லோட்டத்தையும் இணைத்து ஒப்புமையற்ற சமயப் பிரசங்கியாக வளர்ந்தார். இன்றும் மின்னியல் ஒலிப்பேழைகளில் வாழ்ந்து வருகிறார்.

பேச்சைப் பள்ளிப்பருவத்தில் போட்டிக்காக பேசப்பழகிய பலர் பேச்சைத் தொழிலாகவே மாற்றிக்கொண்டு வாழ்ந்து வருகின்றனர். இந்தியாவில் சுகிசிவம், திண்டுக்கல் லியோனி போன்றவர்கள் உன்னதமான பேச்சுத் தொழில் வாண்மையினர்தானே.

பள்ளி சென்று படிக்கமுடியாத குடும்பத் தலைவியர்க்கும் முதியவர்க்கும் சமய ஞானத்தையும் கடவுள் பக்தியையும் வரலாற்றில் ஊட்டி வளர்த்தவர்கள் இந்துசமய கோவில் பிரசங்கிகளே. ஈழத்து மணிஐயர் இவ்வாறானவரே. இவர்களது இசையுடன் கலந்த செய்யுளும் உரைநடையும் இணைந்த பேச்சுக் கலைதான் சமூகம் மென்மையுணர்வுகளுடனும் சமூகக் கட்டுப்பாட்டுடனும் வளர உதவியது. பேச்சு சமூக முதலீடாகி நன்மை செய்திருந்தது.

அறிவை வாழ்வுக்கான கருவியாக மாற்றுதற்கு கிறிஸ்தவ பிரசங்கிமார்கள் செய்த பங்களிப்புக்கள் இலங்கையின் கல்வி வர லாற்றின் பெருமைக்குரிய பக்கங்களாகியுள்ளன.

இன்று வணிக உலகில் பணியாளர்க ளுக்கு வினையாற்றலை மேம்படுத்தும் நோக்கில் தொழில் ரீதியான பயிற்றுநர்கள் பலர் வளர்ந்துள்ளனர். இவர்களது தேவை வணிக நிறுவனங்களுக்கு அவசியமாகியுள்ளது. வணிக உலகில் மதிப்புமிக்க தொழில் வாண்மைப் பேச்சாளர்களாக (Professional Speakers) பலர் வளர்ந்துள்ளனர்.

## புதிதாக சிந்திப்போம்: சமூகத்திற்கான கல்வி

தமிழகத்தில் காலஞ்சென்ற சந்திர சேகரன், இலங்கையில் குகதாசன் போன் றவர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் இவ் வாறு பணியாளர்களை வலுவூட்டும் பேச் சாளர்களாக வளர்ந்தனர். இன்றும் ஆங்கி லத்திலும் சிங்களத்திலும் இத்தகைய தொழில் முறை பயிற்றுநராக தம் பேச்சாற்றலால் வளர்ந்து பல இலட்சங்களை சம்பாதிக்கும் தம்மிக கல்பகே போன்ற பலர் உள்ளனர்.

முகம் தெரியாத பல மிகச்சிறந்த பேச்சாளர்களின் பேச்சுக்கள் நூல்களாகவும் மின்னியல் இறுவெட்டுக்களாகவும் வெளிவந்து கொண்டிருக்கின்றன; அவர்களுக்கு பல இலட்சம் பண வருமானத்தை அவை வாரி வழங்குகின்றன.

'நல்ல நண்பர்களை எப்படி உருவாக்குவது' என்ற நூலை எழுதி பேச்சுக்கலையின் நுட்பங்களையும் நன்மைகளையும் தெளிவுபட வைத்த டேல் கார்னேக் எத்தனை இலட்சம் உழைத்தார் தெரியுமா?

நல்ல பொறியியலாளர்களும் நுட்பமான மருத்துவர்களும் மாத்திரமே கோடி கோடியாகச் சம்பாதிக்கிறார்கள் என்று எண்ணாதீர்கள். நன்றாக பலமொழிகளில் பல விடயங்களை பேசத் தெரிந்தவர்களும் பேச்சு பற்றிய நூல்களை எழுதியவர்களும் அவ்வாறுதான் சம்பாதிக்கின்றனர்.

தொலைக்காட்சி மற்றும் சமூக ஊட கங்களான இணையங்களின் வழியாகவும் பேச்சுக்களை உலகம் முழுதும் பரப்பியும் விற்பனை செய்தும் கோடி கோடியாக சம் பாதிக்கும் பேச்சுச் சக்கரவர்த்திகள் பலர் உள்ளனர்.

பேச்சு என்பது நவீன வாஸ்கொடகாமாக்கள் கண்டுபிடித்துள்ள பணத்தீவுகள். உணர்ந்து கொள்ளுங்கள்.

**பேச்சுக் கல்வி- புதிய தெரிவாகுமா?**

அறிவு-ஆற்றல்- தொழில்-வருமானம்- புகழ் என்ற எல்லாவற்றையும் நேர்கோட்டில் இணைப்பதுதான் கல்வி. இது புதிய நடை முறை.

இதன்படி பேச்சும் ஒரு கல்வியாகியுள்ளது. பேச்சுத்திறனை மேம்படுத்தும் அரச சார்பற்ற நிறுவனங்களும் வளர்ந்துள்ளன. குழந்தைகளுக்கும் மாணவர்களுக்கும் பேச்சு கலையை கற்பிப்பதற்காக உலகின் பல நாடுகளுக்கும் பறந்து சென்று பல்லாயிரம் டொலர்களைச் சம்பாதிக்கும் உலக ஆசிரியர்கள் (Global Teachers) பலர் வளர்ந்து வருகின்றனர்.

பணமும் புகழும் தரும் கல்வியாக பேச்சுக் கல்வி வளர்ந்துவருவதை நீங்கள் அறிவீர்களா?

ஒழுங்கான கல்வியாக பேச்சுக்கலையைக் கற்கவேண்டும். அவரவர் உளச் சார்புக்கும் வாய்ப்புக்கும் ஏற்ப எத்துறையில் பேச்சுத் தொழிலை மேற்கொள்வதென்பதை வளரும் போது தீர்மானித்துக் கொள்ளலாம். அல்லது பேச்சுக்கான துறையை மெல்ல மெல்ல மாற்றிக்கொள்ளலாம். எல்லாம்சரி நல்லபேச்சு எவ்வாறு அமைய வேண்டும்?

❖ குறுகிய நேரத்தில் நெஞ்சைத் தொடும் வகையில் கருத்துச் செறிவுடன் பேச வேண்டும்.

❖ பேசுவதில் உண்மை பொதிந்திருக்க வேண்டும்.

❖ இயன்றவரை மக்கள் மொழியில்- கேட்பவர் மொழியில் இனிமையாக பேச வேண்டும்.

❖ பதில் சொல்லும்போது புண்படாத சொற்களை கையாளவேண்டும். மின்னல் தெறிப்பதுபோல் நாகரிகமாகவும் சமயோசிதமாகவும் பதில் சொல்லவேண்டும்.

❖ தமது அறிவுக்கட்டுப்பாட்டுக்குள் நின்று பேச வேண்டும். உணர்வுக்குட்பட்டு எல்லை தெரியாமல் பேசக்கூடாது.

❖ எண்ணங்களை தெளிவாக கோவைப் படுத்தி நிதானமாகப் பேசவேண்டும்.

❖ தன்னம்பிக்கையை வெளிப்படுத்தும் வகையில் முகத்தையும் உடலையும் வைத்துக்கொள்ளவேண்டும்.

❖ தகவல்களுக்குத் தக்கதாக குரலில் ஏற்ற இறக்கங்களை வெளிப்படுத்தவேண்டும்.

❖ கூட்டத்தினரை பரவலாகப் பார்த்துப் பேசவேண்டும். ஒரு பகுதியை மாத்திரம் பார்த்துப் பேசக்கூடாது.

❖ பேச்சின் போது நகைச்சுவைகளையும் குட்டிக்கதைகளையும் இடைக்கிடையே பயன்படுத்தவேண்டும்.

இப்போது உங்கள் பிள்ளைகளுக்கும் பேச்சுக் கலையை கற்பிப்பீர்களா? பேச்சு கலை மட்டுமல்ல அது இலாவகரமான புகழ்மிக்க தொழிலும்தான். இப்போது சொல்லுங்கள் பேச்சும் கல்விதானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

560



## வயல் நாசமானது



"குருவே! நீங்களும் சீடர்களும் இங்குள்ள மடத்தில் தங்கலாம். உங்களுக்கு எந்த குறையும் இருக்காது" என்றார்கள் அந்த ஊர் மக்கள். மடத்தின்வாயிலில் குதிரையை நிறுத்தினார்கள் சீடர்கள். குருவை இறக்கினார்கள். மடத்திற்குள் சென்றார் குரு. மற்ற சீடர்களைப் பார்த்து மூடன், "இந்தக் கிழட்டுக் குதிரையால் நடக்க முடியாது. எதற்காக இதைக் கட்டி வைக்க வேண்டும்? அப்படியே விட்டு விடுவோம். சிறிது தொலைவு சென்று மேய்ந்தால் அதன் பசி அடங்கும்" என்றான்.

உடனே மட்டி அதன் சேணத்தைக் கழற்றி எடுத்துக் கொண்டான். சீடர்கள் ஐவரும் மடத்திற்குள் நுழைந்தார்கள். மடத்தில் குருவிற்கும் சீடர்களுக்கும் நல்ல விருந்து பரிமாறப்பட்டது. எல்லோரும் வயிறு முட்ட உண்டார்கள். படுக்கையில் படுத்த அவர்கள் நன்றாகத் தூங்கி விட்டார்கள். மடத்திற்கு வெளியே நின்ற குதிரை அங்கிருந்து மெல்ல நடந்தது. சிறிது தொலைவில் இருந்த வயலிற்குள் இறங்கியது. நெற்பயிர்களை மேயத்தொடங்கியது. பொழுது விடிந்தது. வெளியே வந்த சீடர்கள் குதிரையைக் காணாது திகைத்தார்கள். அதைத் தேடி அலைந்தார்கள். குதிரை ஒரு மரத்தில் கட்டப்பட்டு இருப்பதைப் பார்த்தான் பேதை. "அங்கே நம் குதிரை உள்ளது" என்று குரல் கொடுத்தான்.

எல்லோரும் அங்கே சென்றார்கள். குதிரையைக் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்தான் மட்டி. அங்கிருந்த ஒருவன் "இந்தக் குதிரை உங்களுடையதா?" என்று கோபத்துடன் கேட்டான். "ஆமாம்! இந்தக்குதிரை பராமார்த்த குருவிற்குச் சொந்தமானது. நாங்கள் அவரின் சீடர்கள்" என்றான் மூடன்.

"உங்கள் குதிரை என் நெல்வயலையே பாழாக்கிவிட்டது. எவ்வளவு மேய்ந்து இருக்கிறது என்று நீங்களே பாருங்கள். எனக்கு நிறைய இழப்பு ஏற்பட்டு விட்டது. அதற்கு ஈடாகப் பத்துப் பணம் தாருங்கள். அப்பொழுது தான் குதிரையை விடுவேன்" என்று கோபத்துடன் கத்தினான் அவன். "ஐயா! நாங்கள் அறியாமல் இந்தத் தவறு நிகழ்ந்துவிட்டது. எங்களை மன்னித்துக் குதிரையைத் தாருங்கள்" என்று சீடர்கள் கெஞ்சினார்கள்.


"கெஞ்சுவதால் எந்தப்பயனும் இல்லை. பணம் கொடுத்துக் குதிரையை ஓட்டிச் செல்லுங்கள்" என்று கண்டிப்புடன் சொன்னான் அவன். குருவிடம் வந்த அவர்கள் நடந்ததைச் சொன்னார்கள். "இந்தக்குதிரை வந்ததிலிருந்து தொல்லைதான். இப்பொழுது என்ன செய்யப்போகிறேனோ? தெரியவில்லை என்று புலம்பி ஊர்த்தலைவரிடம் சென்று நடந்ததைச் சொன்னார் அவர்.

தன் வேலையாளிடம் ஊர்த்தலைவர், "நீ உடனே சென்று அந்த உழவனையும் குதிரையையும் அழைத்துவா" என்றார். சிறிது நேரத்தில் உழவனும் குதிரையும்அங்கு வந்தார்கள். "என்ன நடந்தது?" என்று உழவனைக் கேட்டார் அவர். "இந்தக் குதிரை நேற்றிரவு என் வயலையே நாசமாக்கி விட்டது.

## பரமார்த்த குரு கதைகள்

அந்த இழப்பிற்காக எனக்கு பத்துப் பணம் தரவேண்டும். நான் கேட்கும் தொகை குறைவு" என்றான் அவன்.

"குருவே! உங்கள் குதிரை இவன் வயலை நாசமாக்கி உள்ளது. அதற்காக ஐந்து பணம் தந்து விடுங்கள்" என்றார் ஊர்த்தலைவர். புலம்பிய படியே அவனிடம்ஐந்து பணம் தந்தார் குரு. "குரு என்றும் என்னை மதிக்க



வில்லை. பணமும் போயிற்றே" என்று கோபம் கொண்டார் அவர்.

தான் இருந்த சூழ்நிலையை மறந்தார். "குருவிற்கே அபராதம் விதிக்கிறீர்களா? நீங்கள் நாசமாகப் போவீர்கள். இந்த ஊரில் மழையே பெய்யாது. இந்த ஊரை மண் மூடிக் கொள்ளும்" என்று சாபம் தந்தார். இதைக்கேட்ட ஊர் மக்கள் கோபம் கொண்டார்கள். "எங்களுக்கே சாபம் தருகிறீர்களா? உங்களை என்ன செய்கிறோம்? பார்" என்று கத்தினார்கள்.

நிலைமையை உணர்ந்த சீடர்கள் அங்கிருந்து தப்பிக்க நினைத்தார்கள். குதிரையின் மேல் குருவை அமர வைத்தார்கள். குதிரையை இழுத்துக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டார்கள். இனி ஆபத்து இல்லை என்பதை உணர்ந்தார் குரு.

"சீடர்களே! இந்த நொண்டிக் குதிரை பத்துக் காசு பெறாது. முன்னரே ஐந்து காசு வரி கட்டினோம். இப்பொழுது ஐந்து பணம் போய் விட்டது. இதனால் இன்னும் என்னென்ன தொல்லைகள் வரப் போகின்றனவோ? எனக்குக் குதிரையே வேண்டாம். நான் நடந்தே வருகிறேன்" என்று புலம்பினார்.

"குருவே! அப்படிச் சொல்லாதீர்கள். நீங்கள் நடந்து வருவதை எங்களால் தாங்கமுடியாது" என்றார்கள் சீடர்கள். வழியில் வந்த ஒருவன் இவர்களின் பேச்சைக் கேட்டான். முட்டாள்களான இவர்களை ஏமாற்றலாம் என்று நினைத்தான்.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்த்தமலை



ஆன்மீகம் 100

இம்மலைக்கு ஆசான் தலையாட்டிச் சித்தர் வந்துற்ற போது இம்மலையின் பெருமைகளைக் கூறினார். இது மிகவும் தெய்வீகமான இடம் இங்கு வந்து சாதுக்களுக்கு வஸ்திர தானமும் அன்னதானமும் செய்தால் கர்மவினைகள் கட்டவிழும். நோய்கள் நீங்கி ஆரோக்கியத்தில் தெய்வீக வதனம் அமையும் என்றார். இந்த மலையில் மாலை ஆறு மணிக்குள் ஆகாரத்தை முடித்துக்கொள்ள வேண்டும்.

பிறகு இரவில் தம் குருநாதரை மனதில் இருத்தி தியானம் செய்தர் இம்மலையில் உலவும் சிவபெருமான் அவர்களுக்கு நல்லாசி வழங்குவார். இதை நேரிலேயே காணலாம். எந்த மலையிலும் ஆறுமணிக்கு மேல் உணவருந்தக்கூடாது அப்படி உணவருந்தினால் உண்ட மயக்கம் உறக்கத்தில் தான் ஆழ்த்தும் என்றார். மேலும் பேசும் போது இது ஸ்ரீ ராமபிரானுக்கு மிகவும் விருப்பமான மலை, இங்கு தங்கியிருந்த போது தான் இலங்கையிலிருந்து மீண்ட ஆஞ்சநேயர் அன்னை சீதாபிராட்டியின் இலச்சினை மோதிரத்தை ராமபிரானிடம் அளித்த இடமாகும் என்றார். அதோடு ஸ்ரீ இராஜசித்தரமண தீர்த்தம் எனும் பெயரும் இங்கு உள்ள தீர்த்தத்திற்கு ஏற்பட்டது என்று மலையிலன் வரலாற்றினை கூறிமுடித்தார்.

தீர்த்தமலைக்கு அன்று முதல் கடந்த இருபது வருடங்களுக்கு மேல் பல மெய்யன்பர்கள் அழைத்துச் சென்றிருக்கிறேன். இதில் மிகவும் முக்கியமானவர் இந்நூலில் முன்னரே அறிமுகப்படுத்திய திரு. வி. இராமதாஸ் ஐ.எ.எஸ் அவர்களாகும். இவரைப் போன்ற உத்தமசீலரை என் வாழ்நாளில் நான் கண்டதில்லை.

சித்தர்பெருமான் எனை அழைத்துச் சென்ற அத்தனை மலைகளுக்கும் திரு. இராமதாஸ் அவர்களை அடியேன் அழைத்துச்சென்றிருக்கிறேன்.



தீர்த்த மலையில் பாறையில் அன்னதானம்

அரசாங்க பணியில் உயர்ந்த இடத்தில் இருந்த அப்பெருமகன் ஆசான் மீது பக்தியும் என்னிடம் அன்பும் வைத்திருந்தார்கள். அவர் பழகுவதற்கு எளியவர். இனியவர். இவரை இந்த தீர்த்த மலைக்கு அடியேன் அழைத்துச்சென்று அங்கிருக்கும் புராதன ஆலயத்தையும் காட்டி கோயில் திருப்பணிக்காக உதவிடுமாறு வேண்டினேன். அவரும் அதற்கிணங்கி பெருமனத்தினராக அரசு நிதியிலிருந்து கோயிலுக்கு இருபது இலட்சம் ரூபாய்களை வழங்கினார்கள். ஆனால், கோயில் நிர்வாகிகள் திறமையுள்ளவர்களாகவும் தர்மசிந்தனையுடையவர்களாகவும் இருக்க வேண்டியது அவசியமல்லவா! அது இல்லாதது அவலத்திலும் அவலம். இன்று இறைநம்பிக்கைகூட பண்டமாற்று பேசுவதில் தான் வாழ்கிறது. இன்று கோயிலை கொள்ளையடிக்கின்றார்கள். கோயில் சொத்துக்களை அனேகர் அனுபவிக்கின்றனர். ஐம்பொன்சிலைகளை அமெரிக்காவுக்கே விசா இல்லாமல் அனுப்பிவைக்கிறார்கள். இந்நிலையில் யாரைக் குறை சொல்வது காலம்தன் இதற்கொல்லாம் பதில் சொல்லும் இறைவன் நின்று சொல்லுபவர் அல்லவா?

இந்த மலையில் இரவு தங்கி தானனதருமங்களைச் செய்து சித்தர்கள் பூஜை செய்தால் உறக்கத்தில் உதயமாகும், உன்னத காட்சிகளை உணர்ந்தவர்கள் அறிய முடியும்.

நான் பெற்ற இன்பம் பெருக வையகமெல்லாம் என்னும் தாயுமானவர் கொண்ட ஆசையைத்தான் நானும் கொண்டிருக்கிறேன். காட்டினால்தான் கூட்டுவான் தமிழன் என்றார் சித்தர் பெருமான். இனி கூட்டுவத உங்கள் கடமை.

தொடரும்

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

# அப்படி என்னதான் இருக்கிறது மெட்ராஸ் கஃபே படத்தில்...?

ராஜிவ் காந்தி கொலை செய்யப்பட்டு 20 ஆண்டுகளுக்குப் பின் ராஜீவ்காந்தியின் கொலையின் பின்னணி குறித்து இப்படி ஒரு படத்தை எடுக்க வேண்டிய அவசியம் என்ன? ஆறிய காயத்தைச் சொறிந்துவிட்டது போலத்தானே இருக்கிறது இந்தப்படம்? இந்திய உளவுத்துறையின் கண்ணோட்டத்தில் இப்படம் எடுக்கப்பட்டது. விடுதலைப்புலிகளைத் தீவிரவாதிகளை விடவும் கேவலமாகச் சித்தரித்து உள்ளனர் படத் தயாரிப்பாளர்கள். விடுதலைப்போராட்டத்தின் நியாயத்தையும் இந்திய அமைதிப்படை இலங்கையில் சென்று நடத்திய படுகொலை பற்றியும் அல்லவா காட்டியிருக்கவேண்டும்என்றுகேள்வி எழுப்பியுள்ளார் நாம் தமிழர் இயக்கத்தின் தலைவர் இயக்குனர் சீமான்.

இந்தப் படத்தில் மையப் பாத்திரம் ஏற்று நடித்திருக்கும் ஜான ஆப்ரகாம் படத்தைத் தயாரித்தவர்களுள் ஒருவர் என்பதால் எடுக்கும் முன் இலங்கை அதிபரை சந்தித்து வந்தார் என்று கூறப்படுகிறது. இலங்கையில் போரின்போது தமிழர்களுக்கு எதிராக மனித உரிமை மீறல்கள் எதுவும் நடக்கவில்லை என்று உலக மக்களிடம் காண்பித்துக் கொள்வதற்காக அவரே இந்தப் படத்துக்கான தயாரிப்பு நிதியை வழங்கியிருப்பதாகவும் ஈழ உணர்வாளர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். ராஜீவ் காந்தியை அப்பழுக்கற்றவராக சித்தரிக்கும் இந்தப் படத்தின் பின்னணியில் இந்தியாவை ஆளும் காங்கிரஸ் அரசும் இருப்பதாகவும் அவர்கள் குற்றம் சாட்டினார்கள்.

இவை அனைத்தையும் மறுத்துள்ள ஜான் ஆப்ரகாம் மெட்ராஸ் கஃபே ஒரு வணிக ரீதியான படம் என்றும் அது எந்தப் பக்கமும் சாராமல் எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார். ஆனால், தமிழ் உணர்வாளர்களின் எதிர்ப்புக்கணை தனிப்பட்ட முறையில் ஜான் ஆப்ரகாம் மீதும் தொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் மலையாளத்தைத்தாய்மொழியாகக்கொண்டவர் என்றும் முல்லைப் பெரியாறு முதல் பல விடயங்களை தமிழர்களை எதிரிகளாகப் பாவிக்கும் கேரளத்தவர்களின் தமிழர் காழ்ப்பு நடவடிக்கைகளில் ஒன்றாகவே இதைப் பார்க்க வேண்டும் என்றும் வைகோ உள்ளிட்டோர் கூறியிருக் கிறார்கள்.

கருத்துச் சுதந்திர ஆதரவாளர்கள் இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு அதிகமுக்கியத்துவம்அளிக்கவில்லை. படத்தின் மீதான தடையை எதிர்த்தவர்கள் எத்தனை மோசமான கருத்தாயினும் அதை வெளியிடுவது ஒருவரின் ஜனநாயக உரிமை என்று வாதிட்ட கருத்து சுதந்திரப் போராளிகள் ஒரு சாரார். இவர்கள் விஸ்வரூபம் விவகாரத்திலும் இதேநிலைப்பாட்டை எடுத்தார்கள். விடுதலைப்புலிகள் அமைப்பு தீவிரவாத அமைப்புத்தானே அதைப் பதிவு செய்வதில் என்ன தவறு என்று கேள்வி எழுப்பியவர்கள் மற்றொரு சாரார். இவர்களில் அ.மார்க்ஸ் முக்கியமானவர். விடுதலைப்புலிகளால் இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்பட்ட கொடுமைகளைப் பற்றி தொடர்ந்து பேசிவருபவரான மார்க்ஸின் கருத்து மெட்ராஸ் கஃபே படத்திலும் அதே தொனியில் ஒலித்தது. விஸ்வரூபம் விவகாரத்தில் படத்துக்குத் தடை கோரிய இஸ்லாமிய அமைப்புகளின் தரப்பில் நின்று தடையை வெளிப்படையாக ஆதரிக்கவில்லை என்றாலும் இஸ்லாமியர் அமைப்புகளின் நியாயங்களையும் கமலஹாசன் மீதான எதிர்ப்பையும் அதே முகநூலில் இவர் பதிவு செய்தார் என்பது கவனிக்கத்தக்கது.

தமிழகத்தின் இரு பெரும் கட்சிகளில் ஆளும் கட்சியான அ.இ. அ.தி.மு.க மெட்ராஸ் கஃபே விவகாரத்தில் முற்றிலும் விலகியே இருந்தது. தமிழக முதல்வர் ஜெ.ஜெயலலிதா மெட்ராஸ் கஃபே பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை தமிழீழ உணர்வாளர்களுக்கு ஆதரவாக அவர் அண்மையில் பல நடவடிக்கைகளை எடுத்திருந்தாலும் விடுதலைப்புலிகளை அமைப்பையோ அதன் தலைவரையோ அவர் என்றுமே ஆதரித்ததில்லை என்பதை வைத்து இந்த மௌனத்தைப் புரிந்துகொள்ளலாம். தி.மு.க.தலைவர் மு.கருணாநிதி, மெட்ராஸ் கஃபே படத்தைப் பார்த்து அதன் உள்ளடக்கத்தின் அடிப்படையில் அதைத் தடை செய்வதா வேண்டாமா என்று தமிழக அரசு முடிவெடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். விடுதலைப்புலிகள் விவகாரத்தில் முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களைப் பேசி வந்தவரான அவரது கருத்தை ஈழ ஆதரவாளர்களே காதில் போட்டுக்கொள்ளவில்லை. தமிழக அரசும் கண்டுகொள்ளவில்லை.



தேசியக் கட்சிகளில் காங்கிரஸ் கட்சி படத்தை ஆதரிக்கிறது என்பது செய்து அல்ல. தமிழக காங்கிரஸ் தலைவர்களான ஞானதேசிகன் உள்ளிட்டோர் படத்தில் அப்படி என்ன தவறு இருக்கிறது என்று கேட்குமளவுக்குப் போனார்கள்.

ஆனால், ராஜிவ் காந்தியைக் கொன்றதாக குற்றம்சாட்டப்பட்டு மரண தண்டனையை எதிர்நோக்கி இருக்கும் சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோரின் தண்டனையை விரைவில் நிறைவேற்ற வேண்டும் என்று குரலெழுப்பும் பாரதீய ஜனதா கட்சியின் மகாராஷ்டிரக்கிளை, மெட்ராஸ் கஃபே படத்துக்குத் தடை விதிக்க வேண்டும் என்று கோரியுள்ளதுதான் செய்தி. மகாரஷ்டிரத்தில் வாழும் எண்ணற்ற தமிழர்களின் மனம் புண்படக்கூடாது என்று அதற்குக் காரணம் சொல்கிறது.

தொடரும்

தமிழகத்திலிருந்து
கோபாலகிருஸ்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.ஆயரின் ரிட்மனு மீது விசாரணை; பிரதிவாதிகளை ஆஜராக உத்தரவு

(கொழும்பு)

**யாழ்.ஆயரினால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிவாதிகளை நவம்பர் 7 ஆம் திகதி நீதிமன்றத்திற்கு அழைக்கும் கட்டளையைப் பிறப்பிக்குமாறும் மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.**

பொது மக்கள் மற்றும் அவர்கள் சார்ந்த மறைமாவட்டம் என்பவற்றின் காணிகள் அரசாங்கத்தினால் ஏதேச்சாதிகாரமாக பறிக்கப்படவுள்ளதை எதிர்த்து யாழ்.ஆயரினால் ரிட் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

காணிமற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் மற்றும் யாழ்.மாவட்ட நில அளவை அதிகாரிகளே மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த ரிட்மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜா,நீதியரசர் டப்ளியூ. எம். எம்.மாலின் குணரத்ன ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் ஆராயப்பட்டது.

இந்த மனுவைத் தாக்கல் செய்த யாழ்ப்பாண ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம், றோமன் கத்தோலிக்க பேராயர் நிலையியல் சட்டப்படிதான் தனது மறைமாவட்டத்திலுள்ள காணிகளுக்கு உரிமையுள்ளவர் என கூறியுள்ளார்.

காங்கேசன்துறை வீதியில் தெல்லிப்பழையில் தடுப்பு வேலிகளுக்கு வெளியே காணி சுவீகரிப்பு சட்டத்தின் கீழ் காணிகள் சுவீகரிப்படவுள்ளதாக அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது என்றும், இந்த அறிவித்தல் 2013 ஆம் ஆண்டு ஏப்ரல் 20 ஆம் திகதி மரங்களில் ஒட்டப்பட்டிருந்தது.

குறிப்பிட்ட பகுதியில் தன்னுடைய காணிகளும் அடங்குவதாக அவர் தனது மனுவில் கூறியுள்ளார்.

இதன் காரணமாக நேரடியாகவும் சொந்த முறையிலும் தான் பாதிக்கப்பட்டதாக மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த காணிகளில் குடியிருந்து பின் வெளியேறியுள்ள நில உரிமையாளர்களை அரசு, இடம்பெயர்ந்தோர் என பட்டியலிட்டுள்ளது. அவர்கள் தற்போது நலன்புரி நிலையங்களில் அவதிப்பட்ட வண்ணமுள்ளனர்.

மனுதாரர் காணி அமைச்சரின் இந்த பிரகடனத்தை பிரதிவாதிகள் செயற்படுத்துவதை தடுக்கும் கட்டளையை நீதிமன்றம் பிறப்பிக்க வேண்டுமென தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# இந்தியாவின் துறைமுகங்களுக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்படுகிறது

## இலங்கையினால் அச்சம்

(சென்னை)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கரையோரங்களை பயன்படுத்தி தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்ற அச்சத்தில் இந்தியாவின் மூன்று துறைமுகங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்று பி.ரீ.ஐ செய்தி வெளியிட்டுள்ளது.

சென்னை, தூத்துக்குடி மற்றும் என்னூர் ஆகிய துறைமுகங்களில் ப்ாதுகாப்பை பலப்படுத்துமாறும் மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் உத்தரவிட்டுள்ளார்.

இந்தியாவில் தாக்குதல் நடத்துவதற்காக இலங்கையின் யாழ்ப்பாணத்தில் லக்சர் இ தொய்பா போராளிகள் பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக இந்திய புலனாய்வுத்துறை விடுத்த எச்சரிக்கையை அடுத்தே இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அநாமதேய தொலைபேசி அழைப்பு ஒன்று அண்மையில் இந்திய துறைமுகம் ஒன்றுக்கு இலங்கையிலிருந்து கிடைத்திருந்ததாக இந்திய செய்திகள் தெரிவித்துள்ளன.

இதேவேளை கல்பாக்கம் அனல் மின் நிலையம் ஸ்ரீகோத்தாவின் விண்வெளி ஏவுமையம் என்பவற்றின் பாதுகாப்புகளும் பலப்படுத்தப்பட்டுள்ளன. (அ-2)

# ஊடகத்துறை அமைச்சுக்கு கண்காணிப்பு எம்.பி.நியமிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற பேரவை உறுப்பினருமான ஏ.எச்.எம். அஸ்வர், தகவல் ஊடகத்துறை அமைச்சின் கண்காணிப்பு பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தகவல் ஊடகத்துறை அமைச்சில் நடைபெற்ற விசேட நிகழ்வில் வைத்து அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடமிருந்து 'நேற்று முன்தினம் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் இதற்கான நியமனப் பத்திரத்தைப் பெற்றுக் கொண்டார்.

இதன் போது பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர் கருத்துத் தெரிவிக்கையில்,

இவர்கள் எமது நண்பர்கள். சிரேஷ்ட ஊடகவியலாளர்களான இவர்களுடன் சேவையாற்றுவது மிகவும் இலகுவாக அமையும் என்றார்.

இதனையடுத்து தகவல் ஊடகத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் அமைச்சரின் தலைமையில் நடைபெற்ற அபிவிருத்தி தொடர்பான இணையத்தளத்தின் அங்குரார்ப்பண நிகழ்விலும் அஸ்வர் எம்.பி.கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)



வடபிராந்திய இலங்கை பொறியியலாளர் சங்கமும் யாழ்.முகாமையாளர் சம்மேளனமும் இணைந்து நடத்திய மின்சக்தி வழங்கல் தொடர்பான இடையூறுகள் என்னும் விடயம் தொடர்பிலான கலந்துரையாடல் அண்மையில் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பேராதனை பல்கலைக்கழக மின், இலத்திரனியவியல் பேராசிரியர் மஞ்சுளா பெர்ணாண்டோ கருத்துரை வழங்குவதையும் கலாநிதி என். அற்புதராஜா அருகில் இருப்பதையும் படத்தில் காணலாம்.

# குளிரூட்டிக்குள் வைத்து கொலை செய்ய முயற்சி

குளிரூட்டி இயந்திரத்துள் வைத்து தம்மை கொலை செய்ய முயற்சித்ததாக இலங்கை பெண் ஒருவர் சுமத்திய குற்றச்சாட்டை சவுதியிலுள்ள இலங்கை தூதரகம் மறுத்துள்ளது.

நிலங்கெதர தயாரத்ன என்ற குறித்த பெண் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் தொழிலுக்காக சவுதி சென்றுள்ளார்.

இந் நிலையில் தமது எஜமானர் தம்மைக் கொலை செய்யும் நோக்கில் குளிரூட்டியில் வைத்து பூட்டியதாக அவர் இலங்கையிலுள்ள தமது கணவருக்கு அறிவித்திருந்தார்.

எனினும் இது தொடர்பில் சவுதியில் உள்ள இலங்கை தூதரகம் மேற்கொண்ட விசாரணையின் போது குறித்த பெண்ணின் உடம்பில் சில எரிகாயங்கள் உள்ளபோதும் அவர் நலமாக உள்ளார் என்று தெரிய வந்துள்ளது. (அ-2)

# நவி பக்கச்சார்பற்று நடந்து கொள்வார்

## அமைச்சர் சமரசிங்க நம்பிக்கை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இலங்கை விஜயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

ஊடக அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மனுஸ நாணயக்கார, தமது கருத்தில் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு வந்து சென்ற பின்னர் அறிக்கை தயாரிக்கப் போவதில்லை. ஏற்கனவே தயாரித்துள்ள அறிக்கையின் அடிப்படையிலேயே இலங்கைக்கு வந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

நவநீதம்பிள்ளை, பக்கசார்பற்ற ரீதியில் நடந்து கொள்வார் என்று தான் எதிர்பார்ப்பதாக அமைச்சர் மஹிந்த சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

சிலர் தமது வீட்டில் இடம்பெற்ற கொள்ளை சம்பவங்களையும் நவநீதம்பிள்ளையிடம் முறையிட்டுள்ளார்கள் என்று அமைச்சர் பஷில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

எனினும் நவநீதம்பிள்ளையால் விஜயத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்படும் அறிக்கை திருப்தியற்றதாக இருக்குமானால், அது இலங்கைக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் நவநீதம்பிள்ளை வந்திருப்பதால் அரசாங்கம் உண்மையை அவருக்கு தெரிவிக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# உயிரியல் பசளையினூடாக நுண்ணங்கிகள் பரவும் அபாயம்

(கொழும்பு)

இரசாயன பசளைக்கு மாற்றீடாக பயன்படுத்தப்படும் உயிரியல் பசளையினூடாக நாட்டிற்குள் பாதகமான நுண்ணங்கிகள் பரவும் அபாயம் தலைதூக்கியுள்ளதாக தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி மற்றும் அணுசக்தி அமைச்சு எச்சரித்துள்ளது.

உயிரியல் பசளை வடிவில் நாட்டிற்குள் எடுத்து வரப்படும் பாதகமான நுண்ணங்கிகள் குறித்து கருத்துத் தெரிவித்துள்ள கண்டி பிரதான ஆய்வுநிறுவன நுண்ணங்கி உயிரியல் தொழில்நுட்ப பிரிவுத் தலைவர் பேராசிரியர் காமினி செனவிரத்ன, பாதகமான நுண்ணங்கிகளால் விவசாயத்துறையும் பெருந்தோட்டத் துறையும் [illegible] உயிரியல் பசளைகள் பயன்படுத்துவது தடுக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

விவசாயிகள் உயிரியல் பசளை பயன்படுத்துவதில் கூடுதல் ஈடுபாடு காட்டி வருகின்றனர். போதிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படாது இலங்கையில் உயிரியல் பசளைகள் உற்பத்தி செய்யப்படுவதோடு, சில தனியார் துறையினர் அவற்றை இறக்குமதி செய்தும் வருகின்றனர்.

உயிரியல் பசளையினூடாக பயன்படுத்தப்படும் நுண் ணங்கிகள் எமது மண்ணுக்கு உகந்தவை என எதுவித உறுதியும் வழங்கப்படாத நிலையிலே அவை உபயோகிக்கப்படுகின்றன எனவும் அவர் கூறினார்.

இரசாயன பசளை போன்றவற்றினால் ஏற்படும் பாதிப்பைவிட பாதகமான நுண்ணங்கிகளால் ஏற்படும் சேதம் அதிகமென்று குறிப்பிட்ட அவர், ஆரம்ப ஆய்வுநிறுவனத்தினூடாக உள்நாட்டுக்கு ஏற்ற நுண்ணங்கி உயிரியல் பசளை வகை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

எட்டு வருடங்கள் ஆய்வு கூடங்களிலும், வெளியிலும் ஆய்வுக்குட்படுத்தி இந்த பசளை தயாரிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் உயிரியல் பசளை பயன்படுத்துவது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். பொறுப்புவாய்ந்த நிறுவனங்கள் பசளையின் தரத்தை உறுதி செய்தபின் அதனைவிவசாயிகளுக்கு வழங்கும் முறையொன்று அறிமுக்கப்படுத்தப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்படுகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அதிகமான மனிதவுரிமை மீறல்களை ஜனாதிபதியே செய்து வருகிறார்

## கயந்த எம்.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

**அரசாங்கம் மனிதவுரிமை மீறல்களை செய்திருந்தால் ஜெனீவாவில் மட்டுமல்ல நரகத்துக்கு போயாவது குரல் கொடுப்பேன் என அன்று ஜெனீவா மாநாட்டில் உரையாற்றிய மகிந்த ராஜபக்ச இன்று ஜனாதிபதியானவுடன் பல மடங்கு அதிகமாக மனிதவுரிமை மீறல்களை செய்து வருகின்றார். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக குற்றம் சாட்டியுள்ளார்.**

இராஜகிரியவில்நேற்று முன்தினம் ஐக்கிய தேசியக் கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று இலங்கை விஜயத்தை மேற்கொண்டுள்ளார். எனினும் இன்று அரசாங்கத்தில் இருக்கும் கட்சிகளே இதற்கு எதிர்ப்பை தெரிவித்து வருகின்றன.

இவ்வாறு நாட்டின் மனித உரிமைகள் தொடர்பில் பொறுப்பு சொல்ல வேண்டிய அரசாங்கமே மோதிக் கொள்வதானது நகைப்புக்குரிய விடயம் மட்டுமின்றி வருந்தக் கூடியதுமாகும்.

யுத்த கால கட்டத்தில் மட்டுமல்ல இன்று வரையிலும் மனித உரிமை மீறல்கள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

நாட்டில் கொலை, கொள்ளை, ஆட் கடத்தல், கற்பழிப்பு என தினந் தினம் மக்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றனர்.

அரசாங்கம் இவற்றைக் கட்டுப் படுத்தாது இனவாத, மதவாத செயல்களைத் தூண்டி கொண்டிருக்கிறது.

நாட்டில் பொலிஸ் சிவில் அதிகாரம் முற்றாக அடக்கப்பட்டு விட்டது.

மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருகின்றது.

எனவே இவற்றை நிவர் த்தி செய்வ தற்கு அரசாங்கம் 17 ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

அரசாங்கம் இன்று வரையில் செய்து வந்த பாவங்களை நிவர்த்தி செய்வதற்காவது தொடர்ந்து 17 ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்தி மக்களாட்சியியை செயற்படுத்த வேண்டும்.

அரசாங்கம் சுயாதீனமாக செயற்படுகின்றதென்பதை சர்வதேசத்துக்கும் மக்களுக்கும் காட்ட முயற்சிக்கின்றது.

அதன்படி பொய்யான நாடகங்களை நாட்டில் அரங்கேற்றுவதனால் மக்களின் நலன்கள் பாதுகாக்கப்படமாட்டாது.

எனவே இம்முறை நடைபெறும் மாகாண சபைத் தேர்தல்களில் அரசாங்கத்துக்கு மக்கள் ஆட்சி என்றால் என்ன என்பதை உணர்த்த வேண்டும். அதை மக்கள் செய்து காட்ட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# நல்லூர் ஆலய சூழலில்...

நல்லூர் முருகன் மஹோற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு மாலை 6.45 முதல் இரவு 8.15 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

இதற்கமைய இன்று வியாழக் கிழமைதிருமதி விக்னேஸ்வரி நரேந்திரா வழங்கும் பாடல் கச்சேரி இடம்பெறும். இந்நிகழ்வில் அணி செய் கலைஞர்களாக வயலின் எ.ஜெயராமன், மிருதங்கம் எஸ்.மகேந்திரன் முகர்சிங் கே.நந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

• • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களம் நடத்தும் ஆன்மீக சிந்தனை, சமயச் சொற்பொழிவு, கலை நிகழ்வுகள் என்பன உற்சவகாலத்தில் தினமும் பிற்பகல் 3 மணிமுதல் 6 மணிவரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறு முக நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்று வருகின்றன.

இன்றைய நிகழ்வுகளாக மு.கௌரிகாந்தன் வழங்கும் குகசைவ சித்தாந்தம் என்னும் விடயப் பொருளிலான சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. தொடர்ந்து ஊரெழு சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப்பாடசாலை, அராலி கோமாதா அறநெறிப்பாடசாலை, உரும்பிராய் திருக்குமரன் அறநெறிப்பாடசாலை, மட்டுவில் ஸ்ரீ முத்துமாரி அம்மன் அறநெறிப்பாடசாலை ஆகியவற்றின் மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

• • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு சைவத் தமிழ் பண்பாட்டுக்கழகத்தினால் நடத்தப்படும் தெய்வீகப் பேருரை கலை நிகழ்வு, மாணவர் சொற்பொழிவு, கலைஞர் கௌரவிப்பு நிகழ்வுகள் மஹோற்சவ காலங்களில் தினமும் பிற்பகல் 6.30 மணி முதல் இரவு 8 மணிவரை நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் நடைபெறும்.

இதன்படி இன்று வியாழக்கிழமை சைவப்புலவர் நித்திய தசீதரன் வழங்கும் இறைபணி நிற்றல் என்னும் விடயப் பொருளிலான சொற்பொழிவு இடம்பெறும்.

• • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கந்தன் கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியத்தின் ப்ரம்மகான சபா நடத்தும் தெய்வீக இசைச் சங்கமம் நிகழ்வு மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீன புதிய மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது. இதன்படி இன்று ஹற்றன் செல்வி கார்த்திகேயக் குருக்கள் நிகேதனா வழங்கும் பாடல் கச்சேரி இடம்பெறவுள்ளது.

• • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு மாலை 7.15 மணி தொடக்கம் 7.45 மணிவரையும் யாழ்.சின்மயா மிஷன் ஆச்சிரம வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள் நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் சொற்பொழிவு ஆற்றி வருகின்றார். இந்நிகழ்வில் இன்று வியாழக்கிழமை சடங்குகளும் சம்பிரதாயங்களும் என்னும் விடயப் பொருளிலான சொற்பொழிவு ஆற்றவுள்ளார்.

• • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதா வாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா வழங்கும் பாரதவம்சம் பற்றிய இசைப் பேருரை இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் இன்று வியாழக்கிழமை பாஞ்சாலி சபதம் என்னும் விடயப் பொருளிலான இசைப் பேருரை இடம்பெறவுள்ளது.

# நல்லூரான் திருவடிக்கு பதினெட்டாம் திருவிழா



## பிள்ளைக் கலி தீர்க்கவா நல்லைக் கந்தா

குமர வடி வேலவனே குழந்தை வரம் தா எனக்கு
குழந்தையாக வந்து நீ பிறந்திடு வாயே
உன்னிடத்தில் என்குறையை சொல்லுகிறேனே நான்
உன்னை நம்பி வாழுகிறேன் அருள் புரிவாயே

(குமரவடி...)

அம்மா என்றோடி வந்து மடியில் விழுவாய் நான்
ஆனந்தமாய் அள்ளி அணைத்து முத்த மிடுவேன் நீ
துள்ளியோடிக் கொண்டு பல குறும்புகள் செய்வாய்
பிள்ளைக்கலி தீர்க்க வா நல்லைக் கந்தா

(குமரவடி...)

அம்மா என்றெனை அழைக்க மழலை இல்லையே- ஒரு
ஆறுதல் மொழி சொல்ல எவரும் இல்லையே
நம்பி மனம் நொந்து தினம் வாடுகிறேனே என்
நிலையை நீ அறிந்து அருள் புரிவாயே?

(குமரவடி...)

இணுவையூர் செல்வம் பவானந்தமூர்த்தி.

## நிம்மதி அளித்திடுவாயோ

அரவிந்த மலரில் அவதரித்தோனே
அமரர் தலைமையை ஏற்று நின்றோனே
பரமனின் காதில் உபதேசித்தோனே
பார்வதி வேலினைக் கைக்கொண்டோனே
வரமொன்று கேட்பேன் தந்திடுவாயோ
வாழ்வை வளமுறச் செய்திடுவாயோ
நிரந்தர நிம்மதி அளித்திடுவாயோ
நல்லை முருகனே ஏது செய்வாயோ!



கலைஞானச்சுடர்,
அரியாலையூர் சி.சிவதாசன்.

## நெஞ்சில் நிலைபெற்று வாழும் முருகனை தரிசி

உயிரிலும் மேலான இறைவனை தரிசி
உடல் பொருள் ஆவியில் ஏற்றி நீ தரிசி
மலரிலும் தேனான மனம் விட்டு தரிசி
மலை மகள் குமரனின் திருவடி தரிசி

எழில் நகை சிந்தும் வடிவேலனை தரிசி
என் உள்ளம் கவர்ந்த கந்தனை தரிசி
நினைத்தாலே நினிக்கும் நிமலனை திரிசி
மனம் சலிக்காமலே நோக்கி மருகனை தரிசி



அழைத்தாலே வரும் ஆறுமுகனை தரிசி
நெஞ்சில் நிலைபெற்று வரும் முருகனை தரிசி
கனவிலும் காட்சி தரும் கருணைக் கடவுளை தரிசி
என் நாளும் சிவசுதனை வேண்டி நீ தரிசி

சி.ஜெகன்,
பெரியபுலோ.

## நல்லூர் கந்தன் அநுபூதி

தினமு முனையான் மறந்தே யறியேன்
கனமா மனதிற் "தின"மே விடுவாய்
சினமாய்ப் பகைவர் களையே களைந்தே
மனங்கொண் டெதிர்வந் துறைநல் லூரா!



கலாபூஷணம், சந்தக் கவிஞர். நவ.பாலகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரம், சமூக வாழ்வின் பக்கங்கள்!

அரசியல் கலவாத காற்று வெளி இல்லை. அது சில இடங்களில் மேற்பரப்பில் துரத்திக் கொண்டு நிற்கும். அநேகமாக துறைகளில் அடியில் ஒளிந்து கொண்டு இயக்கும். சராசரி வாழ்க்கைக்கு வாழும் கோடிக்கணக்கான மக்களின் அன்றாட சீவியத்தில் ஒட்டுறவு இல்லாத மேல்தட்டு மக்களுக்கு இனிச் சொல்லப் போகும் உறவுகள் புரியாது.

ஏட்டில் படித்து, கற்பனையில் காட்சி அமைத்து, புரிந்து கொண்டேன் என்று சுயதிருப்தி கொள்பவர்கள், இதையெல்லாம் ஏற்கனவே பிராய்டு, இம்மானுவேல் கான்ட, பேட்ரன்ட் ரஸ்ஸல், போன்றவர்கள் அழகாக விளக்கிவிட்டார்கள். இது ஒன்றும் புதிதல்ல என்பார்கள்.

அண்மைக்காலமாக, அழிக்கப்பட வேண்டியவர்கள் என்ற சொல்லாடல் பலவீனமான தொனியில், ஆங்காங்கே தென்படுவதை கண்டிருப்பீர்கள். இருப்பினும் எதையும் அழிக்க முடியாது என்பது விஞ்ஞானம்.

அழிக்கப்படும்போது(?) அதன் அளவும், பண்பும் வடிவமும் கூட மாறும். ஆனால், அது அழியாது. இன்னொன்றால் மாறுமே தவிர அதனை எதனாலும் அழிக்க முடியாது.

ஆகவே, இந்த அழித்தல் என்கிற வார்த்தையின் அர்த்தம் என்ன? ஒன்றை அடியோடு இல்லாதொழிக்க முடியுமா? அழிக்கப்படும் பொருளோ, உயிரோ அல்லது சக்தியோ இருந்த வெளியை எது நிரப்பும்?..... இப்படிப் பல அறிவியல் சார்ந்த கேள்விகளை எழுப்ப முடியும்.

இந்த அழிப்பு வேலைக்கான அவசரதேவை என்ன? இனம் அழிந்துவிடும். ஆகவே இது தேவை. இது தான் புதிய அவதாரமெடுத்துள்ள இன இரட்சகர்களின் வியாக்கியானம்.

களை பிடுங்குவதாக நாடகம் போட்டு கதிர்களை வேரோடு பிடுங்கும் வேலை நடக்கிறது. தன்னை விட சுற்றி இருப்போர் எல்லோரும் அயோக்கியர்கள் என்கிற புராணத்தை முதலில் ஆரம்பிப்பார்கள். இது ஒருவகையில் மனப்பிறழ்வுதான்.

தனது உளவியல் குறைபாட்டை மற்றவர் புரிந்து கொள்ள முயற்சிக்கக்கூடாது என்பதற்காக இனம் அழியப் போகிறது என்கிற 2000 இல் உலகம் அழியப்போகிறது என்பது போலானதொரு வெருட்டலை அவிழ்த்துவிடுவார்கள்.

“அயோக்கியர்” என்கிற சொல்லின் அர்த்தம் என்ன? யோக்கியம் என்பதற்கு முன்னால் ஒரு “அ” வை போட்டால் அர்த்தமே மாறிவிடுகிறது. “சிங்கத்திற்கு முன்னால் “அ”போட்டால் அது அசிங்கமாகி விடுகிறது.

இந்த அர்த்தங்களின் அளவுகோலே வேறு. ஒருவரை “அயோக்கியர்” என்று நிறுவுவதற்கு எல்லாவிதமான அசிங்கமான வழிகளையும் பிரயோகித்துப் பாருங்கள். இவர் அந்த மாகாணத்தைச் சார்ந்தவர் என்பதால் இவரையும் நம்ப முடியாது என்று காட்ட ஊரின் பெயரை, பெயருக்கு முன்னால் திட்டமிட்டே இணைப்பார்கள்.

மக்களால் அதிகம் கூர்ந்து அவதானிக்கப்படுபவர் மீது தான் இத்தகைய அயோக்கியன் பட்டம் முதலில் சூட்டப்படும்.

மேலோட்டமாகப் பார்க்கையில் இதுவொரு தாழ்வுச் சிக்கலின் வெளிப்பாடு போன்று தோற்றமளிக்கும். ஆனால், தொடர்ச்சியாக மக்கள் மத்தியில் பேசப்படும் மனிதர்கள் மீது தேவிதமான பட்டமளிப்பு வலைப்பின்னல் போடப்படுவதால் இதன் பின்னால் சமூக விரோதக் கும்பலொன்றின் நிகழ்ச்சிநிரல் நிச்சயம் இருக்கும் என்பதை நிராகரிக்க முடியாது.

திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்படும் இந்த உளவியல் பரப்புரையில் ஒரு மனிதனின் அல்லது ஒரு சமூகத்தின் ஆளுமை குறித்தும் அவர் அதன் மீதான நம்பகத்தனமையானது எதனடிப்படையில் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்பது பற்றியும் விரிவாகப் பார்க்கப்படும்.

குறிவைக்கபட்ட மனிதனின் ஆளுமையில் சிதைவினை ஏற்படுத்த வேண்டுமாயின் அப்படி இருக்குமா? என்கிற சந்தேகம் துளிர்விடக்கூடிய வகையில் ஒரு கற்பனைக் கதையை உருவாக்க வேண்டும். அதைத் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டும்.



இந்தச் செயன்முறைக்கு ஜேர்மனிய கோயபலஸ் என்பவரே மகா குருவானவர்.

“பொய்யைப்பல தடவைகள் உரத்துச் சொன்னால் அது உண்மையாகிவிடும்” என்பது தான் ஹிட்லரின் வாரிசுகள் விட்டுச் சென்ற பாசிச மொழி. இந்த உளவியல் யுத்தத்தில் மறுபக்கத்திலிருந்து எதிர்வினை வந்தால் அது அந்த சிதைவுச் சிற்பியின் முதல் வெற்றியாக கணிக்கப்படும்.

உளவியல் சமரினை எதிர்கொள்பவர்கள் எருமை மாட்டின் மீது மழை பொழிந்தது போல் இருந்தால் பட்டமளிப் போரின் தாக்குதல் தீவிரமாகும். அவர்களுடைய பொய்மை நாடக அரங்கு ஆட்டங்காணும் வகையில் வார்த்தைகள் வசைவுகளாக உதிரும். அங்குதான் கோயபல்ஸ்களின் அண்டிக்கெடுக்கும் மாயமான தோற்றம் கலையத் தொடங்குகிறது.

தன்னைத்தவிர எல்லோருமே தவறான வழியில் செல்கிறார்கள் அல்லது கொண்டு செல்லப்படுகிறார்கள் என்று அழுத்திச் சொல்வதன் ஊடாக இரண்டு விதமான இலக்குகள் அங்கு குறிவைக்கப்படுகிறது.

ஒன்று தன்னை ஒரு மீட்பராக சாத்தான்களிடமிருந்து காக்க வந்த கடவுளராக சித்தரிக்க முற்படுவது.

இரண்டாவது தான் தவறானவர்கள் என்று சுட்டிக்காட்டும் மனிதர்கள் யாவரும் சமூகத்தை அழிக்கும் சக்திகள் என்று நிறுவ முற்படுவது.

பொதுவாக எல்லாச் சமூகத்திலும் பரபரப்புச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனை விழுந்தடித்துப் பார்க்கும் சிறு கூட்டம் ஒன்று எப்போதும் உண்டு.

அக்கூட்டத்தின் சிந்தனை மொழி பொது மக்களின் கூட்டு மொழியல்ல. மக்களின் கூட்டுமன உளவியலில் பெரிய மாறுதல்களை இவை எப்போதும் ஏற்படுத்துவதுமில்லை.

ஒரு கணத்திற்குரிய செய்தியாக அவை பேசப்படும் தவிர இது ஒரு ஆழமான கருத்துருவத்தை மக்களின் கூட்டுமன உளவியலில் உருவாக்காது.

இதில் இன்னொரு விதமான அணுகுமுறை ஒன்று கவனிக்கப்பட வேண்டும்.

அதாவது தமது பரப்புரைகளை மின்னஞ்சல் ஊடாக இடைவெளியற்று தொடர்ச்சியாக அனுப்புவது என்பதாகும்.

ஆயிரத்தில் பத்து பார்க்கப்பட்டாலே அதுவே சரியான ஆரம்பம் என்று கணிக்கப்படும்.

மின்னஞ்சலுக்கு அப்பால் தமது செய்திகளைக் காவிச் செல்லும் இணையத்தளங்களை தேடுதல் என்பது அடுத்த கட்டநகர்வாக அமையும்.

ஏதாவது ஒன்று அகப்பட்டுக்கொள்ளும். தேவையற்ற சர்ச்சைகளில் மாட்டுப்பட்டுள்ள இணையத்தையே இவர்கள் நாடுவார்கள்.

தமது பரப்புரைகளுக்கு தளம் கொடுக்கும் வரைதான் அவர்களிடையே உறவு நீடிக்கும். அது முடியும் போது அந்த இணையத்தின் மீதும் அழிவுக்குத் துணை போகும் சக்தி என்கிற குற்றம் சுமத்தப்படும்.

இந்த நவின யுக மீட்பர்கள் பற்றி எழுதவேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது?

கடந்த நான்கு வருடகாலமாக பெரும் வலிகளை ஆழமனதில் புதைத்து உள்ளுக்குள் குமுறிக்கொண்டிருக்கும் மக்கள் கூட்டத்தின் கூட்டுமன உளவியலை அடிபணிவு வாழ்க்கைக்கு ஏற்ற விதத்தில் மாற்றும் பாரிய முயற்சி பல தளங்களில் முன்னெடுக்கப்படுகிறது.

தருவதைப் பெற்றுக் கொள்வோம்; நாம் பலமிழந்து உள்ளோம்; பிறர் பலத்தில் தங்கி நிற்போம் என்று ஒரு வழுக்குப் பாதையில் பயணிக்க முற்படுவோர் ஒருவகையினர்.

கூட்டுப்பலமும் விடா முயற்சியும் நன்மைகளைப் பெற்றுத்தரும் என்பதில் நம்பிக்கை கொண்டோர் இன்னொரு வகையினர்.

இரண்டாவது வகையினர் ஆதரவுத் தளம் அமைத்துக் கொடுக்கும் ஊடகர்கள் மக்கள் நலன்விரும்பிகள் மீதுதான் இந்த தேசியச் சிதைவாளர்கள் தாக்குதல் தொடுக்கின்றனார்கள். இவர்கள் மீட்பர்களா? அல்லது யாராலும் மேய்க்கப்படுபவர்களா? என்பதை அறிந்து கொள்ள வேண்டிய அவசியம் மக்களுக்கு உண்டு .

சில விடயங்களை ஆழமாக எழுதினால் புரியாமல் போயிவிடும். எழுதாமல் விட்டாலும் அவை தொலைந்துபோய்விடும்.

(இதயச்சந்திரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்காளர் அட்டைகள் நேற்று முதல் விநியோகம்

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் நேற்றையதினம் முதல் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் திணைக்களம் தெரிவித்தது. இம்முறை தேர்தலில் வாக்களிக்க வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களைச் சேர்ந்த 43 இலட்சத்து 58 ஆயிரத்து 263 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

'வாக்காளர் அட்டைகள் நேற்று முன்தினம் தபால் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டதாக மேலதிக தேர்தல் ஆணையாளர் எல்.ஏ. ரத்நாயக்க கூறினார்.

தபால் திணைக்களத்தினூடாக நேற்று முதல் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார். விடுமுறை தினமான செப்டெம்பர் 8 ஆம் திகதி விசேட வாக்காளர் அட்டைவிநியோகம் இடம்பெறும் எனவும் அறியப்படுகிறது.

3 மாகாண சபைகளுக்குமான தேர்தல்கள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ளன. வாக்காளர் அட்டை விநியோகத்தை ஒட்டி விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. (அ-2)

# பொதுநலவாய மாநாட்டின் மூலம் பாரிய பொருளாதார நன்மைகள்

பொதுநலவாய உச்சி மாநாட்டை இலங்கையில் நடத்துவதன் மூலம் நாட்டின் பொருளாதார யுத்தத்துக்கு சிறந்த தீர்வு காண முடியுமென இலங்கை வங்கியின் முன்னாள் தலைவர் பேராசிரியர் காமினி விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இம்மாநாட்டையொட்டியதாக இலங்கையில் முன்னெடுக்கப்படவுள்ள வர்த்தக பேரவையில் பெரும் எண்ணிக்கையிலான சர்வதேசப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவிருப்பதாக சுட்டிக்காட்டிய அவர் இதன் மூலம் சுமார் இரண்டு பில்லியன் அமெரிக்க டொலர் முதலீடாக கிடைக்குமெனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கடந்த முறை பொதுநலவாய உச்சி மாநாடு பேர்த் நகரில் நடைபெற்ற போது இலங்கை அரசாங்கம் சார்பில் துணைத் தலைவராக தானும் அதில் கலந்து கொண்டதாக குறிப்பிட்ட பேராசிரியர் காமினி விக்கிரமசிங்க அதனைத் தொடர்ந்து அவுஸ்திரேலிய அரசாங்கத்துக்கு பல முதலீடுகள் கிடைத்திருப்பதை நினைவு கூர்ந்தார்.

பிரித்தானிய இளவரசர் சார்ள்ஸ் உட்பட 53 நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கை வருவதன் மூலம் எமது நாட்டின் புகழ் உலகெங்கும் பரவவிருப்பதாகவும் அவர் கூறினார்.

உலகின் பல நாடுகளுடனும் நெருக்கமான உறவுகள் தொடருவதற்கு இலங்கையில் பொதுநலவாய உச்சி மாநாடு நடைபெறவேண்டியது அவசியமெனவும் இதன் மூலம் எமது நாட்டிற்கு பல அரிய வாய்ப்புக்கள் வந்து குவியவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

# முதியவர்களுக்காக விசேட அடையாள அட்டை அறிமுகம்

முதியவர்களுக்காக விசேட அடையாளஅட்டையொன்று அறிமுகம் செய்யப்படவுள்ளது. நவீன தொழில்நுட்பத்துக்கு அமைவாக இந்தப் புதிய அடையாள அட்டை அறிமுகம் செய்யப்படவுள்ளது. 60 வயதுக்கும் மேற்பட்டவர்கள் இந்த அடையாள அட்டைக்காக விண்ணப்பிக்க முடியும் என சமுக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

இதில் முதியவர்களின் தனிப்பட்ட விபரங்கள், இரத்த மாதிரி, வங்கிக் கணக்கு, நோய்கள் உள்ளிட்ட பல்வேறு விபரங்கள் உள்ளடக்கப்படவுள்ளன. இந்த அடையாள அட்டையைப் பயன்படுத்தி அரசாங்க மருந்தகங்களில் விசேட விலைக் கழிவுகளை பெற்றுக் கொள்ள முடியும். தேசிய அடையாள அட்டை இல்லாத முதியவர்கள் இந்த அடையாள அட்டையைப் பயன்படுத்தி தேர்தலில் வாக்களிக்க முடியும். அரச நிறுவனங்களில் ஏதேனும் சேவையை பெற்றுக் கொள்ளும் போது இந்த அடையாள அட்டையை வைத்திருப்போருக்கு முன்னுரிமை அளிக்கப்படவுள்ளது. (அ-2)

# கதிர்காமரின் மகனின் காணி வழக்கு; எதிராளிகளை ஆஜராக அழைப்பாணை

(கொழும்பு)

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் மகன் தனது பரம்பரை சொத்தான காணியை அரசாங்கம் பொறுப்பேற்கவுள்ளதை எதிர்த்து தாக்கல் செய்த ஆணைகோரும் மனு தொடர்பில் பிரதிவாதிகளுக்கு நோட்டீஸ் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு எதிராளிகளுக்கு அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள தனது பரம்பரைச் சொத்தை அரசாங்கம் பொறுப்பேற்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரின் மகன் எஸ்.ஜே. கிறிஸ்ரியன் கதிர்காமர் ஆணைகோரும் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

கடற்படையைச் சேர்ந்த அட்மிரல் ராஜநாதன் கதிர்காமர் இலங்கை இராணுவத்தின் மேஜர் செல்வநாதன் கதிர்காமநாதர் சட்டத்தரணி சாம் கதிர்காமர் ஆகியோர் தனது நெருங்கிய உறவினர்கள் என்றும் கூறியுள்ளார்.

ஆழ்வார் மலையடி மாவிட்டபுரத்தில் உள்ள தனது மூதாதையர் வழி சொத்தான இந்த நிலம் பொது தேவைக்காக தேவைப்படுவதாக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் அறிவித்தல் விடுத்துள்ளதாகவும் ஆனால் இதற்கான காரணம் பாதுகாப்பு படையணி தலைமையகம் அமைத்தல் என கூறப்பட்டுள்ளதாகவும் அவர் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

யுத்தம் நிறைவடைந்த பின்னரும் பாதுகாப்புப் படை 6 ஆயிரத்து 381 ஏக்கர் காணிகளைப் பிடித்து வைத்திருப்பதாகவும் அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காணியை பொறுப்பேற்கும் அறிவித்தல்கள் உயர்பாதுகாப்பு வலயத்தினுள் வரவில்லை என்பதையும் அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

தனது முதுசமான காணியை பிரதிவாதி பொறுப்பேற்பதை தடை செய்யும் தடையுத்தரவு ஒன்றை நீதிமன்றம் பிறப்பிக்க வேண்டுமென்றும் அவர் தனது மனுவில் கோரியுள்ளார்.

இந்த வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜா மற்றும் நீதியரசர் டபிள்யூ எம். மாலினி குணரத்ன ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே எதிராளிகளுக்கு இந்த அழைப்பாணையை அனுப்பும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ-2)

# முழந்தாளிடவைத்த நபருக்கு எதிராக குற்றப்பத்திரிகை

(கொழும்பு)

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் முன்னிலையில் ஆசிரியை ஒருவரை முழந்தாளிடவைத்த வடமேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஆனந்த சரத்குமாரவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

புத்தளம் மேல் நீதிமன்றத்திலேயே இக்குற்றப்பத்திரிகை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தாக்கல் செய்யப்பட்டது.

குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டபோது தான் நிரபராதி என்று பிரதிவாதி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதனையடுத்து எதிர்வரும் நவம்பர் 25 ஆம் திகதி முதல் வழக்கை விசாரணை செய்வதற்கு தீர்மானித்த நீதவான் சாட்சிகளுக்கு நோட்டீஸ் அனுப்புமாறு உத்தரவிட்டார்.

இந்நிலையில் பிரதிவாதி சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி தனது தரப்பை சேர்ந்தவருக்கு கடும் பிணை நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளமையால் அதனைத் தளர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி நின்றார்.

எனினும் அதற்கு முறைப்பாட்டாளர் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி கடும் எதிர்ப்பைத் தெரிவித்தார். இந்தச் சம்பவத்தைப் பாரதூரமாக கருதியே நீதவானின் விசாரணை தவிர்க்கப்பட்டு குற்றப் பத்திரிகை சட்டமா அதிபரினால் நேரடியாகவே தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு விசாரணையை எதிர்வரும் நவம்பர் 25 ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக மூன்று நாட்களுக்கு நடத்துவதற்கு நீதவான் நேற்று முன்தினம் தீர்மானித்தார். (அ-2)




- ✱ 1708 - செப்பு நாணயம் முதன் முதலில் ஜப்பானில் வார்க்கப்பட்டது.
- ✱ 1658 - புரொட்டஸ்தாந்து சீரமைப்பு யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக வண. டாக்டர் பால்டியஸ் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ✱ 1756 - ரஷ்யாவின் இரண்டாம் பிரடெரிக் ஜேர்மனியின் சாக்சனியை முற்றுகை யிட்டான்.
- ✱ 1782 - திருகோணமலை கோட்டையை பிரெஞ்சுக் காரர் பிரித்தானியரிடம் இருந்து மீளக் கைப்பற்றினர்.
- ✱ 1825 - போர்த்துக்கல் பிரேசிலைத் தனிநாடாக அறிவித்தது.
- ✱ 1831 - மைக்கேல் பரடே மின்காந்தத் தூண்டலைக் கண்டுபிடித்தார்.
- ✱ 1842 - நாஞ்சிங் உடன்படிக்கையின் படி முதலாம் அபின் போர் முடிவுக்கு வந்தது. ஹொங்கொங் ஐக்கிய இராச்சியத்தின் குடியேற்ற நாடாக அறிவிக்கப்பட்டது.
- ✱ 1885 -கோட்லீப் டாயிம்லர் மோட்டார்சைக்கிளுக்கான காப்புரிமம் பெற்றார்.
- ✱ 1898 - குட்இயர் கம்பனி ஆரம்பிக்கப்பட்டது.
- ✱ 1907 -கியூபெக் பாலம் அமைக்கப்படும்போது இடிந்து வீழ்ந்ததில் 75 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.
- ✱ 1944 - அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஜீ. ஜீ. பொன்னம்பலம் தலைமையில் அமைக்கப்பட்டது.
- ✱ 1949 - சோவியத் ஒன்றியம் ஜோ 1 என்ற தனது முதலாவது அணுகுண்டு சோதனையை கசகஸ்தானில் நடத்தியது.
- ✱ 1966 - பீட்டில்ஸ் தமது கடைசி நிகழ்ச்சியை சான் பிரான்சிஸ்கோவில் நடத்தினார்.
- ✱ 1991 - சோவியத் உயர்பீடம் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் அனைத்து நடவடிக்கைகளையும் முடக்கியது.
- ✱ 2005 -அமெரிக்காவின் லூசியானா முதல் புளோரிடா வரையான கரையோரப் பகுதிகளை சூறாவளி கத்ரீனா தாக்கியதில் ஆயிரத்து 836 பேர் உயிரிழந்ததுடன் 115 பில்லியன் பெறுமதியான சேதமும் ஏற்பட்டது.

**பிறப்புக்கள்**

- ✱ 1632 - ஜான் லாக், ஆங்கிலேயத் தத்துவவியலாளர் (இ. 1704)
- ✱ 1958 - மைக்கேல் ஜாக்சன், அமெரிக்கப் பாடகர், (இ. 2009)

**இறப்புகள்**

- ✱ 2008 - ஆர்வி, தமிழ் எழுத்தாளர் (பி. 1919)
- ✱ 2009 - மாவை வரோதயன், ஈழத்து எழுத்தாளர்


**சிறப்பு நாள்**

- ✱ இந்தியா - தேசிய விளையாட்டு தினம்

**மைக்கேல் பரடே**

மைக்கேல் பரடே 1791 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 22 ஆம் திகதி லண்டனில் பிறந்தார். பிரித்தானிய வேதியியலாளரும், இயற்பியலாளரும் ஆவார். இவர் மின்காந்தவியல், மின்வேதியியல் ஆகிய துறைகளுக்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளைச் செய்துள்ளார். இக்காலச் சோதனைச்சாலைகளில் சூடாக்குவதற்கான ஒரு கருவியாக உலகளாவிய முறையில் பயன்படுகின்ற பன்சன் சுடரடுப்பின் ஆரம்ப வடிவத்தைக் கண்டுபிடித்தவரும் இவரே.

மைக்கேல் பரடே, உலக வரலாற்றில் மிகச் சிறந்த அறிவியலாளர்களுள் ஒருவராகக் கருதப்படுகின்றார். சில அறிவியல் வரலாற்று ஆய்வாளர்கள் அறிவியல் வரலாற்றின் மிகச் சிறந்த சோதனையாளராக இவரைக் குறிப்பிடுகின்றனர். இவருடைய முயற்சிகளின் காரணமாகவே மின்சாரம் பொதுவான பயன்பாட்டுக்கு உகந்த ஒன்றாக உருவானது எனலாம். இவர் 1867 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி உயிர்நீத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 ஆவது சட்டத் திருத்தத்திற்கு ஆதரவளித்தமை முஸ்லிம் காங்கிரஸ் செய்த மிகப் பெரிய பாவம்!

## மனம் திறக்கிறார் அமைச்சர் ஹக்கீம்

(கொழும்பு)

**18 ஆவது சட்ட திருத்தத்திற்கு ஆதரவளித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் சேர்ந்து மிகப் பெரிய ஒரு பாவத்திற்கு உடந்தையாக இருந்திருக்கின்றோம் என அக்கட்சியின் தேசிய தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.**

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பற்றி இன்று நாலாபுறமும் பலவிதமான விமர்சன கருத்துக்கள் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசுடனான உறவு சம்பந்தமாக ஏளனமான சில வார்த்தைப் பிரயோகங்கள் செய்யப்பட்டதாகவும் கேள்விப்பட்டேன்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கும் அரசுக்கும் இருக்கின்ற உறவு சம்பந்தமான உண்மை நிலைமை என்ன என்பது மிகத் தெளிவாகத் தெரிந்த விடயம்.

நான் இன்று இந்த அரசாங்கத்தில் நீதி அமைச்சராக இருக்கின்றேன் என்பது மிகவும் சங்கடத்திற்கிடமான விடயமாக பலராலும் பார்க்கப்படுகின்றது.

இன்று பாதுகாப்பு அமைச்சு இரண்டு கூறுகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றது. கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவோடு பொலிஸ் திணைக்களம் சட்டமும் ஒழுங்கும் என்ற புதிய அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கின்றது.


இவையெல்லாம் அடுத்து வருகின்ற சர்வதேச கண்காணிப்பு சம்பந்தமான விடயங்களில் இந்த அரசாங்கம் பதிலளிக்க வேண்டிய நிலையிலேயே இப்படியான சில அதிரடி நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றது.

இந்த அரசாங்கத்தின் உள்ளேயிருந்து விமர்சிக்கின்ற அதன் போக்கை கண்டிக்கின்ற ஒரு பாத்திரமாகவே நாம் இயங்கிக் கொண்டு வருகின்றோம்.

அது இந்த அரசாங்கத்திற்கு மிகவும் நெருக்கடியையும் மிகவும் பெரியளவில் அசௌகரியத்தையும் ஏற்படுத்துகின்றது என்பது அமைச்சரவையில் இருக்கின்ற சகல அமைச்சர்களுக்கும் தெளிவாக தெரியும்.

ஏனெனில் பலமான அந்தஸ்தில் ஜனாதிபதி இருப்பதற்கு நாங்கள் பெரிய பரோபகாரத்தைச் செய்திருக்கின்றோம்.

இங்கிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் சகலரும் சேர்ந்து மிகப் பெரிய ஒரு



பாவத்திற்கு உடந்தையாக இருந்திருக்கின்றோம். அது இந்த 18 ஆவது சட்ட திருத்தத்திற்கு ஆதரவளித்ததாகும்.

இந்தச் சட்டத்திருத்தத்தின் மூலம் ஆயுட்காலம் முழுவதும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடலாம். இல்லையென்றால் இன்னும் இரண்டு வருடத்தில் அவர் நிரந்தரமாக ஓய்வு எடுக்க வேண்டும்.

இப்போதிருந்தே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் தலைமைப் போட்டி ஆரம்பித்திருக்கின்றது. அந்தப் போட்டியால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டாக மூன்றாக துண்டாடப்பட்டிருக்கலாம். ஆனால் அவை எதுவும் நடக்காது மிகப் பலம் வாய்ந்த ஒரு ஜனாதிபதியாக இந்த நாட்டு ஜனாதிபதி இருக்கின்றார் என்றால் அதற்கு நாங்கள் துணை போயிருக்கின்றோம் என்ற ஒரு விடயமுமிருக்கின்றது.

ஜனாதிபதியோடு ஆகக் கூடுதலாக முரண்படுகின்ற ஒரு அமைச்சர் இருப்பாராயிருந்தால் அது முஸ்லிம் காங்கிரஸ் தலைவரே என்று யாரைக் கேட்டாலும் சொல்வார்கள்.

இன்று இந்த அரசாங்கமும் ஜனாதிபதியும் மாகாண சபையின் அதிகாரங்களைப் பறிப்பதற்கு எடுத்த நடவடிக்கையின் போது அதைத் தடுப்பதற்காக நான் வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்ட நிலையிலும் அவசர அவசரமாக நாடு திரும்பினேன். நான்தான் அந்த அமைச்சரவைப் பத்திரத்தைக் காரசாரமான முறையில் அமைச்சரவையில் ஜனாதிபதியோடு வாதிட்டு அதைச் செய்ய முடியாது எனக் கூறினேன்.

இந்த மாகாண சபை முறையில் உயிர் நாடியாக இருப்பது சட்டமியற்றும் அதிகாரம். அந்த சட்டமியற்றும் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கின்ற மாகாண சபை அதிகாரம் சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் சட்டமியற்ற முடியாது.

சட்டமியற்ற வேண்டுமென்றால் அந்த மாகாண சபைகளின் அங்கீகாரத்தைப் பெற்றுத்தான் இயற்ற வேண்டும். இல்லையென்றால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்று இயற்ற வேண்டும். இந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொடுப்பதில் எங்களுக்கொரு பேரம் பேசும் சக்தி இருக்கின்றது.

எங்களிடம் எட்டு ஆசனங்கள் இருக்கின்றன. நாங்கள் இல்லாது அதனை அடைய முடியாது என்கின்ற நிலையும் இருக்கின்றது.

எனவே அரசாங்கம் நெருக்கடிக்குள்ளே போய்விட்டது. அதனை கிடப்பிலே போட வேண்டிய நிலைமைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுவிட்டது.

உண்மையிலேயே இந்தச் சட்டமூலத்தைக் கொண்டு வந்திருக்க வேண்டியவன் நான். ஆனால் எனக்கும் இது தெரியாது. இரவோடிரவாக இச்சட்டமூலத்தை கொண்டு வந்துவிட்டார்கள் எனக் கேள்விப்பட்ட உடனேயே நான் வெளிநாட்டுப் பயணம் செல்ல வேண்டிய நிலையிலும் நாடு திரும்பி அமைச்சரவையிலே நான் நிகழ்த்திய போராட்டத்தின் விளைவாகத்தான் இன்று அரசாங்கம் இவ்விடயத்தில் பின்வாங்கியிருக்கின்றது.

இல்லையென்றால் இதோடு சேர்ந்து காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் எல்லாவற்றையும் அகற்றிவிட்டு நாங்கள் செய்துவிடலாம். ஏனென்றால் வடக்கிலே தேர்தல் நடத்த முன்னர் இந்த விடயத்தைச் செய்ய வேண்டும் என்று ஒரு முயற்சி நடந்தது. ஆனால் இவை எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு எங்கள் அமைச்சர்களில் சிலர் வாயே திறக்காமல் இருந்தார்கள் என்றார். (அ)

# ஊடக அமைப்புக்கள் இலங்கை ம.உ.ஆணைக்குழுவில் முறைப்பாடு

(கொழும்பு)

வெலிவேரிய சம்பவம் தொடர்பில் செய்திகளை சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களுக்கு ஏற்பட்ட நிலைமை தொடர்பில் ஊடக அமைப் புக்கள் நேற்று முன்தினம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடொன்றை பதிவு செய்தன.

அத்துடன் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் மேற்படி நிறுவனங்கள் ஆணைக்குழுவை வலியுறுத்தி உள்ளன.

ஊடக நிறுவனங்களால் முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளின் அடிப்படையில் உரிய விசாரணைகளை மேற்கொள்வதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்என இலங்கைமனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்டச் செயலாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

வெலிவேரிய சம்பவத்தில் ஊடகவியலாளர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருந்தால் அல்லது அவர்களுக்கு பாதிப்புகள் ஏற்பட்டு இருந்தால் அது தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழு விசேட கவனம் செலுத் தும்.

இதேவேளை வெலிவேரிய மக்களிடத்திலும் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டு விடயங்களை நிறுவனம் ஆராய்ந்து வருகின்றது.

பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களும் இது தொடர்பாக ஆணைக்குழுவிடம் முறைப்பாட்டை முன்வைத்துள்ளனர். எனவே அவர்களை அழைத்து சம்பவம் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொண்டு மேலதிக விசாரணைகளை நடத்தவுள்ளோம் எனத் தெரிவித்துள்ளார். (அ-2)



இயக்கச்சியிலிருந்து 12 கி.மீ. தூரத்திலுள்ள கட்டைக்காடு [illegible], 55 ஆவது பிரிவு படையினரால் அண்மையில் புனரமைப்பு செய்யப்பட்ட போது...

# உள்நாட்டு விவகாரங்களில் நவிபிள்ளை தலையிடக்கூடாது

## அமைச்சர் குமாரவெல்கம எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை தலையீடு செய்வதை அனுமதிக்க முடியாது என போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

மத்துகமவில் நடந்த கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார் .

அவர் தொடர்ந்து கூறுகையில் ,

நாட்டின் எந்தப் பகுதிக்கும் சென்று வருவதற்கு நவநீதம்பிள்ளை அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உலகின் பல்வேறு பகுதிகளிலும் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகப் படைகள் கொடுமைகளை இழைத்த போது நவநீதம்பிள்ளை மௌனமாகவே இருந்தார்.

2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த பின்னர் இலங்கையை ஐ.நா. குறி வைத்து தாக்கி வருகின்றது.

அமைச்சர் ரவூப் ஹக்கீமுடனான சந்திப்பின் போது பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க வேண்டும் என்று நவநீதம்பிள்ளை கோரியுள்ளார்.

ஆனால் அமெரிக்காவில், பிரித்தானியாவில், இந்தியாவில் இன்னும் பல நாடுகளில் தீவிரவாத எதிர்ப்புச் சட்டங்கள் நடைமுறையில் உள்ளன.

போருக்குப் பிந்திய நல்லிணக்க முயற்சிகளை அமெரிக்காவின் தலையீடுகள் சீரழித்து விட்டன என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் வன்முறைகளுடன் தொடர்புடைய 36 பேர் கைது

தேர்தல் வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 36 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாணசபை தேர்தல்களுடன் தொடர்புடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேர்தல் சட்டவிதிகள் மீறப்பட்டமை தொடர்பில் மூன்று மாகாணங்களிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுவரையில் 68 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கட்சிகளுக்கு இடையிலான மோதல்களை விடவும் உட்கட்சி மோதல்கள் தொடர்பிலேயே அதிகளவான முறைப்பாடுகள் செய்யப்படவுள்ளன. (அ-2)

# வடக்கு மாகாணத்தில் ஊடகங்கள் சுயாதீனமாக செயற்படுகின்றன

## எடுத்து விளக்கினார் பிரதம செயலாளர் விஜயலட்சுமி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் ஊடகங்கள் சுயாதீனமாக செயற்பட்டு வருகின்றன என வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளைக்கு வடக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பில் விளக்க மளிக்கும் கூட்டமொன்று யாழ். பொது நூலகத்தில் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்றது.

இதன்போது மீள்குடியேற்றம், கல்வி, சுகாதாரம், விவசாயம், மீன்பிடி என அனைத்து துறைகள் துரித அபிவிருத்தி யடைந்து வருகின்றன என அடுக்கிக் கொண்டு சென்ற பிரதம செயலாளர் அபிவிருத்தியின் நிறைகளை மட்டும் கூறியதோடு குறைகளை கூறத் தவறிவிட்டார்.

மேலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் வடக்கின் துரித அபிவிருத்தியில் பாரிய பணியாளர்கள் வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இக் கூட்டத்தின் போது வடக்கு மாகாணத்தின் 5 மாவட்ட அரச அதிபர்கள் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர், வடமாகாண கல்வி அமைச்சின் செயலர் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (அ-4)

# குடும்பத் தகராறு காரணமாக 18 பேர் காயமடைந்தனர்

கரவெட்டி இராஜ கிராமத்தில் ஏற்பட்ட குடும்ப தகராறில் 18 பேர் காயமடைந்துள்ளனர். இச் சம்பவம் நேற்று புதன்கிழமை காலை 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி பிரதேசத்தில் இடம்பெற்ற குடும்பத் தகராறு விரிவடைந்ததனாலே 18 பேர் காயமடைந்துள்ளனர். இதில் 5 பெண்களும் 13 ஆண்களும் அடங்குகின்றனர்.

இவர்கள் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னர் நெல்லியடி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ-9-60)

# ராஜபக்ஷவின் ஆட்சியில் பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதில்லை

## எதிர்க்கட்சி தலைவர் குற்றச்சாட்டு



மகிந்த ராஜபக்ச ரெஜிமெண்ட் ஆட்சியில் இருக்கும்வரை பெண்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப்படமாட்டாது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மகிந்த ராஜபக்ச ரெஜிமெண்டின் ஆட்சி இருக்கும் வரை பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்படமாட்டாது. இதனை நினைவில் வைத்து இலங்கை பெண்கள் வாழ வேண்டும்.

தெற்காசியாவில் உள்ள ஏனைய நாடுகளில் பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டாலும் இலங்கையில் மகிந்த ராஜபக்சவின் அரசாங்கம் கடந்த சில வருடங்களாக பெண்களின் உரிமைகளை மீறி வருகிறது. சட்டத்தின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டால் மட்டும் பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டு விடாது. ஏனைய நாடுகளில் சட்டத்தின் சுதந்திரம் பாதுகாக்கப்பட்டு வருவதால் அங்கு பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன.

இதன் காரணமாக சுதந்திரமான பொலிஸ் ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டு எந்த தலையீடுகளும் இன்றி செயற்பட பொலிசாருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்றார். (அ-2)

# விளக்கம் கோருகிறது இல.ம.உ ஆணைக்குழு

(கொழும்பு)

வெலிவேரிய பிரதேசத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பான கூட்டத்தில் கலந்து கொள்ளத் தவறிய அரச நிறுவனமொன்றிடம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விளக்கம் கோரியுள்ளது.

சில ஊடகப் பிரதிநிதிகளிடம் உரையாற்றிய மனித உரிமைகள் ஆணைக்குழு, குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு கோரி வெலிவேரிய ரத்துபஸ்வெல பிரதேசத்தில் இடம்பெற்ற வன்முறை தொடர்பாக கலந்துரையாட 26 அரச நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. எனினும், அக் கலந்துரையாடலில் ஒரு அரச நிறுவனம் மட்டும் கலந்து கொள்ளவில்லை. அதற்கு விளக்கமளிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவித்துள்ளது.

இக் கூட்டத்தில், வெலிவேரிய மோதல் மற்றும் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# மகிந்த தேர்தலில் வெற்றி பெறாவிட்டால் நவி அம்மையார் யாரை சந்தித்திருப்பார்?


(கொழும்பு)

மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக் தெரிவு செய்யப்படாது போயிருந்தால் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் சிங்கள அகதிகளை சந்திக்க நேர்ந்திருக்கும் என்று அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

சிலாபம் மானுவன்கம பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரத்தில் கலந்து கொண்ட போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், 2005 ஆம் ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ச வெற்றி பெறாது போயிருந்தாராயின் என்ன நடந்திருக்கும்? பிள்ளை அம்மையார் இன்று இலங்கையில் மனித உரிமைகளைத் தேடி வந்திருப்பார்.

எனினும் மகிந்த ஜனாதிபதியாக செய்யப்படாது வேறு ஒருவர் அந்த பதவிக்கு வந்திருந்தால் பிள்ளை அம்மையார் இலங்கைக்கு வந்து புத்தளத்திலுள்ள சிங்கள அகதிகளை பார்க்க நேர்ந்திருக்கும்.



அன்றைய ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு வாக்களித்தாலும் ஒன்றுதான் என்று மக்கள் நினைத்து வாக்களித்திருந்தால் இன்று நாடு இந்த இடத்தில் இருந்திருக்காது.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலுக்கு பிறகு நாடு முன்னோக்கி சென்றதா? பின்நோக்கி சென்றதா? என்பதை மாகாண சபைத் தேர்தலில் வாக்களிக்க போகும் சகலரும் நினைத்து பார்க்க வேண்டும்.

அரசாங்கத்தில் பல குறைபாடுகள் இருக்கலாம். நாட்டை ஆட்சி செய்த சகல அரசாங்கங்களிடமும் குறைபாடுகள் இருந்தன. அதனை இல்லை என்று எவரும் கூற முடியாது என்றார். (அ-2)

# 2009 மே 18 ஆம் திகதிக்கு பின்னர் நாட்டில் வன்முறைகளே இல்லை

## இப்படி கூறுகின்றார் அமைச்சர் கெஹலிய

(கொழும்பு)

இலங்கையின் உண்மை நிலையை சர்வதேசத்துக்கு தெளிவுபடுத்துவதற்கான வாய்ப்பாக பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாடு அமையும் என தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய நாட்டின் பிரபல பத்திரிகையான த ஒஸ்ட்ரேலியன் இதழில் பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டுக்கு அண்மித்த இக்காலத்தில் இலங்கையின் உள்நாட்டு நிலைமைகள் தொடர்பாக தெளிவுபடுத்தும் வகையில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டிருந்த நாளிலிருந்து இதுவரை எந்த ஒரு வன்முறையும் நடைபெறாத நாடாக இலங்கை திகழ்கிறது.

இலங்கையின் முதலீட்டுத் துறை மேம்பாட்டிற்கும் சர்வதேச நாடுகளுக்குமிடையிலான வர்த்தகத் தொடர்பினை பலப்படுத்தவும் இம்மாநாடு உறுதுணையாக அமையும்.

முப்பது வருடகால யுத்தத்துக்குப்பின் இலங்கை தற்போது மீளக்கட்டியெழுப்பப்பட்டு வருகிறது.

குறிப்பாக யுத்த சூழலில் பின்னடைவு கண்டிருந்த வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பாரிய அபிவிருத்தி கண்டு வருகின்றன.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சுமார் மூன்று இலட்சம் மக்களுக்கான மீள்குடியேற்ற நடவடிக்கைகள் நிறைவு பெற்றுள்ளதுடன், அவர்களது இயல்பு வாழ்க்கைக்கான அனைத்து வசதிகளையும் அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது.

யுத்தம் இடம்பெற்ற பிரதேசங்களில் ஆயிரக்கணக்கில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருந்தன. கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளை படையினர் மேற்கொண்டிருந்ததுடன் 95 வீதமான பணிகள் நிறைவடைந்துள்ளன.

இலங்கையைப் பொறுத்தவரை முதலீடுகளுக்கும் வர்த்தக நடவடிக்கைகளுக்கும் மிக வாய்ப்பான சூழல் தற்போது நிலவுகிறது. நாட்டின் அனைத்து பகுதிகளிலும் தற்போதைய அரசாங்கம் பாரிய அபிவிருத்தி களை மேற்கொண்டுள்ளது. பொருளாதாரத்தில் நாடு 6.75 என்ற ரீதியில் வளர்ச்சி கண்டுள்ளதுடன் அதை மேம்படுத்தும் பல்வேறு திட்டங்களும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சட்டம் ஒழுங்கு முறையாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. குற்றம் புரிவோர் தொடர்பில் எவ்வித பாரபட்சமுமின்றி சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் வெலிவேரிய பகுதியில் இடம்பெற்ற சம்பவமொன்றில் இராணுவத்தினர் தவறிழைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு எதிரான விசாரணைகள் இராணுவ நீதிமன்றத்தில் இடம் பெற்று வருகின்றன.

இத்தகைய சூழலில் நாட்டுக்குக் களங்கம் விளைவிக்கும் வகையில் தேசிய சர்வதேச ரீதியில் அரசாங்கத்துக்கு எதிராகவும் நாட்டை சந்தேகத்தோடு நோக்கும் வகையிலும் வெளிநாடுகளில் வாழும் எல்.ரீ.ரீ.ஈ ஆதரவாளர்கள் மற்றும் சில அமைப்புக்கள் பொய் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

வங்குரோத்து நிலையை அடைந்துள்ள சில எதிர்க்கட்சிகள் நாட்டில் ஊடக சுதந்திரம் இல்லையென கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன. எனினும் முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் இலங்கையில் தற்போது ஊடக சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

யுத்த சூழல் முற்றாக மாற்றப்பட்ட நாட்டில் சிறந்த சுதந்திரமான சூழல் நிலவுவதை சர்வதேச சமூகம் உணர வேண்டும்.

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்ட பின் அதாவது புலிகளின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்ட 2009 மே 18 ஆம் திகதி முதல் இலங்கையில் எந்த வன்முறைச் சம்பவங்களும் இடம் பெறவில்லை என்பதை உறுதியாகக் கூறமுடியும்.

பொதுநலவாய நாடுகள் மாநாட்டிற்கு முன்னோடியான வர்த்தக மாநாட்டில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சர்வதேச வர்த்தக சமூகத்தினர் கலந்து கொள்வரென எதிர்பார்க்கின்றோம்.

தற்போது வர்த்தகர்கள் முதலீட்டாளர்கள் பலர் இலங்கைக்கு வருகை தந்து ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளனர் என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புதுக்குடியிருப்பு பி.சபையின் ஒலுமடு உப அலுவலகம்

# சொந்த இடத்தில் இயங்க கோரிக்கை

**(முல்லைத்தீவு)**

**முல்லை.மாவட்ட ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் ஒலுமடு உப அலுவலகம் அதன் சொந்த இடத்தில் இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

இவ் உப அலுவலகம் கடந்த 1987-2008 வரை சொந்த இடத்தில் இயங்கி போருக்கு பின்னர் 2010 ஆம் ஆண்டு முதல் திருமுறிகண்டி ஆலயத்திற்கு அருகில் தற்காலிக கட்டடத்தில் இயங்கிவருகின்றது.

நிரந்தர கட்டடத்தில் இயங்கும் போது பொது நூலகம், சித்த ஆயுர் வேதவைத்தியசாலைமற்றும் ஏனைய வசதிகளுடன் இவ் வலுவலகம் இருந்தது. ஒரு மாதத்திற்கு 3 இலட்சம் ரூபா வருமானத்தையும் ஈட்டிவந்தது. தற்போது தற்காலிக கட்டடத்தில் இயங்கிவரும் இவ் உப அலுவலகத்திற்கு கட்டடவசதி உட்பட தளபாடவசதி, கணனி வசதி, மலசல கூட வசதி, தங்குமிடவசதி, குடிநீர் வசதி என்பனவும் இன்மையால் பல அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இவ் உப அலுவலகத்திற்கு நிரந் தர சாரதி, காவலாளி, வேலைமேற் பார்வையாளர், வருமானவரி அறவீட் டாளர், தொழில்நுட்ப உத்தியோகத் தர் ஆகியோர் இல்லை. நூலக வசதி, வைத்தியசாலை வசதி என்பனவும் கிடையாது.

அம்பகாமம், தச்சடம்பன், மண வாளன் பட்டமுறிப்பு, இந்துபுரம், பனிக்கன்குளம், ஒலுமடு, மாங்குளம், திருமுறிகண்டி ஆகிய இடங் களில் உள்ள 41 கிராமங்களில் 1942 குடும் பங்கள் இவ் உப அலுவலகத் தையே பயன்படுத்துகின்றனர்.

இவ் உப அலுவலகம் சொந்த இடத்தில் இயங்காமையால் ஒலுமடு வில் இருந்து 25 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள திருமுறிகண்டி அலுவலகத் திற்கு மக்கள் தமது பணம், நேரம் என்பவற்றை செலவு செய்து செல்லவேண்டிய நிலையுள் ளது.

எனவே இவ் உப அலுவலகம் அதற்குரிய இடத்தில் இயங்க அர சாங்க அதிபர், வடமாகாண உள் ளூராட்சி அமைச்சின் செயலாளர், முல்லை.மாவட்ட பிராந்திய உள் ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகி யோர் நடவடிக்கை எடுக்க வேண்டு மென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-267)




## பத்தன் மோட்டை முருகன் ஆலய விக்கிரகங்கள் திருட்டு

(பூந்தோட்டம்)

கண்டாவளை பத்தன் மோட்டை முருகன் ஆலயத்தின் விக்கிரகங் கள் நேற்றுமுன்தினம் இரவு திருடப் பட்டுள்ளதாக ஆலய தர்மகர்த்தா சபையினர் தெரிவித்துள்ளனர்.

ஆலயத்தின் கதவை உடைத்து உட்புகுந்த திருடர்கள் ஆலயத்தின் உட்புறத்தில் இருந்த ஐம்பொன்னி னாலான எழுந்தருளி முருகன், தெய்வயானை விக்கிரகங்களை திருடிச் சென்றுள்ளனர்.

காலையில் ஆலயத்திற்கு சென்ற பக்தர் ஒருவர் கதவு திறந்த நிலை யில் இருப்பதை அவ தானித்து ஆலய தர்மகர்த்தா சபையினருக்கு தகவல் கொடுத்துள்ளார்.

உடனடியாக ஆலயத்திற்கு சென்ற தர்மகர்த்தா சபையினர் விக் கிரகங்கள் திருட்டு போயுள்ளமையை உறுதிப்படுத்தினர். திருடப்பட்ட இரு விக்கிரகங்களினதும் பெறுமதி ஏறத் தாழ பத்து இலட்சம் என ஆலய தர்மகர்த்தா சபையினர் தெரிவித் துள்ளனர்.

இவ்ஆலயத்தில் இவ்வாண்டு இரு தடவைகளும் கடந்த ஆண்டு ஒரு தடவையும் திருடர்கள் ஆலய கதவை உடைத்து உட்சென்று ஏறத் தாழ மூன்று இலட்சம் ரூபா பெறுமதி யான தீபங்களையும் ஆலய உடை மைகளையும் திருடிச் சென்றமை குறிப்பிடத்தக்கதாகும். (ம-266)


## வரிப்பணத்தை செலுத்தினால் மானிய விலையில் உரம்

(பூநகரி)

பூநகரி கமநல சேவை பிரிவில் இவ்வாண்டு காலபோக பயிர்ச் செய் கையில் ஈடுபடவுள்ள விவசாயிகள் காலபோக ஏக்கர் வரிப்பணத்தை பூநகரி கமநல சேவை நிலையத் தில் செலுத்துமாறு அறிவிக்கப்பட் டுள்ளது.

இக்கால போகத்திற்குரிய ஏக்கர் வரிப்பணத்தை செலுத்தி பற்றுச் சீட்டை சமர்ப்பிப்பதன் மூலமே மானிய விலையில் உரவகை களை பெற் றுக் கொள்ள முடியும் என அறிவிக் கப்பட்டுள்ளது.

இவ்வாண்டு பூநகரி கமநல சேவை பிரிவில் 6 ஆயிரத்திற்கு மேற் பட்ட ஏக்கர் நெற்காணிகளில் கால போக பயிர்ச் செய்கை நடைபெறவுள ளமை குறிப்பிடத்தக்கது. (ம-84)



வேளாங்குளப் பகுதியில் இரவு வேளையில் காட்டு யானைகள் தொடர்ச்சியாக பயன் தரும் வாழை, பாப்பாசி, போன்ற மரங்களை சேதப்படுத்தியும் வீடுகளை தாக்கியும் தொடர்ச்சியாக அக்கிராமத் திற்குள் சேதத்தை ஏற்படுத்திய வண்ணம் இருப்பதாக அக்கிராம மக்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக் கது.

## மின்சாரம் தாக்கியதில்; இளைஞன் படுகாயம்

(மல்லாவி)

மாங்குளத்தில் இருந்து ஏ-9 வீதி யில் உள்ள பனிக்கன்குளம் என் னும் இடத்தில் வர்த்தக நிறுவனம் ஒன்றின் விளம்பரப் பலகையை அமைத்து கொண்டிருந்த இளை ஞர் ஒருவர் 33 ஆயிரம் வலுக் கொண்ட மின்சாரத்தினால் தாக் குண்டு உடல்கருகி எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவது, இப் பகுதியில் மைக்கோலா குளிர்பான நிறுவனத்தின் விளம்பர பலகை ஒன்றை அமைத்து கொண் டிருந்த இளைஞன் இரும்பு குழாய் ஒன்றை கையிலெடுத்த போது அது தவறுதலாக அதிசக்தி வாய்ந்த மின் சார கம்பியில் மோதியதன் காரண மாக மின்சார தாக்குதலுக்கு உள்ளா னார்.

இச்சம்பவத்தில் தென் பகுதியைச் சேர்ந்த எம்.ஜி.சாந்தகுமார் (வயது - 21)என்ற இளைஞரே உடல் கருகிய நிலையில் சிகிச்சை பெற்று வருகி றார்.

இச் சம்பவத்தினால் மின்சாரம் துண்டிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த முல்லை. மாவட்ட மின்சார சபையின் பொறியி யலாளர்கள் மின் கம்பியில் தொங்கி கொண்டிருந்த இரும்பு குழாயினை அகற்றி துண்டிக்கப்பட்ட மின்சா ரத்தை சீர் செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ம-15)

## வட்டக்கச்சி விவசாய பயிற்சி நிலையத்தில் விவசாயக் கண்காட்சிக்கு ஏற்பாடு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சியில் அமைந்துள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத் தில் சூழலுடன் நட்புறவான விவசா யத்தில் புதுயுகம் நோக்கி என்னும் தொனிப் பொருளில் விவசாயக் கண்காட்சி நடத்தப்படவுள்ளது. இவ் விவசாயக் கண்காட்சி வளாகத்தில் பல காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் பயிர்ச்சி கிச்சை முகாம் சிறப்பான முறை யில் ஒழுங்கமைக்கப்பட்டு வருவதாக வடமாகாண விவசாய பணிப்பாளர் சி.சிவகுமார் அறிவித்துள்ளார்.

விவசாயிகள் செய்கை பண்ணும் பயிர்களின் விளைவு குறைவதில் நோய்கள் பூச்சிகளே பெரும்பங்கை வகிக்கின்றன. நோய்களையும் பூச சிகளையும் கட்டுப்படுத்தி சிறப்பான விளைவைப் பெறுவதற்கு விவசாயி கள் பெரும் சிரமங்களையும் சவால் களையும் எதிர்நோக்குகின்றனர்.

இவற்றை கட்டுப்படுத்துவதற்காக சிபார்சு செய்யப்பட்ட அளவை விட கூடிய அளவில் பீடை நாசினிப் பிர யோகம் மேற்கொள்ளப்படுகின்றது.

இதன் காரணமாக சூழலும் நாமும் நுகர்வோரும் நஞ்சூட்டப்பட்டுகின் றனர். விவசாயிகள் தாம் செய்கை பண் ணும் பயிர்களில் ஏற்படும் நோய் பூச்சித் தாக்கங்களைச் சரியாக அடையாளம் காணத் தவறுகின்ற னர். இதனால் பொருத்தமான பீடை நாசினிகளைச் சரியான அளவில் விசி றாத நிலையே காணப்படுகின்றது.

ஒருங்கிணைந்த பீடை முகாமைத் துவ முறைகளைக் கையாளாமல் உடனடித் தீர்வான பீடை நாசினிக ளுக்கு நேரடியாகச் செல்கின்றனர்.

இதனால் பீடைநாசினிகளின் மீதி கள் உற்பத்திப் பொருட்களிலும் மண் ணிலும் தங்குகின்றன. அது மட்டு மன்றி பூச்சிகளுக்கு எதிர்ப்பு சக்தி உரு வாவதற்கும் உற்பத்திச் செலவு அதி கரிப்பதற்கும் ஏதுவாக அமைகின்றன.

இவற்றுக்குத் தீர்வுகாண்பதற்கு ஏதுவாகவே இப் பயிர்ச்சிகிச்சை முகாம் அமைக்கப்பட்டு வருகின் றது. விவசாயிகள் தங்கள் பயிர்க ளில் ஏற்பட்டிருக்கும் பூச்சித்தாக் கங்கள் நோய்த்தாக்கங்கள் ஆகிய வற்றின் மாதிரிகளைக் கொண்டு வந்து தாவர வைத்தியர்களிடம் காண் பித்து பொருத்தமான சிபாரிசுகளை யும் ஆலோசனைகளையும் பெற் றுக் கொள்ளமுடியும். வழங்கப்படும் ஆலோசனைகளும் சிபா ரிசுகளும் பரிந்துரை செய்யும் படிவத்தில் வழங்கப்படும்.

விவசாயிகளுக்கு தீர்வுகளை பெற் றுக் கொள்வதற்காக பிரச்சினை களின் அடிப்படையில் நெல், மறு வயற்பயிர்கள் மரக்கறிகள், பழப் பயிர்களில் துறைசார்ந்த தாவர வைத்தியர்களிடம் அனுப்பப்படுவார் கள். பூச்சித் தாக்கங்கள், நோய்த் தாக்கங்கள், மண்சார் பிரச்சினை கள், தாவர போசாக்கு குறைபாடு தொடர்பான பிரச்சினைகளுக்கான சிபாரிசுகளும் ஆலோசனைகளும் இப் பயிர்ச் சிகிச்சை முகாமில் மிகச் சிறந்த முறையில் வழங்கப்படும்.

எனவே அனைத்து விவசாயிக ளும் மாதிரிகளுடன் வருகை தந்து இப்பயிர்ச் சிகிச்சை முகாமில் பங்கு பற்றி ஆலோசனைகளையும் சிபாரி சுகளையும் பெற்றுக் கொள்ளு மாறு அவர் கேட்டுள்ளார். (அ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்நோக்கத்தை வாளால் அறுத்துக் கொல்வதைவிட நகைமுகத்தால் சாதித்துக் கொள்வதே சாலச்சிறந்ததாகும். – ஷேக்ஸ்பியர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# கைதான இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக இலங்கை கடற் பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 34 இந்திய மீனவர் களுக்கும் விளக்கமறியல் நீடிக்கப்பட் டுள்ளது.

இந்தியாவின் தமிழகத்தின் காரைக் கால் மற்றும் நாகபட்டினம் பகுதியைச் சேர்ந்த 34 மீனவர்கள் கடந்த மாதம் 30 ஆம் திகதி இரவு இலங்கை கடற் படையினரால் பருத்தித்துறை முனைப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட் டிருந்தனர்.

இதனையடுத்து பொலிஸாரிடம் ஒப் படைக்கப்பட்ட 34 மீனவர்களும் பருத் தித்துறை நீதிமன்றில் ஆஜர் படுத்தப் பட்டு நேற்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந் நிலையில் நேற்றையதினம் பருத்தித்துறை நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் 34 இந் திய மீனவர்களும் ஆஜர்படுத்தப்பட்ட போது அடுத்தமாதம் 4 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விடப்பட்டதாக யாழ்.இந்திய துணைத் தூதரகத்தின் உதவித் துணைத்தூதுவர் எஸ்.டி.மூர்த்தி தெரிவித்தார். (செ–6)

## துப்பாக்கிச் சூடு நடத்துமளவில் வடக்கின் தேர்தல் நிலைமை

வடபகுதியில் துப்பாக்கி வேட்டுச்சத்தங்களுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. இனி சீனவெடி களே சத்தமிடும் என்றிருந்த வேளையில், நேற்று முன்தினம் 27ஆம் திகதி சாவகச்சேரிப் பகுதியில், ஒரே அணி சார்ந்த வேட்பாளர்களிடையே துப் பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளமை, வட பகுதியில் பெரும் அச்சத்தையும் ஆச்சரியத்தையும் ஏற் படுத்தியுள்ளது.

துப்பாக்கிச்சூடு நடத்துமளவில் என்ன நடந் தாயிற்று என்ற கேள்வி நியாயமாயினும், அதற் கான பதிலை இந்த நாட்டில் அறிந்து கொள்வதற் குப் பல வருடங்கள் எடுக்கும்.

எதுவாயினும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குறிப்பிட்ட இரு வேட்பாளர்களி டையே ஏற்பட்ட முறுகல் நிலையும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற துப்பாக்கி வேட்டும் வட பகுதியில் மீண்டும் ஆயுத கலாசாரம் தலை தூக்கி விட்டதா? என்ற சந்தேகத்தை உருவாக்கி யுள்ளது.

அதாவது, நாட்டில் ஆயுத கலாசாரம் முடிவுக் குக் கொண்டு வரப்பட்டு விட்டதென்று அரசு கூறு கின்ற நிலையில், ஆளும்தரப்பின் வேட்பாளர் கள் துப்பாக்கிச் சூடு நடத்தியமை; அதிலும் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த நேரத்தில் – ஜனாதிபதி இந்த நாட்டில் இல்லாத போது வடக்கில் துப்பாக்கிச் சூடு நடத்தியமை சாதாரணமான விடயமன்று.

இச் செயலானது வடபகுதியில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை வேரூன்ற எடுத்த முயற்சி களைக் கடுமையாகப் பாதிக்கும் என்று கூறலாம்.

இதற்கப்பால் வடபகுதியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கொண்ட அரசியல் இராஜதந் திரம் தோற்றுவிட்டதென்று கூறுவது பொருத்த முடையதாகும்.

அதாவது வடக்கு மாகாணத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழமக் கள் ஜனநாயகக் கட்சி போட்டியிடுவதை விரும் பாத ஜனாதிபதி, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி போட்டியிட வேண்டும் என விரும்பினார்.

ஜனாதிபதியின் இந்த இராஜதந்திர வியூகத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மௌனமாகவே கையாண்டார். ஆளும் கட்சியின் சார்பில் மூன்று பிரிவுகள் வேட்பாளர்களை நிறுத்திக் கொண்டன.

இதில் ஈழமக்கள் ஜனநாயக கட்சியும் ஒன் றாயினும் அந்தக் கட்சி தனித்துவமாக – அமை தியாக தேர்தலைச் சந்திக்கத் தயாரானபோது, ஆளும் கட்சியில் வேட்பாளர்களாகப் போட்டி யிடும் ஏனைய இரு பிரிவுகளும் துப்பாக்கியால் சுடும் அளவில் நிலைமையை மோசமாக்கின.

இந்தச் சம்பவம் ஜனாதிபதிக்கு நிச்சயம் விருப்ப மானதாக இருக்க முடியாது.

ஆக, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியை அவர்களது சின்னத்திலேயே தேர்தலில் போட்டி யிட அனுமதித்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு, ஜனாதிபதி வருமளவில் அவர் நியமித்தவர்கள் நடந்து கொண்டனர்.

எதுவாயினும் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா தொடர்ந்தும் மௌனத்தைக் கடைப் பிடித்தால் வடபகுதியில் அரசு நிறையவே கற்றுக் கொள்ளும்.

இதற்கு அங்கு நீங்கள்; இங்கு நாங்கள் என்ற ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்துவது தமி ழன் சரியான சந்தர்ப்பத்தில் ஒன்றுபட்டான் என்று உலகம் கூறச் செய்ய முடியும். நடக்குமா?

## உபதபாலதிபர்களுக்கு பயிற்சிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

நாடளாவிய ரீதியில் எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறவுள்ள உபதபா லதிபர்களுக்கான தடைதாண்டல் பரீட் சையை முன்னிட்டு விசேட பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக் கிழமை அன்று நடைபெறவுள்ளது.

அகில இலங்கை தமிழ் பேசும் உப தபாலதிபர்கள் சங்க யாழ்ப்பாணக்கிளை யின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அஞ் சல் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் களினால் இவ் விசேட பயிற்சிக் கருத் தரங்கு நடத்தப்படவுள்ளது.

இவ் பயிற்சிக் கருத்தரங்கை நடத்து வதற்கு இடத் தெரிவை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் கலந்து கொள்ள வுள்ள உபதபாலதிபர்கள் இன்று வியாழக் கிழமை புங்குடுதீவு – இறுப்பிட்டி உப தபாலதிபருடன் தொடர்புகொண்டு தமது வரவை உறுதிப்படுத்திக் கொள்ளு மாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை எதிர்பார்ப்பு வினாக்கள் குறித்து இக் கருத்தரங்கின்போது பயிற்சியளிக்கவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (செ)

## சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி
### இந்துவாக வாழ்வோம்

நல்லைக் கந்தப்பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வழங்கும் கேள்வி பதில்கள்

**28.08.2013க்கான வினாவும் விடையும்:–**

**வினா:–சடங்குகளுக்கும் சம்பிரதாயங்களுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் எவை?**

**விடை:** வாழ்க்கைக்கு வழிகாட்டும் வாழ்வியல் தத்துவத்தை வேத, ஆகம முறைப்படி கிரியைகளாக ஆற்றுவது சடங்குகள். இவை காலநியதிகளுக்கேற்றபடி மாறுபடாதது.

சம்பிரதாயம் என்பது முன்னோர்களால் மரபுரீதியாக பின்பற் றப்பட்டு வந்தவை. சம்பிரதாயம் கால நியதிகளுக்கேற்றபடி மாறலாம்.

29.08.2013: **வினா:– பிரதட்சணம் செய்கிறோம் எதற்காக?**

விடை நாளை...

மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடைகளை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி (01.09.2013) நண்பகல் 12 மணிமுதல் பிற்பகல் 4 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் கையளிக்கும் போது துணுக்குகளில் வரும் கேள்விகளுக்கு சரியான பதிலைச் சொல்லும் அனைவருக்கும் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும். 18 வயதிற்குட்பட்டவர்கள் மட்டும் பங்குபற்றலாம்.

**சின்மயா மிஷன்
யாழ்ப்பாணம்**

**இல.9, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்.**

## சத்திய தரிசனம்



இறைவனுடைய ஆசி ஒரு உள்ளுணர்வாகவோ ஒரு சமிக்ஞையாகவோ வரமுடியும். இறைவனுக்கு உகந்த குணநலன்களைச் செயற்படுத்தி வாழ்கிறோமா என்பதை ஒரு சாதகன் அகத்து ஆய்வின் மூலம் புரிந்து கொள்ள முடியும். அப்படிப்பட்ட தூய வாழ்க்கையை அவன் வாழும் போது அவனுக்கு ஏற்படும் திருப்தியும் அமைதியும் இறைவ னது அருள் அவனுக்கு கிடைத்து விட்டதற்கான அடையா ளமாகும்.

ஜெபம் செய்வதற்கும் தியானிப்பதற்கும் சாதகன் ஒரு நாமத்தையும் ஒரு உருவத்தையும் தேர்ந்து எடுத்துக் கொள்ள வேண்டும். பஜனை செய்யும் போது எல்லாத் தெய்வங்களையும் புகழ்ந்து மெய்மறந்து பாடி மகிழலாம். ஆனால் அப்போதும் அந்த எல்லா நாமங்களும் எல்லாத் திருவுருவங்களும் நீ தேர்ந்து எடுத்துக்கொண்டுள்ள அந்த இஷ்ட தெய்வம்தான் என்று புரிந்துகொண்டு பாடி பக்தி செய்யவேண்டும். எல்லா நாமங்களும் எல்லா உருவங்களும் சமமான சக்தியுடையவை. உனக்குப் பிடித்ததை தேர்ந்தெடு.

இந்த உருவத்தை எடுத்துக்கொண்டு நான் பூவுலகத்திற்கு வந்திருப்பது ஸ்தூல வடிவில் நான் உடன் இருக்கத் தேவையில்லாத யோகிகளுக்காக அல்ல. (நான் எப்பொழுதும் அவர்களுடன் இருக்கிறேன்) அவர்கள் தங்களுக்குள்ளேயே என்னைக் கண்டுவிட்டதால் அவர்களுக்கு என் உதவி தேவைப்படவில்லை. அதேபோல் நாள் முழுமையும் அறியாமையில் மூழ்கியுள்ள நான் உருவெடுத்து வந்திருப்பதனால் பயன்பெற முடியாதவர்களுக்காகவும் இங்கு வரவில்லை. நான் வடிவெடுத்து வந்திருப்பது சரியான பாதையில் வழி நடத்தப்பட்டால் பயன் பெறக்கூடிய உங்களுக்காகத்தான் நான் வந்திருக்கிறேன்.

## சம்பூர் தொடர்பிலும் பேசுவேன் – நவிபிள்ளை

(மட்டக்களப்பு)


சம்பூர் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் பேசுவேன் என ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணை யாளர் நவிபிள்ளை தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் கிழக்கு பகுதிக்கு ஐ.நா. ஆணையாளர் விஜயம் மேற் கொண்டிருந்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் குறிப் பிடுகையில்,

எனது விஜயத்தின் இறுதியில் இலங்கை அரசாங்கத்தின் உயர் மட் டத்தினரை சந்திக்கவுள்ளேன். இதன் போது சம்பூர் மக்களின் மீள்குடியேற் றம் குறித்து பேசுவேன்.

சொந்த இடங்களில் மீள்குடியேற் றம் செய்யப்படாது மாற்று இடத்தில் குடியேற்றப்பட்டதனால் நீங்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக நான் அறிவேன் என அவர் மேலும் தெரிவித்தார். (செ–1)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்



### விரத நாட்களில் ஏன் எண்ணெய் தேய்த்து குளிக்கக்கூடாது?

விரத நாட்களிலும் நோன்பு நாட்களிலும் எண்ணெய் பூசிக் குளிக்கலாகாது. எண்ணெய் தேய்த்துக் குளிப்பதை மிக முக்கியமானதாகக் கருதியிருக்கும் நாம் இப்படி ஒரு விதிவிலக்கைக்கொண்டாடுவது வெறும் மூடநம்பிக்கை என்று கூறிவந்தனர். ஆனால் இதன் விஞ்ஞான அங்கீகாரம் இப்போது வெளிப்பட்டுள்ளது.

சனிக்கிரகத்தின் சக்தியிலிருந்து உருவானதாகக் கருதிவரும் எண்ணெய் தலைக்குச் சுற்றிலும் ஓர் புகை வளையம் உருவாக்குகின்றது. இவ்வளையம் இருப்பதால் கிரகங்களினின்று வரும் காந்த அலைகள் உடலுக்குள் நுழைய இல்லாமல் போகின்றது. விரத நாட்களில் உடல் மற்றும் மனதுக்கு தூய்மை மிக முக்கியமானதால் கிரகங்களினின்றும் நட்சத்திரங்களினின்றும் பூமிக்குவரும் காந்த சக்தி அலைகள் உடலுக்கு மிக அவசியம்.

இவ்வலைகள் உடலுக்குள் நுழைய எண்ணெய் தடையாக இருப்பதால்தான் விரதநாட்களில் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்கு விதிவிலக்கு ஏற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்பாவேயிடம் பாகிஸ்தான் அதிர்ச்சித் தோல்வி

சிம்பாவேயிற்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கும் சிம்பாவே அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் முதலாவது போட்டியில் சிம்பாவே அணி அதிர்ச்சி வெற்றி பெற்றுள்ளது. இதன்மூலம் 15 ஆண்டுகளுக்குப் பிறகு பாகிஸ்தானை வீழ்த்தியுள்ளது சிம்பாப்வே.

ஹராரே விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 244 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது விக்கெட்டுக்காக 56 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, ஒரு கட்டத்தில் 2 விக்கெட்டுக்களை இழந்து 179 ஓட்டங்களுடன் பலமான நிலையில் காணப்பட்டது. ஆனால் அதன் பின்னர் அடுத்த 4 விக்கெட்டுக்களும் 23 ஓட்டங்களுக்குள் வீழ்த்தப்பட அவ்வணி தடுமாறியது. அணியின் தலைவர் மிஸ்பா உல் ஹக் இறுதி வரை ஆட்டமிழக்காது காணப்பட்டு, பாகிஸ்தான் அணி 244 ஓட்டங்களைப் பெறுவதற்கு உதவினார்.

துடுப்பாட்டத்தில் மிஸ்பா உல் ஹக் 85 பந்துகளில் 83 ஓட்டங்களையும் மொஹமட் ஹபீஸ் 71 பந்துகளில் 70 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சிம்பாவே அணி சார்பாக பிரையன் விற்றோரி, ரென்டாய் சத்தர இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும் புரொஸ்பர் உற்செயா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

245 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி 48.2 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

முதலாவது விக்கெட்டுக்காக 107 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, இரண்டாவது விக்கெட்டுக்காக 69 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறப்பான இணைப்பாட்டங்களின் உதவியுடன் பாகிஸ்தான் அணியைத் தோற்கடித்தது.

துடுப்பாட்டத்தில் ஹமில்ற்றன் மஸகட்ஸா 104 பந்துகளில் 85 ஓட்டங்களையும் வியூசி சிபன்டா 82 பந்துகளில் 54 ஓட்டங்களையும் பிரென்டன் ரெய்லர் 59 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்களையும் சியன் வில்லியம்ஸ் 23 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 39 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக சயீட் அஜ்மல் 2 விக்கெட்டுக்களையும் ஜுனைட் கான் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக சிம்பாவே அணியின் ஹமில்ற்றன் மஸகட்ஸா தெரிவானார்.




# தங்கத்தை வென்ற தங்கங்களுக்கு வரவேற்பு இல்லை



உலகக் கிண்ண வில்வித்தைப் போட்டியில் தங்கம் வென்று நாடு திரும்பிய இந்திய வில்வித்தை அணியை வரவேற்க அச்சங்கத்தின் முக்கிய நபர்கள் யாரும் விமான நிலையம் வரவில்லை. இதனால் பெரும் எதிர்பார்ப்போடு விமான நிலையம் வந்திறங்கிய வில்வித்தை வீராங்கனைகள் பெரும் ஏமாற்றம் அடைந்தனர்.

போலந்தில் நடைபெற்ற உலகக் கிண்ண (ஸ்டேஜ் 4) வில்வித்தைப் போட்டியில் தீபிகா குமாரி, பம்பயாலா தேவி, ரிமில் புரியூலி ஆகியோர் அடங்கிய இந்திய அணி தங்கம் வென்றது. அவர்கள் 3 பேரும் செவ்வாய்க்கிழமை அதிகாலை டில்லி வந்தனர். ஆனால் அவர்களை வரவேற்க வில்வித்தை சங்கத்தின் முக்கிய நிர்வாகிகள் யாரும் விமானநிலையத்திற்கு வரவில்லை.

இது தொடர்பாக ரிமில் கூறுகையில்,

"எங்களை வரவேற்க யாரும் வராதது ஏமாற்றமளிக்கிறது. மற்ற விளையாட்டுகளை எடுத்துக் கொண்டால், வீரர்களை வரவேற்க ஏராளமானோர் விமான நிலையம் வந்திருப்பார்கள். நாங்கள் கொரியாவை வீழ்த்தி தங்கம் வென்று சாதித்திருக்கிறோம். எங்களுக்கு நல்ல வரவேற்பு அளித்திருந்தால், அது சிறப்பாக இருந்திருக்கும். ஆனாலும் பரவாயில்லை. சிறப்பாக விளையாடுவதுதான் எங்களின் பணி. எனவே தொடர்ந்து சிறப்பான பங்களிப்பை கொடுப்போம்" என்றார்.

எனினும் இந்திய வில்வித்தை சங்க தலைவர் மல்ஹோத்ரா. வில்வித்தை வீராங்கனைகளை தனது வீட்டிற்கு அழைத்து பாராட்டு தெரிவித்தார்.


உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் இந்திய அணி 219:215 என்ற கணக்கில் கொரியாவை வீழ்த்தி, தொடர்ந்து 2ஆவது முறையாக தங்கம் வென்றது குறிப்பிடத்தக்கது.

## மைக்கல் கிளார்க் தொடர்ந்தும் தலைவர்

அவுஸ்திரேலிய அணியின் தலைவராக மைக்கல் கிளார்க் தொடர்ந்தும் நீடிப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரை 3 -0 என்ற ஆட்டக்கணக்கில் இழந்த நிலையில், அவுஸ்திரேலிய கிரிக்கெட்டின் அணியின் திறமை வெளிப்பாட்டு முகாமையாளர் அடம் பிரேசர் இதனைக் கூறியுள்ளார்.

மைக்கல் கிளார்க் உலகத் தரம் வாய்ந்த வீரர் எனக் கூறியுள்ள அடம் பிரேசர், அவரின் தலைவர் பதவிக்கு எந்தவொரு அச்சுறுத்தலும் இல்லை என சுட்டிக்காட்டியுள்ளார்.



## பயிற்றுவிப்பாளர் பதவியில் மகிழ்ச்சியாக இருக்கின்றேன்

**- அன்டி ஃபிளவர்**

இங்கிலாந்து அணியின் பயிற்றுவிப்பாளர் பதவியில் மகிழ்ச்சியாக இருப்பதாக அவ்வணியின் பயிற்றுவிப்பாளர் அன்டி ஃபிளவர் தெரிவித்துள்ளார். இந்தப் பணியை மகிழ்ச்சியுடன் செய்துவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

2009ஆம் ஆண்டு இங்கிலாந்து அணியின் பயிற்றுவிப்பாளர் பதவியை ஏற்ற அன்டி ஃபிளவர் மிகச் சிறப்பான பணியை ஆற்றி வருகிறார். அத்தோடு, இம்முறை இடம்பெற்ற ஆஷஷ் தொடரை இங்கிலாந்து அணி 3 - 0 என்ற கணக்கில் கைப்பற்றவும் அவர் உதவியிருந்தார்.

அதிக வேலைப்பழு காரணமாக கடந்தாண்டு இறுதியில் இங்கிலாந்தின் ஒருநாள் சர்வதேச போட்டிகள், டுவென்டி டுவென்டி சர்வதேச போட்டிகளின் பயிற்றுவிப்புப் பதவியிலிருந்து அன்டி ஃபிளவர் விலகி, அவ்வணிகளை மேற்பார்வை செய்யும் ஒருவராக மாறினார்.

இந்நிலையில், அவுஸ்திரேலியாவில் இவ்வாண்டு இறுதியில் இடம்பெறவுள்ள ஆஷஷ் தொடரின் பின்னர் அன்டி ஃபிளவர் டெஸ்ட் பயிற்றுவிப்பிலிருந்தும் ஓய்வுபெறலாம் என இங்கிலாந்து தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், தனக்கு இப்போதைக்கு அது குறித்த எண்ணங்களெவையும் கிடையாது எனத் தெரிவித்துள்ள அன்டி ஃபிளவர், இங்கிலாந்தின் பயிற்றுவிப்பாளர் பதவியை மகிழ்ச்சியுடன் செய்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலம் குறித்து நிரந்தரமான திட்டங்களெவையும் தனக்குக் கிடையாது எனக் குறிப்பிட்ட அன்டி ஃபிளவர், நீண்டகாலம் தாண்டி சிந்திக்க விரும்பவில்லை எனக் குறிப்பிட்டார். இந்த ஆஷஷ் தொடரை 3 - 0 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி வென்றிருந்ததாகக் குறிப்பிட்ட அன்டி ஃபிளவர், அதுவே முக்கியமானது எனக் குறிப்பிட்டார்.

## இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான அவுஸ். அணி விபரம்

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 5 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடவுள்ள இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அணித் தலைவர் அலஸ்டயர் குக், இயான் பெல், ஜேம்ஸ் ஆண்டர்சன், ஸ்டூவர்ட பிராட், கிரீம் ஸ்வான் ஆகிய 5 முன்னணி வீரர்களுக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ளது.

குக் இடம்பெறாத நிலையில், இங்கிலாந்து அணிக்கு இயோன் மோர்கன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். வேகப்பந்து வீச்சாளர்கள் கிறிஸ் ஜோர்டான், ஜேமி ஓவர்டான் ஆகியோர் முதல் முறையாக இங்கிலாந்து அணிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

அந்த அணியில் இடம்பெற்றுள்ள மைக்கல் கார்பெர்ரி, பாய்ட் ரேங்கின் ஆகியோர் இதுவரை ஒருநாள் போட்டியில் விளையாடியதில்லை.

இது தொடர்பாக அந்த அணியின் தேர்வாளர் ஜெஃப் மில்லர் கூறுகையில்,

கடந்த 3 மாதங்களாக இங்கிலாந்து வீரர்கள் ஏராளமான போட்டிகளில் விளையாடியுள்ளனர். அதனால் ஏற்பட்ட கடும் பணிச்சுமையில் இருந்து மீண்டு வருவதற்காக மூத்த வீரர்களுக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ளது என்றார்.

அணி விவரம்: இயோன் மோர்கன் (தலைவர்), ரவி போபாரா, ஜோஸ் பட்லர், மைக்கேல் கார்பெர்ரி, ஸ்டீவன் ஃபின், கிறிஸ் ஜோர்டான், ஜேமி ஓவர்டான், கெவின் பீட்டர்சன், பாய்ட் ரேங்கின், பென் ஸ்டோக்ஸ், ஜேம்ஸ் டெய்லர், ஜேம்ஸ் டிரெட்வெல், லியூக் ரைட்.

## இங்கிலாந்து வீரர்களின் முட்டாள்தனம் -வோர்ன்


ஓவல் மைதானத்தின் ஆடுகளத்தில் சிறுநீர் கழித்தது மிதமிஞ்சிய முட்டாள்தனமான, திமிர் பிடித்த செயல் என ஷேன் வோர்ன் தெரிவித்தார். ஆஷஸ் டெஸ்ட் தொடரை, இங்கிலாந்து அணி 3-0 என, கைப்பற்றியது. தொடர்ந்து மூன்றாவது முறையாக ஆஷஸ் கிண்ணத்தை வென்ற உற்சாகத்தில், இங்கிலாந்து அணியினர் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது உற்சாக மிகுதியில் பீட்டர்சன், ஸ்டுவர்ட் பிராட், ஆண்டர்சன் ஆகியோர், ஓவல் மைதானத்தின் ஆடுகளத்தில் சிறுநீர் கழித்தனர். அப்போது, அவுஸ்திரேலிய வீரர்கள், பத்திரிகையாளர்கள் மைதானத்தில் தான் இருந்தனர்.

இதுகுறித்து அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வார்ன் கூறுகையில், வீரர்களின் கொண்டாட்டம் என்பது 'றெசிங் ரூமிற்குள்' இருப்பது தான் சிறந்தது. மிகவும் பழைமை வாய்ந்த ஓவல் ஆடுகளத்தில் சிறுநீர் கழித்தது, இங்கிலாந்து வீரர்களில் மிகமிஞ்சிய முட்டாள்தனமான, திமிர் பிடித்த செயல், என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க ஓபன் டென்னிஸ்



கிராண்ட் சிலாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூயார்க் நகரில் நடைபெற்று வருகிறது. உலகின் முதல் நிலை வீரரான நோவக் ஜோகோவிச் (செர்பியா) தொடக்க சுற்றில் லத்வியா வீரர் ரிச்சர்ட்சை எதிர்கொண்டார்.

இதில் ஜோகோவிச் 6-1, 6-2, 6-2 என்ற நேர்செட் கணக்கில் எளிதில் வென்று 2-வது சுற்றுக்கு முன்னேறினார்.

17 முறை கிராண்ட்சிலாம் பட்டத்தை வென்று முத்திரை பதித்த ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) முதல் சுற்றில் சுலோ வாக்கியா வீரர் ஜெம்லிகாவை எதிர் கொண்டார். இதில்பெடரர்6-3, 6-2, 7-5 என்ற நேர்செட் கணக்கில் எளிதில் வென்றார்.

மற்ற ஆட்டங்களில் 5-வது நிலை வீரர் தாமஸ் பெர்டிச் (செக்குடியரசு) 10-ம் நிலை வீரர் ரோஸ்னிக் (கனடா), டோமி ஹாஸ் (ஜெர்மனி) ஜான் இஸ்னெர் (அமெரிக்கா) ஆகியோர் வென்று 2-வது சுற்றுக்கு தகுதி பெற்றனர்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் இரண்டாம் நிலை வீராங்கனையான விக்டோரியா அசரென்கா (பெலாரஸ்) தொடக்க சுற்றில் ஜெர்மனியை சேர்ந்த டினாக்கை எதிர்கொண்டார். இதில் அசரென்கா 6-0, 6-0 என்ற நேர்செட் கணக்கில் எளிதில் வென்று 2-வது சுற்றுக்கு முன்னேறினார்.

முன்னாள் நம்பர் ஒன் வீராங்கனையும், தற்போது 6-வது வரிசையில் இருப்ப வருமான கரோலின் வோஸ்னியாக்கி (டென்மார்க்) தொடக்க சுற்றில் வெற்றி பெற்றார். அவர் சீன வீராங்கனை யங்-துவானை 6-2, 7-5 என்ற கணக்கில் வீழ்த்தினார்.

மற்ற ஆட்டங்களில் 4-ம் நிலை வீராங்கனை சாரா இரானி (இத்தாலி), அனா குவானோவிக் (செர்பியா) குஸ்னெட்சோவா (ரஷியா) ஆகியோர் வென்று 2-வது சுற்றுக்கு முன்னேறினார்கள்.

11-ம் நிலை வீராங்கனையும், 2011-ம் ஆண்டு சாம்பியனுமான சமந்தா ஸ்டோசுர் (ஆஸ்திரேலியா) தொடக்க சுற்றிலேயே அதிர்ச்சிகரமாக தோற்றார். அவர் 7-5, 4-6, 4-6 என்ற கணக்கில் அமெரிக்காவை சேர்ந்த புதுமுக வீரர் விக்டோரியாவிடம் தோற்றார்.

# சிறுநீர் கழித்தது உண்மைதான்; மன்னிப்பு கேட்ட இங்கிலாந்து வீரர்கள்




ஆஷஸ் தொடரை வென்ற உற்சாகத்தில் மைதானத்தில் சிறுநீர் கழித்தது தவறான ஒன்றுதான் என இங்கிலாந்து வீரர்கள் மன்னிப்பு கேட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் தொடரை 3-0 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி வென்றதைத் தொடர்ந்து லண்டன் ஓவல் மைதானத்தில் அமர்ந்து கொண்டாடினர். அப்போதுதான் பிட்ச்சில் சில வீரர்கள் சிறுநீர் கழித்து அசிங்கமாக நடந்து கொண்டனர்.

இந்த நிலையில் தங்களது செயலுக்காக இங்கிலாந்து வீரர்கள் மன்னிப்பு கோரியுள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில், எங்களது கொண்டாட்டத்தில் கிரிக்கெட் போட்டிக்கும், மைதானத்திற்கும், கிரிக்கெட் ரசிகர்களுக்கும் அவமரியாதை ஏற்படுத்தும் எந்தவிதமான உள்நோக்கமும் இல்லை.

நாங்கள் கிரிக்கெட்டை நேசிக்கிறோம், கிரிக்கெட்டுக்கு மரியாதை செலுத்துகிறோம்.


எதிராளிகளையும் நேசிக்கிறோம், நாங்கள் விளையாடும் மைதானத்தையும் நேசிக்கிறோம்.

இருப்பினும் எங்களில் சிலரின் நடதை பொருத்தமற்றது என்பதை ஒத்துக் கொள்கிறோம்.

அவர்களின் நடத்தை யார் மனதையாவது புண படுத்தியிருந்தால் நாங்கள் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறோம்.

இது எதேச்சையாக நடந்ததே தவிர திட்டமிட்டு எதுவும் நடக்கவில்லை என்று கூறியுள்ளனர்.

இதற்கிடையே இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் கிரீம் ஸ்வான், எங்களது வீரர்கள் மைதானத்தின் நடுவே பிட்ச் பகுதியில் அமர்ந்து பீர் சாப்பிட்டது உண்மைதான் என்றும், இருட்டாக இருந்ததால் சரியாக தெரியாமல் போயிருக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்.



நேற்றைய தினம் பிற்பகல் நயினை தெற்கு கடற்கரை பரப்பில் இனந்தெரியாத ஆண் ஒருவரின் சடலம் கரை ஒதுங்கியுள்ளதைப் படத்தில் காணலாம்.

## அச்சுறுத்தல் தொடர்ந்தால்....

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே ஆளும் கட்சி வேட்பாளர்களான சர்வானந்தன், றெமிடியஸ், அகிலதாஸ், பொன்னம்பலம் ஆகியோர் இணைந்து மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது அவர்கள் மேலும தெரிவிக்கையில்,

ஆளும் கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களான எமக்கே அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன.

சுவரொட்டிகள் அகற்றப்படுகின்றன.

சுவரொட்டிகள் மீது கழிவு ஒயில் ஊற்றப் படுகிறது.

நேரடியாகவும் மறைமுகமாகவும் அச்சுறுத்தப்படுவதும் தொடர்கின்றன.

இந்நிலையில் சாவகச்சேரியில் ஆளும் கட்சி வேட்பாளர் சர்வானந்தனை இலக்கு வைத்து நேற்று முன்தினம் இரவு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு ஆளும் கட்சி வேட்பாளர்களுக்கே உயிர் அச்சுறுத்தல் விடும் நிலையில் உள்ள வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதா அல்லது அதிலிருந்து விலகிக் கொள்வதா என்பது தொடர்பில் பொலிஸாரின் நடவடிக்கையினை அடுத்த தீர்மானிக்க முடியும்.

ஆனால் வேட்பாளர் அங்கஜனின் தந்தையான இராமநாதன் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன்நிறுத்தப்படாவிட்டால் தேர்தலில் இருந்து விலகுவோம். இவ்வாறு வேட்பாளர்கள் தெரிவித்தபோது இராமநாதன் கைது செய்யப்படவில்லை. அவரிடம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வந்தனர்.

ஆயுதக் கலாசாரத்தை நாம் விரும்பவில்லை. ஜனநாயக முறைப்படி இடம்பெறும் தேர்தலையே எதிர்கொள்ள விரும்புகின்றோம்.

அண்மையில் தாக்குதலுக்குள்ளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் தம்பிராசாவின் உண்ணாவிரதப் போராட்டத்திற்கும் எமது ஆதரவினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணை இடம்பெற வேண்டும் தாக்குதல்மேற் கொண்டவர்கள் கைது செய்யப்பட வேண்டும்.

ஆயுத அடக்குமுறைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட வேண்டுமென அவர்கள் தெரிவித்தனர். (செ-6)

## என்ர பிள்ளை...

இடம்பெற்றது. இதன் போது பல ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் கவனயீர்ப்பு போராட்டத்தில் பங்கு கொண்டிருந்த வயோதிபத்தாய் தனது மகனை தேடி கண்டுபிடித்து தருமாறு வேண்டுகோள் விடுத்தபடி அல்லைப்பிட்டியில் வெளிப்படும் மனித எலும்புக்கூடுகள் தொடர்பாகவும தெரிவித்து அழுது புலம்பினார். (செ-4,6)

## இ.போ.ச.பேருந்து....

தந்தையும் மகனும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந் நிலையிலேயே இருவரும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் வைத்தியசாலையில உயிரிழந்துள்ளனர்.

இதில் தொண்டைமானாறு பகுதியைச் சேர்ந்த மோகனரஞ்சன் (வயது 37) என்பவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

இந் நிலையில் அவரது மகனான முகிலன் (வயது 10) என்ற சிறுவன் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

இதேவேளை இ.போ.ச. பேருந்து சாரதியை பொலிஸார் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(நேற்றைய தினம் வலம்புரியில் 19ஆம் பக்கம் வெளியாகிய இது தொடர்பான செய்தியில் இ.போ.ச. பேருந்துடன் விபத்து என குறிப்பிடுவதற்கு பதிலாக தனியார் பேருந்துடன் மோதி விபத்து என தவறுதலாக தெரிவிக்கப்பட்டுள்ளது.) (செ-6, 60, 24)

## நவிபிள்ளையை....

முடித்துக் கொள்வதற்கு தயாரென்றும் பொதுமக்கள் தொடர்பாடல் மற்றும் பொது மக்கள் உறவுகள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

மருதானையில் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இராவணன் முதல் விஜயகுமாரவிற்கு இடம்கொடுத்து குவேனியை திருமணம் முடித்துகொடுத்தவர்கள் நாம், நவநீதம் பிள்ளை விரும்பினால் அவரை நான் திருமணம் முடித்துகொள்வதற்கு தயாராகவே இருக்கின்றேன் என்றார்.

சர்ச்சைக்குரிய செயற்பாடுகளையும் கருத்துக்களையும் அமைச்சர் மேர்வின் சில்வா இதுபோன்ற பல தடவைகள் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## வேட்பாளர் மீது....

தாக்குதலுக்கு உள்ளான வேட்பாளர் யாழ். போதனா வைத்திய சாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிறிலங்கா மக்கள் கட்சியின் முதன்மை வேட்பாளர் திலக் உடுகம என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

## பகிரங்க விவாதத்திற்கு....

பொது மேடை ஒன்றில் உங்கள் கருத்தை நீங்களும் எமது கருத்தை நானும் தமிழ் மக்களிடம் எடுத்துச் சொல்வோாம். மேலைநாடுகளில் இவ்வாறானதொரு நாகரிகமான பிரசார நடைமுறை உண்டு என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

ஒரே மேடையில் இருவேறு கருத்துக்கள் கொண்டவர்கள் இருந்து தமது கருத்துக்களை மக்கள் முன்னிலையில் வைக்கும் பக்குவம் இங்கு எவருக்கும் பழக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

கொண்ட கொள்கையில் உறுதியும் உண்மையும் உள்ளது என்று நம்புபவர்களுக்கு இது சாத்தியம்.

நான் ஏற்றிருக்கும் கொள்கை உண்மையானது என்ற உறுதியும் நம்பிக்கையும் எனக்கு உண்டு. மதிப்புக்குரிய உங்களுக்கும் அவ்வாறு இருந்தால் நாம் பொது மேடையில் தோன்ற முடியும்.

இந்த பகிரங்க அழைப்பை நீங்கள் ஏற்றுக் கொள்ளவீர்கள் எதிர்கால அரசியலாளர்களுக்கு நாம் வழிகாட்டியாக இருந்தவர்களாவோம்.

தனித்தனியாக பலமேடைகளில் ஒருவரை ஒருவர் சாடுவது அர்த்தமற்றது அது உங்களைப் போன்றவர்களுக்கும் என்னைப் போன்றவர்களுக்கும் பொருத்தமானதல்ல என்பது எனது பணிவான அபிப்பிராயம்.

எமது இப் பகிரங்க வேண்டுகோளை ஏற்பீர்களாயின் இது தொடர்பான மேலதிக ஏற்பாடுகளை இணைந்து செய்வதற்கு என்னை தொடர்புகொள்வீர்கள் என நம்புகிறேன். இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் எஸ்.தவராசா விடுவித்துள்ள கோரிக்கையில் தெரிவித்துள்ளார். (ந)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாடு திரும்பினார்....

பினார்.

சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான விசேட விமானத்தின் மூலம் ஜனாதிபதியும் தூதுக்குழுவினரும் நாடு திரும்பியுள்ளனர்.

ஜனாதிபதியின் விஜயத்தின் போது இலங்கைக்கும் பெலாரஸ் நாட்டுக்கும் இடையில் 7 உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# தம்பிராசா மீண்டும் உண்ணாவிரதம்

## பொலிஸாரின் உறுதிமொழியை அடுத்து கைவிடப்பட்டது

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளரான கந்தப் பர் முத்தையாபிள்ளை தம்பிராசா யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

நேற்றுப்பிற்பகல் 1.30 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட வேட்பாளர் தம்பிராசாவின் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆளும் தரப்பு வேட்பாளர்களும் ஆதரவு தெரிவித்திருந்தனர்.

கடந்த 20-ம் திகதி மாலை 5 மணியளவில் யாழ்.மின்சார நிலைய வீதியில் வைத்து வேட்பாளர் தம்பிராசா மீதும் அவர் பயணித்தவாகனம் மீதும் இனந் தெரியாத சுமார் 10 இற்கும் மேற்பட்ட நபர்கள் துப்பாக்கிமுனையில் தாக்குதல் மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றனர்.

இருப்பினும் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி சார்பில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளர் அங்கஜனின் தந்தையான இராமநாதன் மீது வேட்பாளர் தம்பிராசா குற்றஞ் சாட்டியிருந்ததோடு தனக்கு துப்பாக்கியைக்காட்டி உயிர் அச்சுறுத்தல் விடுத்ததாகவும் தெரிவித்திருந்தார்.

இதேவேளை வேட்பாளர் தம்பிராசாவினால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை முற்றாக மறுத்த அங்கஜன் இராமநாதன், இது திட்ட மிடப்பட்டு சோடிக்கப்பட்ட சம்பவம் எனவும் தன்மீதும் தந்தை மீதும் அபாண்டமாக குற்றம்சாட்டி வாக்கு சேகரிக்க முயற்சிக்கின்றார் எனவும் தெரிவித்திருந்தார்.

இந் நிலையில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்த வேட்பாளர் தம்பிராசா யாழ்.பொலிஸ் நிலையம் முன்பாக கடந்த 25ஆம் திகதி வீதியில் அமர்ந்திருந்த கவனயீர்ப்புப் போராட் டத்தை நடத்தி விசாரணைகளை துரிதப்படுத்த கோரியிருந்தார். இருப்பினும் உரிய விசாரணைகள் எதுவும் மேற்கொள்ளப்பட வில்லை எனத் தெரிவித்தும்,

நீதி நியாயமான தேர்தல் இடம்பெற வேண்டும், வேட்பாளர்கள் அச்சுறுத்தல்களுக்கும் தாக்குதல் களுக்கு உள்ளாக்கப்படுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தி, தனது உண்ணாவிரதப் போராடடத்தை யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக நேற்று ஆரம்பித்திருந்தார் எனவும்,

நேற்றிரவு 9.45 மணியளவில் அங்கு வந்த யாழ்.பிரதி பொலிஸ்மா அதிபர் இந்து கருணாரட்ணவினால் விசாரணைகள் தொடர்பான உறுதிமொழியை அடுத்து தம்பிராசா தனது உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார். (செ-6)


அரிய வாய்ப்பு 02/09/2013 வரை மட்டுமே

2 இலட்சம் வேதனம்,
உணவு, இருப்பிடம் இலவசம்

ஐரோப்பிய நாடான (Holland) நெதர்லாந்தில்
படிக்க, உழைக்க சட்ட ஆலோசனை

எல்லா நாட்களும் காலை 8 முதல் இரவு 6.30 வரை

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090
(C-4499)






தையலுக்கு ஆட்கள் தேவை

பெண்களுக்கான ஆடை தைப்பதில் முன் அனுபவமுள்ளவர்கள் தேவை.
தொடர்பு: அனோஜ் தையலகம்
புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில்.
T.P.: 0785409081
(3811)



நல்லூர் உற்சவகால அதிரடிச் சலுகை
கலோரி இழப்பு
இதயத்துடிப்பு
நவீன தொழில்நுட்பத்துடன்
8 வகையான
OrbiTrac
மற்றும் பல உடற்பயிற்சி சாதனங்கள்
13,900/- முதல்
21,800/- வரை
OrbiTrac இற்கு Scale இலவசம் 06.09.2013 வரை மட்டுமே Free






நேரம்
வேகம்
ஒலிம்பியா ஸ்போட்ஸ்
தொ.பே: 021 222 3490, Hotline: 0778060267
இல.06 ஜும்மா பள்ளிவாசல் லேன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(சி-4501)



திருமணத் தேவைக்கான
கார் வாடகைக்கு விடப்படும்

தொடர்புகளுக்கு:
0771950228,
021 222 8984
0776152992





இல.44, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(C-4498)



af ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரான்ஸ், கனடாவுக்கு செல்வோர், மாணவர்கள் மற்றும் மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் படிக்கலாம். (கிளிநொச்சி, முல்லைத்தீவை சேர்ந்த வர்களும் இங்கு படிக்கிறார்கள்). France இல் தொடர்ந்து French படிப்பதற்கும் Embassy விடயங்களுக்கும் எமது நிறுவனத்தின் Certificate உதவுகின்றது. ஏனெனில் உலகில் பிரெஞ் கற்பிப்பதற்கு France அரசாங்கம் அங்கீகரிக்கும் ஒரே நிறுவனம் "AF" மட்டுமே இது ஓர் அரிய சந்தர்ப்பம். உடன் பதிவு செய்யுங்கள்.

புதிய வகுப்பு :விரைவில்...

61, Kachchery-Nallur Road,Jaffna. T.P.:0212228093

கச்சேரி பஸ் தரிப்பிடத்தை அடுத்துவரும் சந்தியில் அமைந்துள்ள மாடிக் கட்டிடம்
(3691)



யாழ்ப்பாணத்தில் 09.11.2013 இல் நடைபெறும்
பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புகள்

IELTS BRITISH COUNCIL

We are "IELTS Registration Center for British Council"





- Strategies and techniques are taught to gain a higher score
- All 4 skills are paid equal attention
- Special attention to weak students
- 60 hours of learning in 8 weeks
- Affordable charges

* கடந்த காலங்களில் எமது கல்லூரியில் கல்வி கற்றவர்கள் Band 8.5 வரை பெற்றிருக்கிறார்கள்
* இலங்கையில் IELTS பயிற்சி நிலையங்களில் தலைசிறந்த நிலையங்களில் ஒன்றென British Council ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிலையம் ஆகும்.
* நீங்கள் IELTS பரீட்சை எடுப்பதற்கு விரும்புவீர்களானால், போதிய ஆங்கில அறிவு உங்களிடம் இல்லையேல் முதலில் PET பாடநெறியைப் பின்பற்றிய பின் IELTS வகுப்பில் சேர்ந்தால் கற்க இலகுவாக இருக்கும்

வகுப்புக்கள் - 31.08.2013 ஆரம்பம்

Course Schedule

| | Saturday&Sunday | Mon,Tues,Wed,Thur |
|---|---|---|
| Duaration | 10 weeks | 10 weeks |
| Time | 8.30-11.30 | 4.00-6.00 - 6.00-8.00 |

கடந்த 10 வருடங்களாக
No. 143 - Adiyapatham Road,
Thirunelveli. யில் பணியாற்றி
இப்போது No. 192 Navalar Road
இல் பணியாற்றுகின்றோம்.

For Registration and Further details Contact
BRITISH COLLEGE OF ENGLISH
No. 192, Navalar Road, Jaffna.
(பெருமாள் கோவிலுக்குச் சமீபமாக)
Tel : 021 222 0384 - 077 880 3887



இலவச வைத்திய ஆலோசனை

வல்வெட்டித்துறையில்....


பொது வைத்திய நிபுணர் Dr.S.கேதீஸ்வரன் அவர்களால்
வல்வெட்டித்துறை மாதுஜன் மருத்துவ ஆலோசனை நிலையத்தில்
எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மட்டும்...
காலை 8 மணியில் இருந்து பி.ப. 4மணிவரை

பதிவுகளை மேற்கொள்ள
021 2055105
0774656428


மாதுஜன் மருத்துவ ஆலோசனை நிலையம்

யாழ்ப்பாணத்தின் தலைசிறந்த வைத்திய நிபுணர்களை
ஒன்றிணைத்த தினசரி வைத்தியசேவை.

வருகை தரும் வைத்திய நிபுணர்கள்
- குழந்தை வைத்திய நிபுணர்கள்
- சத்திர சிகிச்சை நிபுணர்கள்
- தோல் வைத்திய நிபுணர்கள்
- கண் வைத்திய நிபுணர்கள்
- காது, மூக்கு, தொண்டை நிபுணர்கள்
- உளநல வைத்திய ஆலோசனை
- பொது வைத்திய நிபுணர்கள்
- மகபேற்றியல் நிபுணர்கள்
- இதய சிகிச்சை நிபுணர்கள்


'First to Care'


ECG ஸ்கான்
இரத்தப் பரிசோதனை

Mathujan Medical Consulting Center
மாதுஜன் மருத்துவ ஆலோசனை நிலையம்
மருதடி வல்வெட்டி, யாழ்.வீதி, வல்வெட்டித்துறை.
தொ.பே: 021 205 5105
(சி-4491)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.